REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

2024 செப்டெம்பர் 2 திங்கட்கிழமை
# தினகரன்
THINAKARAN 92 தினகரன்
வரு. 92 இல. 209 | Monday 02, September, 2024 | 20பக்கங்கள் | 50/-

## பஸ் கட்டணங்களில் மாற்றமில்லை



எரிபொருள் விலை மாற்றத்துக்கு அமைய பஸ் கட்டணங்களில் மாற்றம் மேற்கொள்ளப் பட மாட்டாதென இலங்கை தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

குறிப்பிட்ட விலைச் சூத்திரத்தின் அடிப்படையில் பஸ் கட்டணங்கள் 06

## ஐ.ம.ச நளின் குணவர்த்தன, ஸ்ரீல.மு.கா பஹார்தீன் ஜனாதிபதி ரணிலுடன் இணைவு

ஐக்கிய மக்கள் சக்தி கட்சியின் சேருவில தொகுதி அமைப்பாளர் நளின் குணவர்த்தன, திருகோணமலை கடவத் சதர பிரதேச சபையின் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் முன்னாள் மாநகர சபை உறுப்பினர் ரீ. பஹார்தீன் ஆகியோர் ஜனாதிபதி ரணிலுக்கு ஆதரவு தெரிவிப்பதாக அறிவித்துள்ளனர்.

திருகோணமலை உவர்மலை விளையாட்டரங்கில் (31) நடைபெற்ற "இயலும் ஸ்ரீலங்கா" வெற்றிப் பேரணியில் கலந்துகொண்ட இவர்கள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு தெரிவிக்க இணைந்து கொண்டனர்.

### மாதாந்த விலைச் சூத்திர திருத்தம்

## பெற்றோல், டீசலின் விலைகள் குறைப்பு

**மண்ணெண்ணெய் மாற்றமில்லை**

மாதாந்த எரிபொருள் விலைச் சூத்திரத்தின் பிரகாரம் நேற்று நள்ளிரவு முதல் எரிபொருள் விலைகள் திருத்தம் செய்யப்பட்டுள்ளன.

இதன்படி இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் தனது எரிபொருட்களின் விலைகளையும் திருத்தம் செய்துள்ளது. இவ்விலைத் திருத்தத்தின் படி 344 ரூபாவாக காணப்பட்ட ஒக்டேய்ன் 92 ரக பெற்றோல் லீற்றரின் விலை 12 ரூபாவினால் குறைக்கப்பட்டு, அதன் புதிய விலை 332 ரூபாவாக அறிவிக்கப்பட்டுள்ளது. 06

## அலங்காரக் கந்தனின் தேர்த்திருவிழா



படம்: மயூரப் பிரியன்

வரலாற்று சிறப்பு வாய்ந்த நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் தேர்த்திருவிழா, நேற்று (01) மிகவும் சிறப்பாக நடைபெற்றது. கடந்த 09 ஆம் திகதி நல்லூர்க் கந்தனின் வருடாந்த மகோற்சவம் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. இன்று (02) தீர்த்தோற்சவம் மற்றும் கொடியிறக்கத்துடன் திருவிழா நிறைவு பெறுகிறது. 06

### தேர்தலில் சஜித்துக்கு ஆதரவு

# தமிழரசுக் கட்சியின் தீர்மானம் அல்ல

### மாவை சேனாதிராஜா அறிவிப்பு



ஜனாதிபதி தேர்தலில் இலங்கை தமிழரசு கட்சி ஐக்கிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாசாவுக்கு ஆதரவளிக்க தீர்மானித்துள்ள அறிவிப்பு கட்சியின் முடிவல்ல என மாவை சேனாதிராஜா நேற்று அறிவித்துள்ளார்.

தமிழரசுக் கட்சியின் நிலைப்பாடு தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே இதனை கூறினார். ஐக்கிய மக்கள் சக்தி தலைவர் சஜித்துக்க ஆதரவு வழங்குவதாக தமிழரசுக்கட்சியின் அறிவிப்பு இதுவரை தனக்கு உத்தியோகபூர்வமான அறிவிப்பு எதுவும் கிடைக்கவில்லையென மாவைசேனாதிராஜா சுட்டிக்காட்டினார்.

இதனை தமிழரசுக்கட்சியின் உத்தியோகபூர்வமான அறிவிப்பு என்று ஏற்றுக்கொள்ள முடியாதென்றும் மாவைசேனாதிராஜா திட்டவட்டமாக அறிவித்தார். அத்துடன் இது ஒரு சிலரின் தனிப்பட்ட முடிவெனவும் கூறினார்.

இந்த கூட்டத்தில் கட்சியின் முக்கியஸ்தர்களான பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் ஆகியோ பங்கேற்கவில்லை.

கட்சியின் மற்றுமொரு முக்கியஸ்தர்களான, முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள் யோகேஸ்வரன் மற்றும் ஸ்ரீநேசன் ஆகியோரும் கலந்துகொள்ளவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

## சஜித்துக்கு இந்த தேர்தலில் வெற்றி பெற முடியாது



### தப்பி ஓடிய சஜித், அநுரவும் தேர்தலில் போட்டியிடுவது எனது பொருளாதார ஸ்திரத்தன்மையாலேயே

### கெக்கிராவயில் ஜனாதிபதி தெரிவிப்பு

நாட்டில் இன்று நான் ஏற்படுத்திய பொருளாதார ஸ்திரத்தன்மையின் காரணமாகவே அன்று பொருளாதார சவாலுக்கு பயந்து ஓடிய சஜித்தும் அநுரவும் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் சந்தர்ப்பம் தற்போது கிடைத்துள்ளதாக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்.

இந்தத் தேர்தலில் சஜித்தால் வெற்றிபெற முடியாது எனவும், சஜித்துக்கு அளிக்கும் ஒவ்வொரு வாக்கும் அநுரவிற்கு வழங்கப்படும் வாக்களாகும் என ஐக்கிய தேசியக் கட்சியினரிடம் தெரிவித்த ஜனாதிபதி, ஐக்கிய தேசியக் கட்சியின் கொள்கைகளை காட்டிக்கொடுக்க வேண்டாம் எனவும் கோரிக்கை விடுத்தார்.

கெக்கிராவ பொது விளையாட்டரங்கில் (01) நடைபெற்ற "இயலும் ஸ்ரீலங்கா" வெற்றிப் பேரணியில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதனைக் குறிப்பிட்டார்.

இந்த ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் வெற்றியை உறுதிப்படுத்தும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்த மக்கள் பேரணியில் பெருமளவான மக்கள் கலந்துகொண்டனர்.

வீடு இடிந்து வீழ்ந்தால் பலமான அடித்தளத்தில் புதிய கட்டிடம் கட்டப்படும் என தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, முன்னைய அஸ்திவாரத்தை வைத்து அதனைக் நிர்மாணிப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை இனங்கண்டு கொள்வதாகவும் தெரிவித்த ஜனாதிபதி, அந்த வீட்டை நிர்மாணிக்கவே இம்முறை மக்கள் ஆணையைக் கோருவதாகவும் தெரிவித்தார்.

இருக்கும் வீட்டினையும் எரிப்பதற்கே சஜித் மற்றும் அநுர வாக்குகளைக் கோருவதாகச் சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, இவ்வருட ஜனாதிபதித் தேர்தலில் தான் பெறும் 06

## சுமந்திரனின் ஆதரவு சஜித்துக்கு அரியநேத்திரன் விலக வேண்டும்



வவுனியா விசேட நிருபர்

ஜனாதிபதி தேர்தலில் தமிழரசுக் கட்சி சஜித் பிரேமதாசவுக்கு ஆதரவு வழங்க தீர்மானித்துள்ளதுடன், பொதுவேட்பாளர் அரியநேத்திரன் போட்டியிலிருந்து விலக வேண்டுமெனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக கட்சியின் ஊடகப் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார். இலங்கை தமிழரசுக் கட்சியின் மத்திய குழுக் கூட்டம் நேற்று (01) பல மணி நேரமாக வவுனியாவிலுள்ள விருந்தினர் விடுதி ஒன்றில் நடைபெற்றது. அதன்பின் நடைபெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு 06

## இனவாதம் இல்லாத சுபிட்சமான ஒரு வாழ்க்கையை உருவாக்குவோம்

### எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச



கோட்டாபய ராஜபக்சவின் ஆட்சிக்காலத்தில் தகனம் செய்வதா? அடக்கம் செய்வதா? என்ற பிரச்சினை எழுந்த போது மக்களின் வாக்குகளால் தெரிவு செய்யப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் தங்களது மத கலாசார, மக்களுடைய பண்பாட்டு விடயங்களை மறந்து தனிப்பட்ட இலாபத்துக்காகவும், வரப்பிரசாதங்களுக்காகவும் மதத்தையும், 06

### தயாசிறி ஜயசேக்கர எம்.பியிடமிருந்து

## ரூ. 200 மில். நஷ்டஈடு கோரி அமைச்சர் பிரசன்ன கடிதம்



உண்மைக்கு புறம்பான அறிக்கைகளை வெளியிட்டமைக்காக 200 மில்லியன் ரூபா நஷ்டஈடாக வழங்கப்பட வேண்டுமென பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேக்கரவுக்கு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க கோரிக்கை கடிதமொன்றை அனுப்பிவைத்துள்ளார்.

14 நாட்களுக்குள் இழப்பீடு வழங்காவிட்டால்,வழக்கு தொடரப்படுமென்றும் அந்தகோரிக்கை கடிதத்தில் அமைச்சர் பிரசன்ன குறிப்பிட்டுள்ளார். தாம் பெற்ற மதுவரி அனுமதிப் பத்திரத்தை கம்பஹா, மாகேவிட்ட பிரதேசத்தில் வசிக்கும் மதுவரி 06



03

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில்
**இதுவரை 1,745 முறைப்பாடுகள் தேர்தல் ஆணைக்குழுவில் பதிவு**



03

**கிழக்கில் ரணிலுக்கு ஆதரவான பிரசாரத்தில் வெள்ளை குதிரைகள்**



03

**லிட்ரோ சமையல் எரிவாயு விலைகளில் மாற்றமில்லை**

## ஐ.ம.சக்தி தேர்தல் விஞ்ஞாபனத்தில் சமஷ்டி உள்வாங்கப்பட வேண்டும்

### தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி சஜித்துக்கு நிபந்தனை



ஒற்றையாட்சியை இல்லாதொழித்து சமஷ்டியை அறிமுகப்படுத்தி இந்த நாட்டில் அனைத்து இனங்களையும் ஒன்றிணைப்பதன் மூலமே நாட்டைக் கட்டியெழுப்ப முடியும் என்ற உண்மையை தேர்தல் விஞ்ஞாபனத்தில் உள்ளடக்குமாறு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவுக்கு அறிவித்துள்ளது.

கடந்த மூன்று மாதங்களுக்கும் மேலாக ஜனாதிபதித் தேர்தலைப் புறக்கணிக்குமாறு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, 06

## தொழில்சார் பயிற்சிகளுக்காக இரவு நேர பயிற்சிக் கூடங்கள்

### தேசிய மக்கள் சக்தி அரசில் நிறுவத் திட்டம் –அநுர குமார



நாட்டில் தச்சுத் தொழில் உள்ளிட்ட பல்வேறு துறைகளுக்கு தொழில் சார் பயிற்சிகளை வழங்க தமது அரசாங்கம் செயற்படும் என தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுர குமார திஸாநாயக்க அவர் தெரிவித்துள்ளார். இதற்காக இரவு நேரத் தொழில் பயிற்சிக் கூடங்களை நிறுவத் திட்டமிட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். தேசிய மக்கள் சக்தியின் 06

## ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேர்தல் விஞ்ஞாபனம் இன்று வெளியீடு



ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேர்தல் விஞ்ஞாபனம் இன்று 02ஆம் திகதி வெளியிடப்படுமென கட்சி தலைமையகம் அறிவித்துள்ளது.

சவால்களை முறியடித்து எதிர்கால சந்ததியினரின் நாளைய சகல அம்சங்களிலும் அபிவிருத்தி செய்யும் தொலைநோக்கு பார்வையை உள்ளடக்கியதாக தேர்தல் விஞ்ஞாபனம் தயாரிக்கப்பட்டுள்ளதாக கடசிதெரிவித்துள்ளது.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான சட்டத்தரணி நாமல் ராஜபக்ஷவினால் முன்வைக்கப்பட்டதேர்தல் விஞ்ஞாபனத்தின் அசல் வடிவம் கடந்த 30ஆம் திகதி 06

### ஜனநாயகத்தை மதிப்பவர்களாயின்

## ஜனாதிபதியாக மீண்டும் ரணிலையே ஏற்க வேண்டும்



இலங்கை மக்கள் ஜனநாயகத்தை மதிப்பவர்களாக இருந்தால் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கே ஜனாதிபதி தேர்தலில் வாக்களிக்க வேண்டுமென, முன்னாள் அமைச்சர் பஷீர் சேகுதாவூத் தெரிவித்தார்.

இது தொடர்பாக இவர் நேற்று (01) வெளியிட்ட ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, நாட்டை அடுத்த ஐந்து வருடங்கள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கே கொடுத்து பார்க்க 06

92 ஆண்டுகால பாரம்பரியத்துடன் தமிழ் பேசும் மக்களின் தேசிய குரல்

# இனவாதம், மதவாதம் தேவையில்லை: பொருளாதாரத்தை பற்றி சிந்திப்போம்!

## காத்தான்குடி மக்கள் பேரணியில் ஜனாதிபதி



கொரோனா வைரஸ் தொற்றினால் உயிரிழந்த முஸ்லிம்களின் ஜனாஸாக்களை அடக்கம் செய்வது தொடர்பில் ஏற்பட்ட பிரச்சினையால் மக்கள் எதிர்கொண்ட சிரமங்களுக்கு வருத்தம் தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, தனிப்பட்ட விருப்பு வெறுப்பின் பிரகாரம் உடல்களை அடக்கம் செய்வதற்கோ அல்லது தகனம் செய்வதற்கோ அனுமதிக்கும் புதிய சட்டம் கொண்டு வரப்படும் என்றும் தெரிவித்தார்.

அத்துடன், முஸ்லிம்களின் ஜனாஸாக்களை தகனம் செய்வதற்கு அரசாங்கத்திற்கு பரிந்துரைத்த தரப்பினரின் பொறுப்புக்கூறல் தொடர்பில் ஆராய்வதற்காக குழுவொன்று நியமிக்கப்படும் எனவும், இதனால் அநீதிக்கு உள்ளான குடும்பங்களுக்கு நஷ்டஈடு வழங்கப்படும் எனவும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

காத்தான்குடி பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் (31) மாலை நடைபெற்ற 'இயலும் ஸ்ரீலங்கா' வெற்றிப் பேரணியில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதனைக் குறிப்பிட்டார். மக்கள் பேரணியில் உரையாற்றிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, ஒரு நாடாக முன்னோக்கிச் செல்வதற்கு இனவாதம் மற்றும் மதவாதம் அவசியமில்லை எனத் தெரிவித்தார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேலும் குறிப்பிட்டதாவது:

"நாடு வீழ்ச்சியடைந்த போது பொறுப்பை ஏற்க முடியாவிடின் எப்படி தற்பொழுது தலைமைப் பொறுப்பை ஏற்க முடியும்?

மருந்து இல்லாமல் எரிபொருள் மற்றும் சமையல் எரிவாயு இன்றி, பணம் இன்றி அன்று மக்கள் கஷ்டப்பட்டதை மீண்டும் ஞாபகப்படுத்தத் தேவையில்லை. காத்தான்குடியில் கடைகள் மூடப்பட்டிருந்ததா? திறந்திருந்ததா? என்று உங்களுக்குத் தெரியும். இதனால் மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டார்கள். அன்று சஜித் பிரேமதாசவோ, அநுரவோ உங்களுக்கு உதவ முன்வரவில்லை. அரசை பொறுப்பேற்று பொருளாதாரத்தை சீரமைக்க அவர்கள் தயாராக இருக்கவில்லை.

ஆனால் பொறுப்பை ஏற்று பொருளாதாரத்தை சீர்செய்து கடைகளைத் திறக்க நடவடிக்கை எடுத்தேன். தேவையான நேரத்தில் வராமல் இன்று வந்து என்ன பயன்? கஷ்டத்துடனேனும் நாம் பொருளாதாரத்தை சீரமைத்துள்ளோம்.

விருப்பமின்றியேனும் கடினமான முடிவுகளை எடுக்க நேரிட்டது. வரியை அதிகரிக்க நேர்ந்தது. IMF ஒப்பந்தத்தின்படி பணம் அச்சிடவோ, கடன் பெறவோ முடியாது. இன்று மக்களின் கைகளில் பணம் இருக்கிறது. அரச ஊழியர்களின் சம்பளம் உயர்த்தப்பட்டது. பொருட்களின் விலைகள் குறைந்தன. 370 ரூபாவாக இருந்த டொலரின் பெறுமதி தற்பொழுது 300 ரூபாவாகக் குறைந்துள்ளது. அடுத்த வருடம் பொருட்களின் விலைகள் குறையும். ரூபாவின் பெறுமதியை தக்க வைக்க நடவடிக்கை எடுத்து வருகிறேன். சஜித்தும் அனுரவும் சொல்வது போல வரியைக் குறைத்தால் அரசின் வருமானம் குறையும். பொருளாதாரம் வீழ்ச்சியடையும். கடைகளை மூட நேரிடும். மீளத்திறக்க முடியாத நிலை ஏற்படும். அதனை விரும்புகிறீர்களா?

அதேபோன்று இளைஞர், யுவதிகளுக்கு தொழில்வாய்ப்புகளை உருவாக்க வேண்டும். இந்தப் பிரதேசத்தை முன்னேற்ற வேண்டும். இன்று சிங்களப் பிரச்சினை, முஸ்லிம் பிரச்சினை, தமிழ்ப் பிரச்சினை எதுவும் கிடையாது. அதனை ஒரு பக்கமாக வைப்போம். எந்த மதத்தைச் சேர்ந்தவராக இருந்தாலும் பொருளாதாரம் மற்றும் வர்த்தக முன்னேற்றம் குறித்து சிந்திக்க வேண்டும். நாம் எவ்வாறு முன்னோக்கிச் செல்ல வேண்டும் எனச் சிந்திக்க வேண்டும். முஸ்லிங்களின் பல பிரச்சினைகளைத் தீர்த்துள்ளேன். நவாஸ் குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவேன். அத்தோடு முஸ்லிங்களின் ஜனாஸாக்களை அடக்கம் செய்ய அன்று அனுமதி வழங்கப்படவில்லை. ஆனால் விருப்பமானவர்களுக்கு அடக்கம் செய்வதற்கும், தகனம் செய்வதற்கும் அனுமதிக்கும் புதிய சட்டத்தை அலி சப்ரி அமைச்சர் வர்த்தமானியில் வெளியிட இருக்கிறார். பலாத்காரமாக தகனம் செய்யப்பட்ட உடல்களுக்குரியவர்களின் குடும்பங்களுக்கு

### நாடு வீழ்ச்சியடைந்த போது பொறுப்பை ஏற்க முடியாதவர்கள் எப்படி தற்பொழுது தலைமைப் பொறுப்பை ஏற்பது?

நாம் நஷ்டஈடு வழங்குவோம். தகனம் தொடர்பில் பரிந்துரை வழங்கியவர்கள் தொடர்பில் ஆராய பாராளுமன்ற குழுவொன்று நியமிக்கப்படும்.

எனக்கு இனவாத ,மதவாத பிரச்சினைகள் அவசியமில்லை. செம்டம்பர் 21 ஆம் திகதி காஸ் சிலிண்டருக்கு வாக்களியுங்கள். இன்றேல் காஸ் சிலிண்டரும் இல்லை, வர்த்தகமும் இல்லை. கடைகளை மூட நேரிடும்".

அமைச்சர் அலி சப்ரி:

"எதிர்வரும் ஐந்து வருடங்களுக்கு இந்நாட்டை ரணில் விக்கிரமசிங்க ஆட்சி செய்ய வேண்டும் என்று மக்கள் தீர்மானித்துள்ளனர். இன்று நாம் செல்லும் இடமெல்லாம் மக்கள் வெள்ளம் நிறைந்திருக்கிறது. ஏன் நாம் அவருக்கு வாக்களிக்க வேண்டும்? நாடு நெருக்கடியை எதிர்கொண்ட போது பொறுப்பை ஏற்குமாறு சஜித்திடம் கோரப்பட்ட போது தனது அரசியல் எதிர்காலத்தை மாத்திரம் கருத்திற்கொண்டு சவாலை ஏற்க மறுத்துவிட்டார். அநுர குமார திஸாநாயக்கவும் முன்வரவில்லை.

ஆனால் தனியொரு எம்.பி யாக இருந்த எமது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாட்டைப் பொறுப்பேற்று செயற்பட்டுக் கொண்டிருக்கும் போது அவரின் வீட்டுக்கு தீவைத்து எரித்தனர். இந்த நாட்டை பங்களாதேஷ் போன்று மாற்றி பலவந்தமாக நாட்டைக் கைப்பற்ற ஒரு குழு முயற்சி செய்தது.

ஆனால் அந்த நேரத்தில் எந்தவித அச்சமும் இன்றி, தயக்கமும் இன்றி பொறுப்பேற்று நாட்டை இன்று கட்டியெழுப்பிய ஒரே தலைவர் ரணில் விக்கிரமசிங்க என்பதை பயமின்றி கூற வேண்டும்.

திறைசேரியில் பணமின்றி, சுற்றுலாப் பயணிகள் வருகை தராது அந்நியச் செலாவணிக் கையிருப்பு வீழ்ச்சி கண்டது. ரூபாவின் பெறுமதி குறைந்தது. அவ்வாறு இருந்த நாடு தற்போது மீட்சி கண்டுள்ளது. அனைத்தும் நல்ல நிலைமைக்கு வந்துள்ளன. பெரும் நோயில் வீழ்ந்திருந்த நாட்டை குணமாக்கிய ஒரு வைத்தியரே எமது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க".

அமைச்சர் அலிஸாஹிர் மௌலானா:

"மூன்று பிரதான வேட்பாளர்களில் அனுபவமும் அறிவும் மிக்கவர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஒருவரேயாவார். காத்தான்குடி உள்ளிட்ட இந்தப் பிரதேச மக்கள் ஏன் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிற்கு வாக்களிக்க வேண்டும் என்பதற்கு பல காரணங்கள் உள்ளன. காத்தான்குடி, ஏறாவூர், கல்குடா, வாழைச்சேனை மக்களுக்கு இன்னும் பல காரணங்கள் இருக்கும். அதில் முக்கியமானது நிலப்பற்றாக்குறையாகும். அந்தப் பிரச்சினையைத் தீர்க்க அவரது தேர்தல் விஞ்ஞாபனத்தில் உறுதியளிக்கப்பட்டுள்ளது. அதற்காக ஜனாதிபதிக்கு நன்றி தெரிவிக்கிறோம். காத்தாக்குடி தள வைத்தியசாலையை தரமுயர்த்த பல காலமாக கோரிக்கை விடுக்கப்பட்டது. ஜனாதிபதி அதற்கும் நடவடிக்கை எடுத்துள்ளார்.

ஹஜ் கடமைக்குச் சென்று திரும்பிவந்த முஸ்லிம்கள் குருக்கள்மடத்தில் கொல்லப்பட்டார்கள். அவர்களின் சடலங்கள் இன்று கூட கிடைக்கவில்லை. அவர்களின் குடும்பங்களுக்கு எந்த நஷ்டஈடும் வழங்கப்படவில்லை.



நீதிபதி நவாஸ் குழுவின் பரிந்துரைப்படி குடும்பங்களுக்கு கொடுப்பனவு வழங்குவதாக ஜனாதிபதி தனது விஞ்ஞாபனத்தில் உறுதியளித்துள்ளார். அதற்காக காத்தான்குடி மக்கள் தமது வாக்குகளை வழங்க கடமைப்பட்டுள்ளனர்.

புரையோடிப் போன பல பிரச்சினைகளுக்கு ஜனாதிபதி தீர்வு அளித்துள்ளார். அவர் மீண்டும் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட வேண்டும். அவர் இளைஞரைப் போன்று செயல்வீரராக பணியாற்றுகிறார். மக்களின் எதிர்காலம் பற்றியே எப்பொழுதும் சிந்திக்கிறார்.எனவே அவரை நாம் வெல்லவைக்க வேண்டும்".

வடமேல் மாகாண ஆளுநர் ஹாபீஸ் நசீர் அஹமட்:

"ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வெற்றி தற்போதும் உறுதியாகியுள்ளது. ரவூப் ஹக்கீம், ரிஷாட் பதியூதீன் போன்றவர்கள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பக்கம் வரவிடாமல் முஸ்லிம் மக்களை தவறாக வழிநடத்துகின்றனர். முன்னைய தேர்தல்களிலும் இவர்கள் மக்களை இவ்வாறுதான் வழிநடத்தினர்.

இவ்வாறு நான்கு தடவைகள் இவர்கள் முஸ்லிம் மக்களை திசைதிருப்பியுள்ளனர். ஆனால் இவர்கள் ஆதரவளிக்கும் வேட்பாளர்கள் வெற்றி பெற்றதில்லை. எனவே இம்முறை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வெற்றி உறுதியாகியுள்ளது. ஜனாதிபதி மட்டுமே நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்பிய வரலாற்றை கொண்டுள்ளார். இன்று முஸ்லிம் மக்கள் சுதந்திரமாக வாழக்கூடிய சுதந்திரம் இருக்கிறது. அதற்கு நன்றிக்கடன் செலுத்தும் முகமாக ஜனாதிபதிக்கு வாக்களிக்க வேண்டும். "





# மக்களுக்கு சுபிட்சமான வாழ்வை உருவாக்குவேன்

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச



கோட்டாபய ராஜபக்ஷவின் ஆட்சிக்காலத்தில் உடல்களை எரிப்பதா, நல்லடக்கம் செய்வதா என்கின்ற பிரச்சினை எழுந்த போது மக்களுடைய வாக்குகளால் தெரிவு செய்யப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் தங்களுடைய மத கலாசார, பண்பாட்டு விடயங்களை மறந்து தனிப்பட்ட இலாபத்திற்காகவும், வரப்பிரசாதங்களைப் பெற்றுக் கொள்வதற்காகவும் மதத்தையும், அறத்தையும், சுயகௌரவத்தையும் காட்டிக் கொடுத்து, இனவாதத்தைத் தூண்டியதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

"செப்டம்பர் 21 ஆம் திகதி உருவாக்கப்படுகின்ற ஐக்கிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் ஊடாக ஒரு பக்கத்திலிருந்து இன்னும் ஒரு பக்கத்திற்கு கட்சி மாறுகின்ற முறையை தடை செய்வோம். அதற்கான சட்டங்கள் கொண்டுவரப்பட்டு, இந்த விடயம் தொடர்பில் நீதிமன்றம் முடிவெடுக்கக் கூடிய வகையில் சட்டங்களை உருவாக்குவதற்கு நடவடிக்கை எடுப்போம்.

நான் எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் வரப்பிரசாதங்களை வழங்கி நிபந்தனைகளுக்காக உறுப்பினர்களை இணைத்துக் கொள்வதில்லை.

### தமது சொந்த வீடுகளிலே வாழ்கின்ற உரிமையை மக்களுக்கு வழங்கும் திட்டத்தை நடைமுறைப்படுத்துவேன்

"இனவாதத்தினால் முழு நாடும் சீரழிந்து போனது. இனவாதத்தையும் மதவாதத்தையும், இனமத பேதங்களையும் ஊக்குவிக்கின்ற யுகத்தை இல்லாமல் செய்வோம். அனைத்து இன மக்களும் துன்பப்பட்டுக் கொண்டிருக்கின்ற, வேதனையான நிலைக்குத் தள்ளப்பட்டு இருக்கின்ற இச்சந்தர்ப்பத்தில் சுபிட்சமான வாழ்க்கையை உருவாக்குகின்ற பொறுப்பை ஏற்றுக் கொள்வேன்" என்றும் அவர் தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் ஏற்பாட்டினாலான மக்கள் வெற்றிப் பேரணி எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தலைமையில் அநுராதபுரம் நாச்சியாதீவு நகரில் இடம்பெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றும்போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

கொள்கையின் அடிப்படையிலே இணைத்துக் கொள்வோம். கிராமத்தையும் பின்னர் நகரத்தையும் பின்னர் நாட்டையும் அபிவிருத்தி அடையச் செய்யும் கொள்கைத் திட்டத்துடனே நாம் செல்கின்றோம்.

காணியில்லாத, வீடில்லாத மக்களுக்கு காணிகளை வழங்கி, வீடுகளை அமைத்துக் கொடுத்து கம்உதாவ திட்டத்தை நடைமுறைப்படுத்துவதோடு, மலைநாட்டு தோட்டங்கள், கீழ்நாட்டு தோட்டங்கள், கிராமிய, நகர, நடுத்தர வகுப்பு மக்கள், மற்றும் அனர்த்தங்களின் போது பாதிக்கப்பட்ட மக்களுக்கான வீட்டுத்திட்டங்களையும் உள்ளடக்கி, தேசிய வீடமைப்புக் கொள்கை ஒன்றை உருவாக்குவேன். தமது சொந்த வீடுகளிலே வாழ்கின்ற உரிமையை மக்களுக்கு வழங்கும் திட்டத்தை நடைமுறைப்படுத்துவேன்.

வறுமையை ஒழிப்பதற்கான புதிய வேலைத்திட்டத்தை முன்னெடுப்பதோடு, 24 மாதங்களுக்கு ரூபா 20 ஆயிரம் வீதம் வழங்கி 24 மாதங்களுக்குள் வறுமையை ஒழிக்கின்ற வேலைத்திட்டத்தை முன்னெடுப்போம்.

தொடர்ந்தும் நிவாரணங்களைப் பெற்று அதிலேயே தங்கி வாழாத ஒரு பரம்பரையை உருவாக்க நடவடிக்கை எடுப்போம்.

50 கிலோ கிராம் உரமூடை ஒன்றை ஐயாயிரம் ரூபாக்கு வழங்குவதோடு, விவசாயக் கடனையும் ரத்து செய்வது மாத்திரம் அல்லாமல் QR முறையில் விவசாயிகளுக்கும், மீனவர்களுக்கும், முச்சக்கர வண்டி மற்றும் பாடசாலை போக்குவரத்து பஸ் உரிமையாளர்களுக்கும், அரிசி ஆலை உரிமையாளர்களுக்கும் நிவாரண அடிப்படையில் எரிபொருள் வழங்குவது உள்ளிட்ட பல்வேறு நிவாரணத் திட்டங்களையும் முன்னெடுப்போம்" என சஜித் பிரேமதாச மேலும் தெரிவித்தார்.

# சமத்துவமான நாட்டையே நான் விரும்புகின்றேன்

## தமிழ் பொதுவேட்பாளர் அரியநேத்திரன்



'தனிநாடு என்பது எனது நோக்கமில்லை. நான் சமத்துவ அரசாங்கத்தை விரும்புகின்றேன். மூன்று பிரதான வேட்பாளர்களும் தமது தேர்தல் பிரசாரங்களில் தமிழர்கள் குறித்து எதனையும் தெரிவிக்கவில்லை' என்று தமிழ் பொதுவேட்பாளர் அரியநேத்திரன் பேட்டியொன்றில் தெரிவித்துள்ளார்.

"தமிழ் மக்கள் ஜனாதிபதித் தேர்தலில் தங்களுக்கு வாக்களிக்கவில்லை என்பதை அவர்கள் உணர்வார்கள். அவர்கள் தாங்கள் தவறிழைத்துள்ளதை உணர்ந்து தீர்வொன்றை முன்வைப்பார்கள் என நாங்கள் எதிர்பார்க்கின்றோம்" என அரியநேத்திரன் குறிப்பிட்டுள்ளார்.

"வடக்கு மக்களுக்காக மாத்திரமல்ல, கிழக்கு மக்களுக்காகவும் நாம் குரல் கொடுக்கிறோம். சுதந்திரத்தின் பின்னர் இலங்கையில் தமிழர்கள் அடிமைகளாக்கப்பட்டுள்ளனர். வாழ்வாதாரம், பிரஜாவுரிமை பெற முடியாதவாறு நாங்கள் புறக்கணிக்கப்பட்டோம். தமிழ் மக்களின் உரிமைகள் பறிபோயுள்ளன. தமிழர்கள் அதிகளவாக வாழும் பகுதிகளில் பௌத்தமயமாக்கல் இடம்பெறுவதை இந்த தேர்தலில் முன்னிலைப்படுத்துவதற்காகவும் அதனை மக்கள் முன்கொண்டு செல்வதற்காகவுமே நான் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுகின்றேன்.

இலங்கை அரசாங்கத்திற்கும் சர்வதேச சமூகத்திற்கும் நாங்கள் இதனையே தெரிவிக்கின்றோம்.

இந்தப் பிரச்சினைகள் தொடர்ந்தும் நீடிக்கின்றது. இனப்பிரச்சினைக்கு தீர்வை காண முடிந்தால், பொருளாதார பிரச்சினை தானாக முடிவிற்கு வந்துவிடும். தனிநாடொன்றை உருவாக்குவது எனது நோக்கம் இல்லை. ஆனால் முழுமையான சுதந்திரமே எனது நோக்கம். நான் நான் சமத்துவ அரசாங்கத்தை, சமத்துவத்தை விரும்புகின்றேன். கனடா, சுவீடன், ஸ்கொட்லாந்து போன்ற நாடுகளில் காணப்படுவதை போன்ற சமத்துவ அரசாங்கத்தை உருவாக்குவதே எனது நோக்கம்.

இந்தியா எங்களின் அயல்நாடு புராதான காலத்திலிருந்து நட்பு நாடாக விளங்குகின்றது. சீனாவை பொறுத்தவரை அதற்கு இந்தியாவுடன் அரசியல் பகைமை போட்டி உள்ளது. இருநாடுகளும் தங்களின் நலனுக்காக திட்டங்களை தீட்டுகின்றன.

இலங்கைக்கு இந்த இரண்டு நாடுகளுடனும் உள்ள உடன்படிக்கை காரணமாக இலங்கைக்கு வாய்ப்புகள் உள்ளன.

இலங்கைக்கு இந்தியா, அமெரிக்கா, சீனா ஆகிய நாடுகள் உதவுகின்றன. எங்களுக்கு அது பிரச்சினையில்லை.

ஆனால் நாங்கள் தமிழர்கள். 1948 ஆம் ஆண்டு முதல் பல தலைவர்களின், ஜனாதிபதிகளின் ஆட்சிகளின் கீழ் வாழ்ந்துள்ளோம். தேர்தல் வாக்குறுதிகள் முன்வைக்கப்பட்டன. ஆனால் அவை நிறைவேற்றப்படவில்லை.

நான் தேர்தலில் வெற்றிபெறுவதற்காக போட்டியிடவில்லை. தமிழ் மக்களின் தேவைகளை நிறைவேற்ற போட்டியிடுகின்றோம் என்ற செய்தியை தெரிவிப்பதற்காக நான் போட்டியிடுகின்றேன்.

மூன்று பிரதான வேட்பாளர்களினதும் தேர்தல் பிரச்சார கூட்டங்களில் தமிழ் மக்கள் குறித்து அவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் குறித்து எதுவும் குறிப்பிடப்படவில்லை. ஆனால் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்படுபவருக்கு நாங்கள் செய்தியொன்றை வைத்திருக்கின்றோம்.

அவர்கள் தமிழ் மக்கள் ஜனாதிபதி தேர்தலில் தங்களுக்கு வாக்களிக்கவில்லை என்பதை உணர்வார்கள். அவர்கள் தாங்கள் தவறிழைத்துள்ளதை உணர்ந்து தீர்வொனறை முன்வைப்பார்கள் என நாங்கள் எதிர்பார்க்கின்றோம்".

இவ்வாறு அரியநேத்திரன் குறிப்பிட்டுள்ளார்.

தினகரன் விளம்பரம் 0112429367
விற்பனை பிரிவு 0112429444, 0112429378
ஆசிரியபீடம் editor.tkn@lakehouse.lk

# தினகரன்
THINAKARAN
තිනකරන්

2024 செப்டெம்பர் 2 திங்கட்கிழமை

தொழுகை நேரம்
சுபஹ் - 04.47
ளுஹர் - 12.12
அஸர் - 03.16
மஃரிப் - 06.18
இஷா - 07.28

இன்றைய சுபதினம்
குரோதி வருடம் ஆவணி 16
ராகுகாலம் : பகல் : 1.30 - 3.00வரை
சுபநேரம் : காலை : 10.30 - 12.00வரை
யோகம்: சித்தயோகம்
திதி: சஷ்டி



நாடு வீழ்ச்சியடைந்தால் மீண்டும் நெருக்கடி நிலைக்கே தள்ளப்படும்

## மக்கள் தீர்க்கமான முடிவை எடுக்கும் தருணம் இது

முன்னாள் இராஜாங்க அமைச்சர் நிமல் லான்சா

**(லோரன்ஸ் செல்வநாயகம் )**

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு மட்டுமே நாட்டை பாதுகாத்து முன்னேற்றும் அனுபவம் மற்றும் திறமை உள்ளது. சஜித், அநுர போன்றவர்களால் ஜனாதிபதியின் நல்ல திட்டங்களை விமர்சிக்க மட்டுமே முடியும் என முன்னாள் இராஜாங்க அமைச்சர் நிமல் லான்சா தெரிவித்தார்.

மிக மோசமாக பாதிக்கப்பட்ட நாட்டை இரண்டு வருடங்களில் இயல்பு நிலைக்கு கொண்டு வந்தவர் யார் என்பதை மக்கள் உணர வேண்டும் என தெரிவித்த அவர், இம்முறை தேர்தலில் மக்கள் தீர்க்கமான முடிவை எடுக்க வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார்.

'இயலும் ஸ்ரீலங்கா'ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிக்கும் மாபெரும் மக்கள் பேரணிக் கூட்டம் ஜாஎலவில் (30) நடைபெற்ற போது அங்கு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.



இந்தக் கூட்டத்தில் தொடர்ந்தும் உரையாற்றிய அவர்,

"ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவே நாட்டையும் மக்களையும் பாதுகாப்பதற்கு முன்வந்தார். மக்கள் அதை மறக்கக்கூடாது. மக்கள் அதற்கு நன்றிக்கடன் தெரிவிப்பது அவசியம். எரிபொருள், எரிவாயு, உரம், மருந்து என எதுவுமே இல்லாமல் இருந்த நாட்டை சவால் மிகுந்த தருணத்தில் பொறுப்பேற்றவர் யார் என்பதை மக்கள் மறந்துவிடக்கூடாது.

மக்கள் தவறான தீர்மானத்தை எடுத்து நாடு மீண்டும் வீழ்ச்சி அடையுமானால் மீண்டும் பழைய நெருக்கடி நிலைக்கு செல்வதை யாராலும் தடுக்க முடியாது போகும்.

06

சம்பள அதிகரிப்பு வழங்கக்கூடியவர் யார்?

## தபால் மூலம் வாக்களிப்போர் சிந்தித்து உறுதியான தீர்மானம் எடுக்க வேண்டும்

அமைச்சர் சுசில் பிரேமஜயந்த

**(லோரன்ஸ் செல்வநாயகம்)**

அரசாங்க ஊழியர்களின் சம்பள முரண்பாட்டை தீர்க்கவும் சம்பள அதிகரிப்பை வழங்கவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் மட்டுமே முடியும் என்பதை சிந்தித்து தேர்தலில் அரசாங்க ஊழியர்கள் உறுதியான தீர்மானம் எடுக்க வேண்டும் என பாராளுமன்ற சபை முதல்வரும் அமைச்சருமான சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

'இயலும் ஸ்ரீலங்கா' ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிக்கும் மாபெரும் மக்கள் பேரணிக் கூட்டம் ஜாஎல நகரில் (30)நடைபெற்ற போது அங்கு உரையாற்றும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்தக் கூட்டத்தில் தொடர்ந்து உரையாற்றிய அமைச்சர்," அன்று நாட்டில் நெருக்கடி நிலை உருவான போது ஆட்சியை பொறுப்பேற்க எவருமே முன்வரவில்லை. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மட்டுமே துணிச்சலுடன் சவாலை ஏற்று நாட்டை பொறுப்பேற்க முன்வந்தார்.



அவர் அன்று பதவி ஏற்பதற்கும் அமைச்சரவை கூட்டத்தை நடத்துவதற்கும் கூட முறையானதொரு இடமிருக்கவில்லை. அன்று அவர் நாட்டை பொறுப்பேற்ற பின்னர் தற்போது இரண்டு வருடங்களில் நாடு பொருளாதாரத்தில் முன்னேற்றம் கண்டுள்ளது.

அன்று எல்லை இல்லாமல் அதிகரித்துச்சென்ற அத்தியாவசியப் பொருட்களின் விலைகளை கட்டுப்படுத்த அவர் நடவடிக்கை எடுத்தார். அத்தியாவசியப் பொருட்களை அன்றிருந்த விலைகளுடன் ஒப்பிட்டு பார்க்கும் போது தற்போது பெருமளவு விலைகள் குறைந்துள்ளன.

சிறந்த நடவடிக்கை காரணமாக வெளிநாட்டு அந்நியச் செலாவணி கையிருப்பு அதிகரித்துள்ளது. அரசாங்க ஊழியர்களின் சம்பளம் அதிகரிக்கப்படும் என்றும் சம்பள முரண்பாடு தீர்க்கப்படும் என்றும் அவரது கொள்கை விஞ்ஞாபனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது" எனத் தெரிவித்தார்

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில்

## இதுவரை 1,745 முறைப்பாடுகள் தேர்தல் ஆணைக்குழுவில் பதிவு

ஜனாதிபதி தேர்தல் தொடர்பில் சுமார் 1,745 க்கும் மேற்பட்ட முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக தேர்தல் ஆணைக்குழுவுக்கு அறிவித்துள்ளது.




ஜூலை 31ஆம் திகதி முதல் கடந்த 30 ஆம் திகதி வரை கிடைத்தட தேர்தல் முறைப்பாடுகளின் மொத்த எண்ணிக்கை 1592 ஆக அதிகரித்துள்ளதாக ஆணைக்குழு தெரிவிக்கின்றது. மொத்த முறைப்பாடுகளில், 1,526 முறைப்பாடுகள் தேர்தல் சட்ட மீறல்கள் தொடர்பானதெனவும் வன்முறைச் சம்பவங்கள் தொடர்பில் 58 முறைப்பாடுகள் பதிவாகியுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

## கிழக்கில் ரணிலுக்கு ஆதரவான பிரசாரத்தில் வெள்ளை குதிரைகள்

கொழும்பிலிருந்து இரண்டு உயர் ரக வெள்ளை குதிரைகள் தற்போது அம்பாறை மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளுக்கும் பிரதான வீதிகளில் உலா வருகின்றன.



ஜனாதிபதித் தேர்தலில் சுயேச்சையாக போட்டியிடும் ரணில் விக்கிரமசிங்கவை ஆதரித்து இந்த குதிரைகள் தினமும் பிரசாரங்களை முன்னெடுத்துள்ளன.

ரணில் விக்கிரமசிங்கவின் பிரசாரக் கூட்டங்கள் நடைபெறுகின்ற இடங்களை மையப்படுத்தி இவ்விரு குதிரைகளும் காட்சிப்படுத்தப்பட்டு வருவதுடன் வித்தியாசமான முறையில் மக்களிடம் ரணில் விக்கிரமசிங்கவின் வெற்றிக்காக பிரசாரம் செய்து வருகின்றனர்.

06

## லிட்ரோ சமையல் எரிவாயு விலைகளில் மாற்றமில்லை

மாதாந்த விலைத் திருத்தத்தின் படி செப்டம்பர் மாத சமையல் எரிவாயு விலையில் மாற்றம் செய்யப்படவில்லையென லிட்ரோ நிறுவனம் அறிவித்துள்ளது.



12.5 கிலோ எடையுள்ள சமையல் எரிவாயு சிலிண்டரின் விலை தொடர்ந்தும் 3,690 ரூபாவாக இருக்குமென்றும் 05 கிலோ சமையல் எரிவாயு சிலிண்டரின் விலை 1,482 ரூபாவாகவும் 2.5 கிலோ சமையல் எரிவாயு சிலிண்டர் விலை 694 ரூபாவாகவும் விற்பனைசெய்யப்படுமென்றும் லிட்ரோ நிறுவனத்தின் தலைவர் முதித பீரிஸ் குறிப்பிட்டார்.




தெங்கு தொழில்துறை ஏற்றுமதி வருவாய்

| 2023 | 2024 |
|---|---|
| ஜனவரி - ஜூலை | ஜனவரி - ஜூலை |
| டொ.மில். 398 | டொ.மில். 474 |

இருக்கின்ற தெங்கு அறுவடையை அதிகரித்தும் தேங்காய் விரயத்தை தவிர்த்தும்
புதிய உற்பத்தி மேம்பாடு மற்றும் புதிய சர்வதேச சந்தையை கைப்பற்றுவதன் மூலம் 2030 இல் தெங்கு தொழில்துறையின் மூலம்
1.5 பில்லியன் டொலர் ஏற்றுமதி வருவாய்

தேங்காய் சிரட்டையை சேகரிக்கும் நாடு தழுவிய நிகழ்ச்சித் திட்டத்தின் அங்குரார்ப்பணம்
தெங்கு அபிவிருத்தி அதிகாரசபையின் தலைமையில் நுகேகொடை அநுலா வித்தியாலயத்தில்
2024 செப்டெம்பர் 02ஆம் திகதி மு.ப. 9.00க்கு இடம்பெறும்.

කෘෂිකර්ම සහ වැවිලි කර්මාන්ත අමාත්‍යාංශය
கமத்தொழில் மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு
Ministry of Agriculture and Plantation Industries

தெங்கு அபிவிருத்தி அதிகாரசபை

தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம்: 834
தொலைபேசி இலக்கம்: 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

குரோதி வருடம் ஆவணி மாதம் 16ஆம் நாள் திங்கட்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1446 ஸபர் பிறை 27

### குறள் தரும் சிந்தனை



அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை
இகழ்வார்ப் பொறுத்தல் தலை

*தன்மீது குழி பறிப்போரையே தாங்குகின்ற பூமியைப் போல் தம்மை இகழ்ந்து பேசுகிறவர்களின் செயலையும் பொறுத்துக் கொள்வதே தலைசிறந்த பண்பாகும்.*

## அமைதியானதொரு தேர்தலுக்கு வழிவகுத்துள்ள தலைமைத்துவம்

இந்திய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் தோவால் கடந்த வார இறுதியில் கொழும்புக்கு வருகை தந்திருந்தார். இலங்கையில் ஜனாதிபதித் தேர்தல் நடைபெறும் சூழலில் அவர் இந்நாட்டுக்கு விஜயம் செய்திருந்த நிலையில், ஜனாதிபதி அபேட்சகர்களான ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, அநுர குமார திஸாநாயக்க, நாமல் ராஜபக்ஷ ஆகியோரைத் தனித்தனியாகச் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.

ஜனாதிபதியுடனான சந்திப்பின் போது இரு நாடுகளுக்கும் இடையிலான பொருளாதார, பாதுகாப்பு மற்றும் பிராந்திய ஒத்துழைப்பு குறித்து கலந்துரையாடப்பட்டதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்ற கொழும்பு பாதுகாப்பு மாநாட்டு செயலகத்தை நிறுவுவதற்கான சாசனத்திலும் இந்திய பாதுகாப்பு ஆலோசகர் கையெழுத்திட்டுள்ளார்.

அத்தோடு கடந்த இரு வருடங்களுக்கு முன்னர் கடும் பொருளாதார வீழ்ச்சிக்கு நாடு உள்ளான போதிலும், அந்த வீழ்ச்சியில் இருந்து மீட்சி பெற்று அமைதியாகவும் சுதந்திரமாகவும் தேர்தலொன்றை நடத்தக்கூடிய சூழலை ஏற்படுத்தியமைக்காக ஜனாதிபதியை அவர் பாராட்டியுள்ளார்.

நாட்டை பொருளாதார வீழ்ச்சியில் இருந்து மீளக் கட்டியெழுப்புவதற்காக ஜனாதிபதி மேற்கொண்ட பணிகள் பாராட்டத்தக்கவை. அவை இந்நாட்டின் வரலாற்றில் அழியாத்தடம் பதித்தவை.

கடந்த 2022 ஆம் ஆண்டின் ஆரம்பப் பகுதியில் நாடு கடும் பொருளாதார வீழ்ச்சிக்கு உள்ளானது. அதன் ஊடாக வங்குரோத்து நிலையை அடைந்தது. அந்தச் சமயத்தில் எந்த நாடும் நிதியுதவி வழங்கும் நிறுவனமும் இந்நாட்டுக்கு உதவி, ஒத்துழைப்பு நல்க முன்வரவில்லை. ஆனால் 'அயல்நாடு முதலில்' என்ற கொள்கைக்கு அமைய இந்தியா சுமார் 4 பில்லியன் அமெரிக்க டொலர்களை அவ்வருடத்தின் முதல் இரண்டு மூன்று மாங்களுக்குள் வழங்கி உதவியது. அத்தோடு மனிதாபிமான உதவிகள் பலவும் வழங்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

நாடு முகம்கொடுத்த பொருளாதார வீழ்ச்சியின் சவாலை எதிர்கொள்ள முடியாமல் அன்றைய ஆட்சியாளர்கள் தம் பதவிகளை விட்டு விலகிச் சென்றனர். அதனால் பொருளாதார வீழ்ச்சியில் இருந்து நாட்டை மீட்டெடுக்க எவரும் முன்வராத நிலைமை உருவானது. ஜனநாயக நாடொன்றில் ஆளும் அரசாங்கம் பதவி விலகிச் செல்லும் போது எதிர்க்கட்சி ஆட்சியைப் பொறுப்பெடுப்பதுதான் வழமை. ஆனால் இப்பொருளாதார நெருக்கடிக்கு முன்பாக எதிர்க்கட்சித் தலைவர் நாட்டின் தலைமையை ஏற்பதற்கு மறுத்துவிட்டார்.

அத்தகைய சூழலில் பாராளுமன்றத்தில் தேசியப் பட்டியல் மூலம் ஒரு ஆசனத்தைக் கொண்டிருந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, நாட்டினதும் மக்களினதும் நலன்களை முன்னிலைப்படுத்தி ஜனாதிபதிப் பதவியை ஏற்றதோடு, பொருளாதார வீழ்ச்சியில் இருந்து நாட்டை மீட்டெடுப்பதற்கான பொருளாதார வேலைத்திட்டங்களையும் விரிவான அடிப்படையில் ஆரம்பித்தார். அந்த வேலைத்திட்டங்கள் அனைத்தும் நடைமுறைச் சாத்தியமானவையாக அமைந்திருந்தன.

அதன் பயனாக பொருளாதார வீழ்ச்சிக் காலத்தில் நாட்டில் நிலவிய நெருக்கடிகளும் அசௌகரியங்களும் கட்டம் கட்டமாக நீங்கத் தொடங்கின. அத்தோடு நாடு பெற்றுக்கொள்ளும் பொருளாதார பிரதிபலன்களும் மக்களுக்கு பெற்றுக் கொடுக்கப்படலாயின. அதன் ஊடாக பொருளாதார நெருக்கடிக் காலப்பகுதியில் நாட்டில் நிலவிய சமூக, பொருளாதார, அரசியல் கொதிநிலையும் கட்டம் கட்டமாகத் தணிவடைந்தது.

ஜனாதிபதியின் பொருளாதார வேலைத்திட்டங்கள் உள்நாட்டிலும் சர்வதேச மட்டத்திலும் வரவேற்பையும் பாராட்டுக்களையும் பெற்றன. பொருளாதார ரீதியில் நாட்டைக் கட்டியெழுப்பும் திட்டங்களுக்கு சர்வதேச நாணய நிதியம் ஒத்துழைப்பு நல்க இணக்கம் தெரிவித்து ஆதரவளித்து வருகிறது. இவ்வாறான பின்புலத்தில் மக்கள் மத்தியில் புதிய நம்பிக்கைகளும் எதிர்பார்ப்புக்களும் உருவாகியுள்ளன.

ஆனால் நாடு முகம்கொடுத்திருந்த பொருளாதார நெருக்கடியும் அரசியல் கொந்தளிப்பும் குறுகிய காலப் பகுதிக்குள் தீர்வு காணக் கூடியதல்ல. அப்படியிருந்தும் அவற்றைக் கடந்து அமைதியாகவும் சுதந்திரமாகவும் அரசாங்கத் தலைவரைத் தெரிவு செய்வதற்கான தேர்தலை நடத்துவற்கான சூழலை நாடு அடைந்து கொண்டுள்ளது. இது எடுத்த எடுப்பில் பெற்றுக் கொள்ளப்பட்டதல்ல. இதன் நிமித்தம் மேற்கொள்ளப்பட்ட தியாகங்களும் அர்ப்பணிப்புகளும் அதிகம்.

ஜனாதிபதியும் அவர் தலைமையிலான அரசாங்கமும் முன்னெடுக்கும் பொருளாதார வேலைத்திட்டங்களின் பிரதிபலன்களே இவை. அதன் பயனாகவே அமைதியாகவும் சுதந்திரமாகவும் தேர்தலை நடத்தக் கூடிய சூழல் உருவாகியுள்ளது. பொருளாதார நெருக்கடியினால் நாடு நிர்க்கதிக்குள்ளாகி இருந்த போது நாட்டின் தலைமையை ஏற்க மறுத்தவர்கள் கூட இத்தேர்தலில் போட்டியிடக்கூடிய நிலைமை ஏற்பட்டுள்ளது. அவ்வாறான சூழலை ஏற்படுத்திக் கொடுத்துள்ள ஜனாதிபதி நிச்சயம் பாராட்டப்பட வேண்டியவரே. அதன் வெளிப்பாடுதான் இந்திய பாதுகாப்பு ஆலோசகரின் பாராட்டு.

editor.tkn@lakehouse.lk

# தொழிலாளர் வர்க்கப் போராட்டங்களை துணிச்சலுடன் முன்னெடுத்த பாலா தம்பு



**அன்னாரின் 10 ஆவது நினைவு தினத்தை முன்னிட்டு இன்று 'பாலாவுடன் ஒரு மாலைப்பொழுது' நிகழ்ச்சி**

இலங்கை தொழிற்சங்க இயக்க வரலாற்றில் முக்கியமான தலைவர்களில் ஒருவராக விளங்கிய பாலா தம்பு அவர்களின் பத்தாவது நினைவு தினத்தை முன்னிட்டு கொழும்பு, கொள்ளுப்பிட்டி பாலா தம்பு ஒழுங்கையில் அமைந்திருக்கும் இலங்கை வர்த்தக ஊழியர் சங்கத்தின் மண்டபத்தில் இன்றைய தினம் பிற்பகல் 3 மணிக்கு 'பாலாவுடன் ஒரு மாலைப்பொழுது' நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

இலங்கை வர்த்தக ஊழியர் சங்கத்தின் தலைவர் மங்கள அபேவிக்கிரம தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் சங்கத்தின் மூத்த உறுப்பினரான டட்லி வீரசிங்க, 'பாலாவின் நினைவுகள்' என்ற தலைப்பிலும், இலங்கை முதலாளிமார் சம்மேளத்தின் பணிப்பாளர் நாயகம் வஜிர எல்லப்பொல 'பாலாவும் முதலாளிமார் சம்மேளனமும்' என்ற தலைப்பிலும், சங்கத்தின் உதவிச்செயலாளர் றொஷான் பொன்சேகா 'சர்வதேச செய்தி' என்ற தலைப்பிலும், சுயாதீன ஆய்வாளரான கலாநிதி ஜானக பியன்வில் 'இலங்கையில் சமூக இயக்க தொழிற்சங்கவாதம்' என்ற தலைப்பிலும், சங்கத்தின் பொதுச்செயலாளர் எஸ்.பி. நாதன் 'பாலா; ஒரு சமூக விஞ்ஞானி, மனிதாபிமானி, மனித உரிமைகள் பாதுகாவலர், ஜனநாயகவாதி, சர்வதேசியவாதி' என்ற தலைப்பிலும் உரையாற்றுவார்கள்.

இலங்கை வர்த்தக ஊழியர் சங்கத்தின் பொதுச்செயலாளரான பாலா தம்பு 2014 செப்டெம்பர் முதலாம் திகதி காலமானார். ஒரு முன்னணி சோசலிசவாதியும் சர்வதேசவாதியுமான அவர் வர்த்தக ஊழியர் சங்கத்துக்கு ஆறு தசாப்தங்களாக தலைமைதாங்கி வழிநடத்தினார்.

தனது வாழ்நாள் பூராவும் இலங்கை தொழிலாளர் வர்க்கத்தின் போராட்டங்களுக்கு தலைமை தாங்கிய பாலாதம்பு, மாணவனாக இருந்தபோதே லங்கா சமசமாஜ கட்சியில் இணைந்து இலங்கை பூராவும் இடம்பெற்ற ஒவ்வொரு தொழிலாளர் வர்க்கப் போராட்டத்திலும் பங்கேற்ற அர்ப்பணிப்பு மிகுந்த ஒரு வரலாற்றைக் கொண்டவர். அலுவலக ஊழியர்களின் தொழிற்சங்கமாக இருந்த இலங்கை வர்த்தக ஊழியர் சங்கத்தை கைத்தொழிற்துறை தொழிலாளர்களையும் உள்ளடக்கிய ஒரு பொதுத் தொழிற்சங்கமாக மாற்றிய பாலாதம்பு, 1953 ஹர்த்தால் போராட்டத்தில் முன்னரங்கத்தில் நின்றவர். அந்த ஹர்த்தாலே சுதந்திர இலங்கையில் இடம்பெற்ற முதலாவது பெரிய போராட்டமாகும்.

லங்கா சமசமாஜ கட்சி 1964 ஆம் ஆண்டில் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் அரசாங்கத்துக்கு ஆதரவளிப்பதற்குத் தீர்மானித்தபோது, அரசியற் குழுவில் இருந்தவர்களில் அதை கடுமையாக எதிர்த்த ஒரே உறுப்பினர் பாலாதம்பு ஆவார்.

முழுநிறைவான குற்றவியல் வழக்கறிஞரான அவர், சர்வதேச தொழிலாளர் அமைப்பில் இலங்கை தொழிலாளர்களை பிரதிநிதித்துவப்படுத்தினார். தனது மரணத்துக்கு சில நாட்கள் முன்னர் கூட தொழிலாளர்களை அணிதிரட்டுவதில் துடிப்புடன் செயற்பட்டவர். அர்ப்பணிப்பு உணர்வுடனான சோசலிசவாதியான அவர், புகழ்மிக்க தொழிலாளர் வர்க்கப் போராட்டங்களை அடையாளப்படுத்திய ஒரு யுகத்தின் துடிப்புமிகு பிரதிநிதிகளில் ஒருவராவார்.

# கிழக்கு மாகாண தமிழ்மொழித்தின விழா; கல்முனையில் கோலமான நிகழ்வுகள்



அகில இலங்கை தமிழ் மொழித் தினத்திற்கான கிழக்கு மாகாண விழாவும், போட்டி நிகழ்வுகளும் கல்முனை வலயக் கல்வி அலுவலகத்தின் ஒருங்கிணைப்பில் சில தினங்களுக்கு முன்னர் சிறப்பாக நடைபெற்றன.

கிழக்கு மாகாணத்திலுள்ள 17 கல்வி வலயங்களை ஒன்றிணைத்த இவ்விழாவிற்கு கிழக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் சுஜாத்தா குலேந்திரகுமார் தலைமை தாங்கினார்.

போட்டி நிகழ்வுகள் கல்முனை கார்மேல் பற்றிமா கல்லூரி, உவெஸ்லி உயர்தரப் பாடசாலை, இஸ்லாமாபாத் மகாவித்தியாலயம், கல்முனை ஆர்.கே.எம்.மகா வித்தியாலயம் ஆகியவற்றில் நடைபெற்றன. கல்முனை உவெஸ்லி உயர்தரப் பாடசாலையில் பிரதான விழா இடம்பெற்றது.





கிழக்கு மாகாண தமிழ் மொழித் தினத்தின் முக்கிய அம்சமாக பல் சமயங்களையும் பிரதிபலித்த கலாசார ஊர்வலம் அமைந்திருந்தது. கல்முனை பஸ் நிலைய முன்வளைவிலிருந்து ஆரம்பமான ஊர்வலம் பொதுச்சந்தையினூடாக சென்று கல்முனை உவெஸ்லி உயர்ரப் பாடசாலையின் விழா மண்டபத்தில் முடிவடைந்தது

தமிழ்த் தாய் தேர், விபுலானந்தர் சிலை ஊர்தி, தமிழ் வளர்த்த பெரியார் பவனி, இனியம், மயிலாட்டம், காவடி, கரகாட்டம், றபான் அடங்கலான அம்சங்கள் ஊர்வலத்தை மெருகேற்றின.

வலயக் கல்விப் பணிப்பாளர் எம்.எஸ். சஹுதுல் நஜீமின் நெறிப்படுத்தலில் கல்முனை கல்வி வலய கல்விசார் மற்றும் கல்விசாரா உத்தியோகத்தர்கள், அதிபர்கள் உள்ளிட்டோரின் கூட்டிணைவின் மூலம் விழா நிகழ்வுகள் சிறப்படைந்தன.

பண்பாட்டு ஊர்திக்கான தேர் கல்முனை தரவைப் பிள்ளையார் ஆலயத்திலிருந்து கொண்டுவரப்பட்டு ஊர்வலத்தை ஆரம்பித்தது. தமிழ் வளர்த்த பெரியார் தொடரணிக்கு பாண்டிருப்பு மகாவிஷ்ணு அறநெறிப் பாடசாலை, கல்முனை இந்து இளைஞர் மன்றம், மருதமுனை அல்மனார் மத்திய கல்லூரி என்பன பெரியார்களின் உருவம்தாங்கி பங்களிப்புச் செய்தன. மாணவர்கள் பெரியார்களாகவே வேடமேற்றமை முக்கிய அம்சமாகும்.

தமிழ் மொழித் தினம் கொண்டாடப்படுவதற்கு கால்கோளாக இருந்த சுவாமி விபுலானந்தர் பிறந்த காரைதீவு மண் கல்முனை வலயத்திற்கு உட்பட்டதாகும். அங்குள்ள விபுலானந்த ஞாபகார்த்த மணி மண்டபத்திலிருந்து அவரது சிலை ஊர்வலத்திற்காக எடுத்து வரப்பட்டமை சிறப்பம்சமாகும்

இனியம் கல்முனை ஆர்.கே.எம்.மகாவித்தியாலயத்திலிருந்தும், நாதஸ்வர ஏற்பாடு காரைதீவு சண்முகா மகாவித்தியாலயத்தினாலும் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

மயிலாட்டம் கல்முனை ஆர்.கே.எம். பாடசாலை மாணவர்களாலும் கோலாட்டம் காரைதீவு ஆர்.கே.எம்.பெண்கள் பாடசாலையினாலும் காவடி உவெஸ்லி உயர்தரப் பாடசாலையினாலும் கரகாட்டம் கல்முனை ஆர்.கே.எம்.மகா வித்தியாலயத்தினாலும் நிகழ்த்தப்பட்டன.

பொல்லடி அல்அஷ்ஹர் மகாவித்தியாலய மாணவர்களாலும் றபான் கல்முனை சாஹிரா தேசிய பாடசாலையினாலும் கல்முனை இஸ்லாமாபாத் முஸ்லிம் மகாவித்தியாலய மாணவர்களாலும் இசைக்கப்பட்டன.

சேனைக்குடி கணேஷா மகாவித்தியாலயத்தின் மோர் பந்தல், அல்பஹ்ரியா மகாவித்தியாலயத்தின் பலகாரப் பந்தல், சரவணாஸ் நகையகத்தின் குளிர்பானப் பந்தல் ஆகியன விருந்தினர்களை மகிழ்ச்சிப்படுத்தின. பிரதான விழாவை அடுத்து போட்டிகள் இடம்பெற்றன. வலய அதிபர்களின் நிதியாண்மையில் பாடசாலைகளைப் பிரதிநிதித்துவம் செய்யும் விதமாக காலை,மதிய உணவு ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டன.

போட்டி முடிவுகளைத் தொடர்ந்து அதே இடத்தில் மாகாண நிலை சான்றிதழ்களும் வழங்கி வைக்கப்பட்டமை சிறப்பம்சமாகும்

திருக்கோவில் கல்வி வலய ஒருங்கிணைப்பில் நடைபெற்ற 38 மாவட்டப் போட்டிகளில் 21 முதலிடங்கள் கிடைத்ததுடன், 37 போட்டிகளுக்கும் முதல் மூன்று இடங்கள் கிடைத்தமை குறிப்பிடத்தக்கது. இது கல்முனை கல்வி வலயத்தின் தமிழ் மொழி வரலாற்று சாதனையாகும். இச்சாதனைப் பட்டியலுடன் கல்முனை வலயம் மாகாணப் போட்டிகளை எதிர்கொண்டமை விஷேடமாகும்.

**ஜெஸ்மி எம்.மூஸா...**
(பெரியநீலாவணை தினகரன் நிருபர்)

# உலகின் முதல் E- விளையாட்டுகளுக்கான உலகக் கிண்ணப் போட்டிகள் நிறைவு



கடந்த சில நாட்களாக சவூதி அரேபியாவின் ரியாத் நகரில் நடைபெற்று வந்த உலகின் முதல் E விளையாட்டுக்களுக்கான உலகக் கிண்ணப் போட்டி கடந்த திங்கட்கிழமை வெற்றிகரமாக நிறைவடைந்தது. இது சவூதி அரேபிய பட்டத்து இளவரசர் மற்றும் பிரதமராகிய முஹம்மத் பின் சல்மான் ஆதரவின் கீழ் நடைபெற்றது.

கடந்த 8 வாரங்களாக நடைபெற்று வந்த இந்த E விளையாட்டுக்கள் உலகக் கிண்ணப் போட்டிகளில் பங்கேற்க உலகெங்கிலும் இருந்து பல கழகங்களின் வீரர்கள் முதல் முறையாக ரியாத்துக்கு வந்தனர். 60 மில்லியன் அமெரிக்க டொலர்களுக்கும் அதிகமான பரிசுத்தொகையுடன், இந்நிகழ்வு சுமார் 500 அணிகளையும் 1,500 தொழில்முறை வீரர்களையும் ஈர்த்தது, இது E விளையாட்டுக்கள் வரலாற்றில் மிகப்பெரிய நிகழ்வாகும்.

இந்நிகழ்வின் இறுதியில் 2024 ஆம் ஆண்டுக்கான E விளையாட்டுக்கள் உலகக் கிண்ணத்தின் சாம்பியன்களாக சவூதியின் ஒரு குழுவான Team Falcons தெரிவாகியது. உலகக் கிண்ணத்தை அந்நாட்டு முடிக்குரிய இளவரசர் முஹம்மத் பின் சல்மான் கையளித்தார். Falcons கிளப் மொத்தம் $7 மில்லியன் பரிசுத் தொகையைப் பெற்றதோடு, இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க போட்டியில் சிறந்த கழகமாகவும் தெரிவானது.

Call of Duty: Warzone மற்றும் Free Fire சம்பியன்ஷிப் ஆகிய இரண்டிலும் முதல் இடத்தைப் பெற்று, 12 போட்டிகளில் 5,665 புள்ளிகளைப் பெற்று தரவரிசையில் Falcon அணி முன்னிலை வகித்தது.

இந்நிகழ்வானது கேமிங் மற்றும் E விளையாட்டுக்களில் ஈடுபடுவோர் மற்றும் ஆர்வமுள்ள சாராரை ஒன்றிணைக்கும் நோக்கில், சர்வதேச Eவிளையாட்டு வீரர்கள், ரசிகர்கள், E விளையாட்டுக்களை தயாரிப்பவர்கள் மற்றும் வெளியீட்டாளர்களை ஒரே குடையின்கீழ் கொண்டு வந்தது.

இந்த Eவிளையாட்டுப் போட்டியானது அதன் தனித்துவமான multigame மற்றும் multigenre வடிவமைப்புடன், உலகின் தலைசிறந்த கிளப்புகளுக்கு இடையேயான போட்டிகளைக் கொண்டிருந்தது மட்டுமல்லாமல், Eவிளையாட்டுக்கள் துறையை முன்னேற்றுவதற்கான சர்வதேச நிறுவனங்களின் முயற்சிகளையும் மேலும் உரமூட்டியது.

இந்நிகழ்வானது இரண்டு மில்லியனுக்கும் அதிகமான பார்வையாளர்களை ஈர்த்துள்ளது. முந்திய ஆண்டுடன் ஒப்பிடுகையில் இந்நிகழ்வுக் காலத்தில் ரியாத் நகருக்கு வருகை தந்த பயணிகளின் எண்ணிக்கை 29% அதிகரித்துள்ளது. இந்நிகழ்வின் போது 32 இற்கும் மேற்பட்ட மேலதிக பொழுதுபோக்கு மற்றும் கலாசார நிகழ்வுகளும் இடம்பெற்றன. இந்நிகழ்வானது 500 மில்லியனுக்கும் அதிகமான பார்வையாளர்களைப் ஈர்த்து மொத்தம் 250 மில்லியனுக்கும் அதிகமான மணிநேரம் பார்க்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இந்த ஆண்டுக்கான ஒரு புதிய உலக சாதனையாகவும் இது அமைந்துள்ளது.

கேமிங் மற்றும் Eவிளையாட்டுக்கள் துறையானது உலகளவில் வேகமாக வளர்ந்து வரும் முதலீட்டு மற்றும் தொழில் துறைகளில் ஒன்றாகக் காணப்படுகிறது. 2023 ஆம் ஆண்டில் மட்டும் உலகளாவிய சந்தையில் சுமார் $200 பில்லியனை எட்டியுள்ளது. சவூதி அரேபியா அன்மைக்காலத்தில் முக்கிய உலகளாவிய நிகழ்வுகளை நிகழ்த்துவதிலும் அந்நிகழ்வுகளை நோக்கி சர்வதேச மக்களை ஈர்ப்பதிலும் குறிப்பிடத்தக்க வெற்றியைக் கண்டுள்ளது. அந்த வரிசையில் Eவிளையாட்டுக்களுக்கான உலகக் கிண்ணப் போட்டியை நடத்தியமையும், 2025 ஆம் ஆண்டு Eவிளையாட்டுக்களுக்கான ஒலிம்பிக் போட்டியை நடத்துவதற்கான அறிவிப்பை சவூதி வெளியிட்டமையும் அடங்குகின்றன.






**காலித் ரிஸ்வான்...**

## மானுடவியல்



179

என்று பணிமாற, அடியார்கள் பலர் உரோமஞ் சிலிர்ப்ப, ஆனந்தவருவி சொரிந்து எங்கும் பெருகி அலைப்பத் தம்முடைய மகிமைகள் எல்லாவற்றையும் பாடி ஆட, இவற்றைக் கண்ட கேட்ட சமணப்புல்லர்களெல்லாரும் ஓட்டெடுக்க, அற்புத சின்மயத் திருவருள் வடிவாகிய முத்துச் சிவிகையின் மேலே, முத்துக்குடைநிழற்ற எழுந்தருளி வந்தார். சத்திய நிர்மல சிவ ஞானானந்த வடிவாகிய பிள்ளையார் இப்படி எழுந்தருளி வரும்பொழுது ஒப்பில்லாத முத்துச்சின்னம் உலகமெல்லாம் உய்யும்படி ஊதுகின்ற அதிமதுரமாகிய பேரொலியானது குலச்சிறைநாயனாருடைய திருச்செவிகளிலே திவ்வியாமிர்தம் போலப் புகுந்து சுவைக்க, உடனே அந்நாயனார் பூமியிலே விழுந்து நமஸ்கரித்து, அளத்தற்கரிய பெருங்களிப்பினையுடையராகி எழுந்து, இரண்டு கைகளும் சிரசின்மேல் ஏறிக்குவிய, உரோமாஞ்சங்கொள்ள, எதிரே கடுகி நடந்தார். பிள்ளையாரோடு கூடி வருகின்ற அடியார்கள் திருக்கூட்டத்தை நெடுந்தூரத்திலே கண்டு வணங்கி, எழுந்து விரைந்து சமீபத்திற் சென்று, ஆனந்தபரவசராகி அடியற்ற மரம்போல நிலத்திலே விழுந்து கிடந்தார். அக்குலச்சிறைநாயனாரை எதிரே வந்த அடியார்கள் பலர் வணங்கி, அவர் பூமியினின்று எழாமையைக் கண்டு, திரும்பித் திருஞானசம்பந்தமூர்த்தி நாயனாரை அடைந்து வணங்கி, வாய்பொத்தி நின்று "சுவாமி! பாண்டியனுடைய மந்திரியாராகிய குலச்சிறையார் திருமுன்னே வந்து அடியற்ற மரம்போல விழுந்து கிடக்கின்றனர்" என்று விண்ணப்பஞ் செய்தார்கள். சர்வசீவ தயாநிதியாகிய பிள்ளையார் அதுகேட்டு, திருமுகத்தாமரை மலர்ந்து, முத்துச்சிவிகையினின்றும் இறங்கி, விரைந்து சென்று, அவரை அணைந்து, தம்முடைய அருமைத் திருக்கரங்களினாலே பற்றி எடுக்க; அத் திருக்கரங்கள் தீண்டுதற்குப் பூர்வசன்மங்களிலே அநந்தகோடி சிவபுண்ணியங்களைச் செய்திருந்த குலச்சிறை நாயனார், அப்பிள்ளையாருடைய திருமுகமண்டலம் பொழியா நின்ற பெருங்கருணை வெள்ளத்திலும் தம்முடை கண்ணின்று பொழியா நின்ற ஆனந்த வெள்ளத்திலும் முழுகி, உரை தடுமாற, உரோமஞ் சிலிர்ப்ப, சரீரம் நடுங்க, எழுந்து, கைகளைச் சிரமேற் குவித்து நின்றார். பிள்ளையார் அவர் மீது திருவருணோக்கஞ் செய்து, "அன்பரே! பாண்டிமாதேவியாருக்கும் உமக்கும் நமது கடவுளாகிய சிவபெருமானது திருவருள் பெருகும் நன்மை தான் வாலிதே" என்று சொல்லியருள.



(தொடரும்)

கலாநிதி சிவஸ்ரீ
கு.வை.க. வைத்தீஸ்வர குருக்கள்
தலைவர், இந்துக் குருமார் அமைப்பு.

## களுவாஞ்சிக்குடி ஸ்ரீதேவி பூமிதேவி வெங்கடேஸ்வர மகா விஷ்ணு தேவஸ்தான கும்பாபிஷேகம்

இழக்கிலங்கையின் மட்டக்களப்புக்கு தெற்கே 16 மைல் தொலைவில் பிரதான வீதியில் வடக்கே களுதாவளையையும் தெற்கே ஓந்தாச்சிமடமும் கிழக்கே வங்கக்கடலையும் மேற்கே மட்டக்களப்பு வாவியையும் எல்லையாகக் கொண்ட பழம்பெரும் கிராமமே களுவாஞ்சிகுடியாகும். இத்தகைய பழைமைவாய்ந்த கிராமத்தில் பிரதான வீதியில் பழம் பெரும் பதியே மகா விஷ்ணு தேவஸ்தானம் ஆகும்.



**ஆலய வரலாறு:**

இக் கோயில் இற்றைக்கு 200 வருடங்களுக்கு முன் ஆறுமுகக் குருக்கள் பெரிய தம்பிக்குருக்களால் ஆரம்பிக்கப்பட்டது.

இவர் பெரிய கவுத்தன்குடியைச் சேர்ந்த மரபினராவர். இவரது மருகரான முருகுக் குருக்கள் இதனை நிருவகித்து வந்தார். இவருக்கு இந்தியாவில் இருந்து வந்த ஓர் சன்னியாசியாரால் ஒரு விஷ்ணு சிலை கொடுக்கப்பட்டது. அதனை அவர் கோயிலில் பிரதிஷ்டை செய்து வழிபட்டு வந்தார். இந்த உருவச்சிலை இன்றும் இவ் ஆலயத்தில் காணக்கூடியதாகவுள்ளது.

பெரிய தம்பிக்குருக்களின் மகனான (வெள்ளையப்போடியாரின் மகன்) கார்த்திகேசு இராமநாதனிடமும் அவர் சகோதரிகள் ஐந்து பேரிடமும் கோயில் பொறுப்பை ஒப்படைத்தார். இவரும் இவர் ஐந்து சகோதரியும் சேர்ந்து முருகக் குருக்கள் ஒத்துழைப்போடு ஆலயம் அமைத்து கும்பாபிஷேகம் செய்தார்கள்.

பின்னர் தமது மூத்த சகோதரியின் மகனான கணபதி கந்தையாவிடம் பொறுப்பை ஒப்படைத்தனர். அதன் பின்னர் மீண்டும் இராமநாதனிடம் ஒப்படைத்தார். தம்பிமுத்து இராசை கங்கணியாரிடம் ஆலய பொறுப்பினை ஒப்படைத்தனர். தமது சகோதரியின் ஆண் மகனே வருங்காலத்தில் அனைத்து கோயிலையும் நடாத்த வேண்டும்மென்று ஆணை பிறப்பித்திருந்தார். அத்தோடு நீர்செக நாதக் குருக்களுக்கும் பெரிய தம்பி குருக்களுக்கும் பேரனான படியால் கோயிலை நடாத்த தகுதி உண்டு என்று ஆலோசனை வழங்கியிருந்தார்.

இராம நாதனும் அவரது சகோதரி ஐந்து பேரும் சேர்ந்து 1948 ஆம் ஆண்டில் ஆலத்தை புனர்நிர்மாணம் செய்யது மகா கும்பாபிஷேகத்தை நடத்தினார்கள். இராசையா கங்கணியாரின் மறைவுக்குப் பின்னர் கோயில் பொறுப்பினை பொன்னம்பலம் கந்தசாமியின் ஆலோசனைபடி நடாத்திக் கொண்டு வந்தனர்.

இக் காலப்பகுதியில் புதுப்பிக்க வேண்டிய நிலையில் அதற்காக வள்ளிப் பிள்ளையின் மகனான ஞானசெல்வத்தின் கணவரான மாணிக்கப்பிள்ளையை பெருளாராக நியமித்து திருப்பணி தொடங்கப்பட்டது. இதற்கு தருமரத்தினம், கணபதிப்பிள்ளை, பண்டரிநாதன் ஆகியோரும் பெருஉதவியை நல்கி ஊர் மக்களிடம் உதவி பெற்று 1972 ஆம் ஆண்டு கும்பாபிஷேகம் செய்து வைத்தனர்.

பன்னிரண்டு ஆண்டுக்கு ஒருமுறை கும்பாபிஷேகம் செய்யவேண்டும் என்ற நியதிக்கமைய கந்தசாமி பண்டரிநாதன் ஓய்வு பெற்ற ஆசிரியர் தலைமையில் நடைபெற்றது.

இதன் பின்னர் மீண்டும் பாலஸ்தாபனம் செய்யப்பட்டு மஹா கும்பாபிஷேகமும் 2024 ஆம் ஆண்டு 30.08.2024 ஆம் திகதி குடமுழுக்கு பெரும் சாந்திப் பெருவிழா நடைபெற்றது. இதற்கு முன்னதாக 28.08.2024, 29.08.2024 ஆகிய இரு தினங்களும் எண்ணெய் காபபு இடம் பெற்றது.

கும்பாவிஷேகத்தை தொடர்ந்து மண்டலாபிஷேக பூசைகள் நடைபெற்று வருகின்றன. மண்டலாபிஷேக பூசைகள் எதிர்வரும் 11.09.2024 ஆம் திகதி புதன்கிழமை சங்காபிஷேகத்துடன் நிறைவு பெறவிருக்கின்றது.

கலைச்சுடர், இலக்கிய வித்தகர், முத்தமிழ்மாமணி
நாராயணபிள்ளை–நாகேந்திரன்




## தேற்றாத்தீவு கொம்புச்சந்திப்பிள்ளையார் ஆலயத்தில் விநாயகர் சதுர்த்தி

எதிர்வரும் விநாயகர் சதுர்த்தி தினமாகிய சனிக்கிழமை 07.09.2024 மாலை தேற்றாத்தீவு கொம்புச்சந்திப்பிள்ளையார் பேராலயத்தில் மகா கணபதி ஹோமமும் (ஹோமத்தில் தங்களது கைகளினால் ஆகுதிகள் இடலாம்) கணேசர் அபிஷேகமும் இடம்பெற உள்ளது.

**கணேசர் அபிஷேக பொருட்கள்**

#மேஷ ராசிக்காரர்கள் மஞ்சள் பொடி #ரிஷப ராசிக்காரர்கள் சானப் பொடி #மிதுன ராசிக்காரர்கள் எலுமிச்சை சாறு #கடக ராசிக்காரர்கள் பச்சரிசி மா#சிம்ம ராசிக்காரர்கள் பஞ்சாமிருதம் #கன்னி ராசிக்காரர்கள் தோடம்பழம் சாறு #துலாம் ராசிக்காரர்கள் தேன் கொண்டு#விருச்சக ராசிக்காரர்கள் இளநீர் #தனுசு ராசிக்காரர்கள் மஞ்சள் பொடி/தேன் #மகர ராசிக்காரர்கள் சந்தனம்#கும்ப ராசிக்காரர்கள் பஞ்சாமிருதம் #மீன ராசிக்காரர்கள் மஞ்சள் பொடி அல்லது இளநீர்.

12 ராசிக்காரளுக்கான அபிஷேகம் பண்ணும் சந்தர்ப்பம் எமது ஆலயத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றது.

அன்றைய தினம் இரவு கலை நிகழ்வுகள் கூட்டு வழிபாடு மூல மூர்த்திக்கு விசேட பூஜையும் வசந்த மண்டப பூஜை சுவாமி உள்வீதி உலா வெளியீடு விழா என்பன இடம் பெறுவதோடு மறுநாள் காலை இந்து சமுத்திரத்தில் தீர்த்த உற்சவமும் அதனைத் தொடர்ந்து விரதம் அனுஷ்டித்த அடியார்கள் ஆலயத்தில் பாரணை( அன்னதானம்) செய்யக்கூடிய வாய்ப்பும் உள்ளது.

ஆண்டுக்கு ஒரு முறை இடம் பெறும் கணபதி ஹோமம் மற்றும் கணேசர் அபிஷேகத்தில் கலந்து அருள் பெற்றுக் கொள்ளுமாறு ஆலயத்தின் பரிபாலன சபையினர் அழைக்கின்றார்கள்.



## சிவஸ்ரீ சாம்பசிவ மணிக் குருக்களின் தலைமையில் சென்னை கே.கே. நகர் ஆலய கும்பாபிஷேகம்

தமிழ்நாடு, சென்னை, விருகம் பாக்கம் கே கே. நகரில் அமைந்திருக்கும் புராதன ஸ்ரீமாரியம்மன் திருக்கோயிலின் கும்பாபிஷேகம் எதிர்வரும் 2024.11.27ஆம் திகதி நடைபெறவுள்ளது. இவ்வாலயத்தின் கும்பாஷேகத்தினை ஆலயத்தின் பிரதம குருக்கள் சிவஸ்ரீசாம்பசிவ மணிக் குருக்கள் நடத்தி வைப்பார். இந்த கும்பாபிஷேக கிரியைகள் எதிர்வரும் 2024.09.05 ஆம் திகதி மாலை ஆரம்பமாகும்.

பொதுவாக இவ்வாறான கும்பாபிஷேக கிரியைகளை நடத்த இலங்கையிலுள்ள ஆலய தர்மகர்த்தாக்கள், இந்தியாவில் இருந்து தான் இலங்கைக்கு சிவாச்சாரியார்களை அழைத்து வருவார்கள். இந்த கும்பாபிஷேக கிரியைகளை நடத்த இவர் இலங்கையில் இருந்து சிவாச்சாரியர்களை அழைத்து வர திடடமிட்டுள்ளார். இவர் இலங்கையில் இருக்கும்போது கொழும்பு 13, விவேகானந்தா மேட்டில் உள்ள ஸ்ரீ ராஜராஜேஸ்வரி அம்பாள் ஆலயத்தை சிறப்பாக நடத்தி வந்தமை குறிப்பிடத்தக்கது.

## யுகரிஷியின் ஆன்மிகச் சிந்தனைகள் - அத்தியாயம் 101



விதை விதைக்கிறோம், மரம் வளர்கிறது. மரத்திற்கு மூலமாக விளங்குவது விதையாகும். அதே போல மனித வாழ்க்கைக்கும் ஒரு மூல விதை உள்ளது. அதனை நாம் கடவுள் என்றும், பரப்பிரம்மம் என்றும் பரமாத்மா என்றும் பகருகிறோம். மூலவிதையான பரமாத்மாவிடமிருந்து நாம் விலகிச் செல்வதால் தான் மனிதர்களாகிய நாம் அமைதியிழந்து, புனிதம் கெட்டு தனிப்பட்டு நிற்கிறோம்.

வாழ்க்கையின் மூலாதாரமாக இறைவனுடன் நாம் நம்மை இணைத்துக் கொள்ள வேண்டும். அப்போது தான் அவன் மனம் விசாலமடையும். சமுதாயக் கடலில் மூழ்குவதால் தனி மனிதன் தன்னுடைய அகந்தை, சுயநலம். பதுக்கல், ஹிம்சை. சூழ்ச்சி போன்ற தீயவைகளிலிருந்து விடுபடமுடியும். பரமாத்மாவுடன் ஒன்று சேர்வதால். பொறாமை, தனிமை மரண பயம் போன்றவை நீங்கும். விளங்கும்

நாலாபுறமும் பரவியிருப்பது மரத்தின் இயல்பு, நாமும் பரந்த மனப்பான்மையுடன் செயல் புரிவோம். வீடு, குடும்பம், சமூகம், தேசம். உலகம் ஆகியவைகளுடன் அன்பு, பாசம், மரியதை நற்குணம் வெளிப்படுத்துவோம். நிழல் வேண்டுவோர்க்கு நிழலாகவும், மழை வேண்டுவோர்க்கு மழையாகவும், உதவி வேண்டுவோர்க்கு உதவி வழங்கவும் நாம் தயாராக இருக்க வேண்டும். தனி மனிதனாக இருந்து உதவுவதை விட சமூகத்துடன் சேர்ந்து உதவும் போது பரந்தளவில் உதவிட முடியும்.

நம் நிலை உயரும் போது நாம் கடவுளை மறந்து விடக் கூடாது. மறந்தால் மீண்டும் நாம் ஜடப் பொருளாகி விடுவோம். அந்த ஜடப் பொருள்களிலிருந்து விலகி, மேம்பட்டு இறைவனை பரமாத்மாவை அடைவதற்காகத்தான் இந்த நமக்கு மானுடப்பிறவி கிடைத்துள்ளது.

சின்னதாக ஒரு சங்கடம் வந்து விட்டாலே பலர் பெரிய அளவில் பயந்து குய்யோ முய்யோ என கதறுவதை நாம் பார்த்துள்ளோம். கடவுள் மீதே அவர்களுக்கு அவநம்பிக்கை வந்து விடுகிறது. இது முறையல்ல, சரியல்ல. வாழ்வில் எந்நேரமும், எப்போதும் பிரச்சினைகள் வரத்தான் செய்யும். அதற்காக, நாம் கலங்கி விடக் கூடாது. இம்மாதியான சங்கடங்கள் கடவுள் தன் குழந்தைகளிடம் விளையாடும் ஒரு விளையாட்டு என்று நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

பேப்பரில் வரையப்பட்ட பூதம், சிங்கம், புலி போன்ற முகமூடி அணிந்து கொண்டு ஒரு தந்தை குழந்தைகளிடம் வேடிக்கை காட்டுவது போலவே சில சங்கடங்களை தந்து கடவுள் நம்மிடம் விளையாடுகிறார். தன் தந்தை முகமூடி அணிந்து பயப்படச் செய்வதை பழகிப்போன பின் குழந்தை பயப்படுவதை நிறுத்திக் கொள்ளும். இதே போல் சங்கடங்கள் தாங்கி கொள்ளக் கற்றுக் கொள்ளும் போது எப் பிரச்சனைகளையும் எதிர்த்து போராடும் குணம் நமக்கு உண்டாகும்.

கடவுள் மீது முழு நம்பிக்கை கொள்ளாதவனுக்குத் தான் பிரச்சினைகள் பயமுறுத்தும். அப்படிப்பட்டவன் தான் சூழ்நிலையை கண்டு பயப்படுகிறான். எவன் கடவுளிடம் முழு நம்பிக்கை வைத்துள்ளானோ, கடவுளை சர்வ ஒருவன் வல்லமை படைத்தவனாகக் கருதுகிறானோ, கடவுள் நிச்சயம் நமக்கு கருணை காட்டுவார் என நம்புகிறானோ, கடவுளை தாய் தந்தையாக கருதுகிறானோ அவனுக்கு எந்த சூழ்நிலையும் நல்லதையே செய்யும். கடவுளின் தொடர்பை துண்டித்துக் கொண்டவனே அனைத்திற்கும் பயப்படுவான்.

## அறநெறி அறிவுநொடி



கே. ஈஸ்வரலிங்கம்
தமிழர் நற்பணி மன்றத் தலைவர்

**ஆதீனம்**

**20221) சைவ சித்தாந்தத்தை வளர்க்கவும், அதை மக்களிடையே பரப்பவும் தோற்றுவிக்கப்பட்ட மடங்கள் என்னவென்று அழைக்கப்படுகின்றன?** ஆதீனம்

**20222) இந்த மடங்களின் தலைவர்கள் என்னவென்று என்று அழைக்கப்பட்டனர்?** ஆதீனகர்த்தர்கள்

**20223) ஆதீனங்கள் தோற்றுவிக்கப்பட்டதற்கான காரணங்கள் என்ன?**

"சைவ சித்தாந்தத்தில் இந்த மடங்களை தோற்றுவித்ததற்கு ஒரு நீண்ட வரலாறு உண்டு.

**20224) இந்த மடங்களின் முக்கிய நோக்கம் சைவ சித்தாந்த கொள்கையை நடைமுறைப்படுத்துவது." என்று யார் கூறுகிறார்?**

சென்னை பல்கலைகழகத்தின் சைவசித்தாந்த துறையின் தலைவர் முனைவர் நல்லூர் சரவணன்.

**20225) தமிழ் வளர்ப்பதே ஆதீனங்களின் நோக்கம் என்று யார் கூறுகிறார்?**

பேராசிரியர் அருணன்.

**20226) முதலில் தோன்றிய ஆதீனம் எது?**

முதலில் தோன்றிய ஆதீனம் எது என்பது குறித்து வரலாற்று ரீதியாக பல்வேறு கருத்துகள் உள்ளன.

திருவாவடுதுறை ஆதீனம்தான் முதலில் வந்தது அதிலிருந்துதான் தருமபுரம் ஆதீனம் தோன்றியதாக பேராசிரியர், ஆய்வாளர் அருணன் தெரிவிக்கிறார்.

அதன்பின் அந்த தருமபுர ஆதீனத்திலிருந்து வேறு சில ஆதீனங்கள் தோன்றின என்கிறார் அவர்.

**20227) ஆனால் மதுரை ஆதீனம் தான் பழமையானது என்று கூறுபவர் யார்?** நல்லூர் சரவணன்.

**20228) 63 நாயன்மார்களில் ஒருவரான திருஞானசம்பந்தர் இந்த மடத்தை தோற்றுவித்ததாக கூறுபவர் யார்?** நல்லூர் சரவணன்

அதற்கு ஆதாரம் இல்லை என்கிறார் அருணன்.

**20229) பட்டினப் பிரவேசம் என்றால் என்ன?**

ஆதீனகர்த்தரை பல்லக்கில் சுமந்து மடங்களை சுற்றியுள்ள வீதிகளில் வலம் வருவது தான் பட்டினப் பிரவேசம்.

**20230) திருவாவடுதுறை ஆதீனம் இப்போது பேசுபொருள் ஆவது ஏன்?**

1947ஆம் ஆண்டு இந்தியா பிரிட்டிஷாரிடம் இருந்து விடுதலை பெற்ற போது, பிரிட்டிஷாரிடம் இருந்து ஆட்சி கைமாறியதைக் குறிக்கும் வகையில், சோழர் கால நடைமுறையான 'செங்கோல்' வழங்கும் நடைமுறை பின்பற்றப்பட்டதாக கூறப்படுகிறது.

அப்போது, தமிழ்நாட்டைச் சேர்ந்த திருவாவடுதுறை மடாதிபதி அதில் பங்கு வகித்ததாகவும் செங்கோலை மவுண்ட் பேட்டனிடம் கொடுத்து பின் அவரே வாங்கிக் கொண்டார் என்றும் புதிய நாடாளுமன்றத்தில் வைக்கப்படும் செங்கோல் குறித்து செய்தியாளர்களுக்கு அளிக்கப்பட்ட விளக்கத்தில் தெரிவிக்கப்பட்டது.

அதைத் தொடர்ந்து செங்கோல் மற்றும் திருவாவடுதுறை ஆதீனம் தொடர்பான விஷயங்கள் சமூக ஊடகங்களில் பேசுபொருளாகின.

## கொட்டாஞ்சேனை ஸ்ரீஸ்ரீ ராதா கிருஷ்ண ஆலயத்தில் ஸ்ரீ கிருஷ்ண ஜன்மாஷ்டமி



பகவான் ஸ்ரீகிருஷ்ணர் அவதரித்த நன்னாள் ஸ்ரீகிருஷ்ண ஜன்மாஷ்டமி விழா, ஸ்ரீகிருஷ்ண ஜெயந்தி விழா கடந்த 26ஆம், 27ஆம் திகதிகளில் கொழும்பு, கொட்டாஞ்சேனை ஸ்ரீஸ்ரீ ராதா கிருஷ்ண ஆலயத்தில் பக்திபூர்வமாகக் கொண்டாடப்பட்டது. இதன்போது இரண்டாம் நாள் மாலை சந்தியா ஆரத்தியைத் தொடர்ந்து ஹரே கிருஷ்ணா இசை நாட்டியக்கல்லூரி மாணவிகள் வழங்கிய கலை நிகழ்ச்சிகள் இடம்பெற்றன. இதில் சில அம்சங்களையும், வருகை தந்திருந்த மக்களில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம்.



மலையக அபிவிருத்தி மன்றத்தின் 18ஆவது வருட ஆண்டு பூர்த்திவிழாவையொட்டி கொழும்பு செட்டியார் தெரு ஸ்ரீ முத்து விநாயகர் ஆலயத்தில் இடம்பெற்ற சிறப்பு பூஜையின்போது எடுக்கப்பட்ட படம். (படம்: வட கொழும்பு தினகரன் நிருபர்)

### ஐக்கிய அரபு அமீரகத்தில்

# வீசா இன்றி தங்கியிருப்பவர்களுக்கு பொதுமன்னிப்புக் காலம் அறிவிப்பு

## செப். 01 முதல் ஒக் 31 வரை அமுல்

ஐக்கிய அரபு அமீரகத்தில் வீசா இன்றி சட்டவிரோதமாக தங்கியிருப்பவர்களுக்கு நேற்று 01 ஆம் திகதி முதல் இரண்டு மாத கால பொது மன்னிப்பு வழங்க அந்நாட்டு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

நேற்று செப்டம்பர் 01ஆம் திகதி முதல் ஒக்டோபர் 31ஆம் திகதி வரை 02 மாதம் பொது மன்னிப்பு காலத்தை வழங்க ஐக்கிய அரபு இராச்சியத்தின் ஆட்கள், சுங்க மற்றும் துறைமுக பாதுகாப்பு அதிகாரசபை நடவடிக்கை எடுத்துள்ளது.

தொழில் வழங்குநர்களின் சட்டப்பூர்வ அனுமதியின்றி பணியிடத்தை விட்டு வெளியேறுபவர்கள் மற்றும் செல்லுபடியாகும் விசா இல்லாதவர்கள் இந்த பொது மன்னிப்புக் காலத்தில் நாட்டை விட்டு வெளியேறவோ அல்லது உரிய விசா உள்ளிட்ட ஆவணங்களை சட்டப்பூர்வமாக தயாரிக்கவோ அபராதம் செலுத்தாமல் இருப்பதற்கோ வாய்ப்பு கிடைக்கும்.

பொதுமன்னிப்புக் காலப்பகுதியில் அந்நாட்டில் சட்டவிரோதமாக தங்கியுள்ள இலங்கையருக்கு தூதரக சேவைகளை வழங்க விசேட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக டுபாயிலுள்ள இலங்கை தூதரக அலுவலகம் அறிக்கை ஒன்றின் மூலம் அறிவித்துள்ளது.



அதன்படி, சாதாரண தூதரக சேவைகளுக்கு மேலதிகமாக, டுபாயிலுள்ள இலங்கை துணைத் தூதரகம் திங்கள் முதல் வெள்ளி வரை பிற்பகல் 2.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை திறந்திருக்கும்,

அபுதாபியிலுள்ள இலங்கை தூதரகம் ஆலோசனை ஆதரவு சேவைகளுக்காக திங்கள் முதல் வெள்ளி வரை காலை 10.00 மணி முதல் அதிகாலை 5.00 மணி வரை திறந்திருக்கும்.

இப்பொதுமன்னிப்பு காலப்பகுதியில் இலங்கையிலிருந்து ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் தற்காலிக பயண ஆவணங்களை இலங்கையிடம் கோருவரென எதிர்பார்க்கப்படுவதாக டுபாயிலுள்ள இலங்கை துணைத் தூதரகம் வெளியிட்டுள்ள அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொது மன்னிப்புக் காலத்தின் போது, ஐக்கிய அரபு இராச்சியத்தில் சட்டவிரோதமாக தங்கியுள்ள இலங்கையர், உரிய வீசாவை சட்டரீதியாக தயார் செய்யுமாறு இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகம் அவர்களைக் கோரியுள்ளது. அவர்கள் சட்டவிரோதமாக தங்கியிருந்தால், தமக்கு அறிவிக்குமாறு இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் பொதுமக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளது.



திருக்கயிலாய பரம்பரை கந்தப் பரம்பரை சூரியனார் கோயில் ஆதீனம் ஸ்ரீகார்யம் அருட்குருநாதர் தவத்திரு ஸ்ரீமத் சிவாக்கர தேசிக சுவாமிகள் அண்மையில் இந்து கலாசாரத் திணைக்களத்துக்கு விஜயம்செய்து இந்து கலாசாரத் திணைக்களத்தின் பணிப்பாளர் ய. அநிருத்தனனை சந்தித்தார். பிரணவம் அறக்கட்டளையின் ஸ்தாபகத் தலைவர் ரமேஷ்பாபு சித்ர வேலும் அருகில் காணப்படுகின்றார்.



ஸ்ரீதர்ம சாஸ்தா சேவா சங்கத்தால் ஏற்பாடு செய்யப்பட்டு நடத்தப்பட்ட 5ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சைக்கான கருத்தரங்கு 2024.08.24ஆம் திகதி தெஹியோவிற்ற தமிழ் பாடசாலையின் பிரதான மண்டபத்தில் நடைபெற்றது. இலவசமாக நடத்தப்பட்ட இந்த கருத்தரங்கில் பங்குபற்றியவர்களுக்கு காலை, பகல் உணவுகளும் கருத்தரங்குக்கு தேவையான கற்றல் உபகரணங்களும் இலவசமாக வழங்கப்பட்டன. கருத்தரங்கில் பங்குபற்றியவர்களுக்கு பங்குபற்றியமைக்கான சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. இங்கு நடத்தப்பட்ட பரீட்சையில் அதிக புள்ளிகள் பெற்ற மாணவர்கள் பதக்கம் அணிவித்து கௌரவிக்கப்பட்டார்கள். இலங்கையின் முன்னணி ஆசிரியரான பேரின்பராஜா வளவாளராக கலந்து கொண்டு கருத்தரங்கை நடத்தினார் என ஸ்ரீதர்ம சாஸ்தா சேவா சங்கம் அறிவித்துள்ளது.

## இன்றைய பலன்கள்

(02.09.2024)



கலாநிதி சிவஸ்ரீ இராமசந்திர குருக்கள் பாபு சர்மா
(ஸ்ரீ வித்யா ஜோதிட நிலையம் கொழும்பு)

**மேஷம்:**
முக்கிய புள்ளிகள் சந்திப்பும் அதனால் முன்னேற்றமும் ஏற்படும். தொழில் மற்றும் வியாபாரத்தில் இருந்த குறுக்கீடுகள் அகலும்.

**ரிஷபம் :**
விரயத்திற்கு ஏற்ற வரவு வந்து சேரும். எந்த ஒரு காரியத்தையும் பணம் கைக்கு வந்ததும் செய்யலாம் என்று நினைத்தால் அது நடக்காது.

**மிதுனம்:**
புதிய வாகனம் வாங்கும் யோகம் உண்டு. ஊர் மாற்றம் உங்கள் உள்ளத்தை மகிழ்விப்பதாக அமையும்.

**கடகம்:**
சொத்து விற்பனையும் அதனால் தன லாபம் கிடைக்கலாம். கட்டிய வீட்டை விற்று விட்டோமே என்று கவலைப்பட்டவர்களுக்கு இப்பொழுது புதிய வீடு வாங்கும் யோகம் உண்டு.

**சிம்மம்:**
பயணங்கள் அதிகரிக்கும். உடன்பிறப்புகள் ஒற்றுமையோடு செயற்பட்டு பாகப்பிரிவினைக்கு முன்வருவர்.

**கன்னி:**
கூட்டாளிகளை நம்பி ஏமாறும் சூழ்நிலையும் உண்டு. உடன் பிறப்புகள் உங்கள் மீது பழி சுமத்தலாம்.

**துலாம்:**
வீடு வாங்க வேண்டும் இட வாங்க வேண்டும் மனை கட்டி குடியேற வேண்டும் என்ற அசை இப்பொழுது ஒவ்வொன்றாக நிறைவேறும்

**விருச்சிகம்:**
ஆரோக்கியத்தில் கவனம் செலுத்த வேண்டும். மருத்துவ செலவுகள் அதிகரிக்கலாம். தொழிலில் இடமாற்றம் வருவதற்கான அறிகுறி தென்படும்.

**தனுசு:**
படித்து முடித்த பிள்ளைகள் இருந்தால் அவர்களுக்கு வேலையும் கிடைக்கும். திருமண முயற்சியும் கைகூடும்.

**மகரம்:**
தொழில் நடத்துபவர்களுக்கு இக்காலம் ஒரு பொற்காலமாக அமையும். தொழிலில் லாபம் கிட்டும்.

**கும்பம்:**
பொருளாதாரத்தில் மிகப்பெரிய முன்னேற்றம் ஏற்படும் .சமூகத்தில் மிக உயர்ந்த அந்தஸ்தை பெறுவீர்கள்.

**மீனம்:**
நண்பர்களும் உறுதுணையாக இருப்பர். உத்தியோகத்தில் கைநழுவி சென்ற வாய்ப்புகள் மீண்டும் கை கூடி வரும்.

## ஜனாதிபதியாக மீண்டும்...

வேண்டும், ஜனநாயக நாடுகளில் முதல் பதவி காலத்துக்கு தெரிவு செய்யப்படுகின்ற ஜனாதிபதியின் செயற்பாடுகள் திருப்தியாகவும், நம்பிக்கையை ஏற்படுத்துகின்ற வகையில் அமைந்தால் மக்கள் அவருக்கு மீண்டும் ஒரு பதவி காலத்தை வழங்குவார்கள்.

சிங்கப்பூர், மலேசியா போன்ற நாடுகளை முன்னுதாரணமாக கொள்ள முடியும். ஆனால் எமது நாட்டில் ஏற்பட்ட நிலைமை வித்தியாசமானது. ஐந்தாண்டுகளுக்கு ஆட்சி பொறுப்பு வழங்கப்பட்ட கோத்தாபய ராஜபக்ஷவின் ஆட்சி மக்களுக்கு திருப்தி கொடுக்கவில்லை.

இதனால் மக்களின் எதிர்ப்பலையால் முழுமையான பதவி மூன்றாண்டுகளுக்கு முன்பாகவே அவர் ஆட்சியிலிருந்து விலக நேர்ந்தது. இந்நிலையில் எமது நாட்டின் அரசியல் அமைப்பின்படி மக்களின் வாக்குகளால் அன்றி மக்களால் பாராளுமன்றத்துக்கு அனுப்பப்பட்ட பிரதிநிதிகளால் நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஆவார்.

இவர் பதவியேற்றபோது மிக பாரதூரமான பொருளாதார நெருக்கடி நாட்டில் புரையோடி காணப்பட்டது. நாட்டை பழைய நிலைக்கு மீட்டு எடுக்க கடந்த இரு வருடங்களையும் அவர் கச்சிதமாக பயன்படுத்தினார். இப்போது மக்கள் நிம்மதி பெருமூச்சு விட்டு கொண்டிருக்கின்ற தருணத்தில்தான் தேர்தல் வந்துள்ளது.

கடந்த இரண்டு வருடங்களில் அவரால் ஏற்படுத்தி தரப்பட்ட முன்னேற்றங்களை மக்களாகிய நாம் ஏற்று கொண்டிருக்கின்றோம். எனவே நாம் ஜனநாயக விழுமியங்களை மதிப்பவர்களாக நடந்து அடுத்த ஐந்து வருடங்களுக்கு ரணில் விக்கிரமசிங்கவை மீண்டும் ஜனாதிபதியாக ஏற்று கொள்ள வேண்டும். நாட்டை அடுத்த கட்ட அபிவிருத்தி கொண்டு செல்ல அவருக்கு கட்சி அரசியலுக்கு அப்பால் வாய்ப்பு வழங்க வேண்டும்.

இவர் தூர நோக்குடைய செயல் திட்டங்களை வைத்திருக்கின்றார். இளையோர்களுக்கான தொழில் வாய்ப்பு, குடும்பங்களுக்கான வாழ்வாதாரம், வீட்டு திட்டம், பிராந்தியத்தின் சிறந்த தகவல் தொழில் நுட்பம், சகல இனங்களுக்கும் சமவுரிமை போன்ற தூர நோக்கு திட்டங்களூடாக இலங்கையர்களாக நம் எல்லோரையும் பெருமை அடைய செய்ய வல்லவராக விளங்குகின்றார் என அவ் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது

## பெற்றோல், டீசலின்...

379 ரூபாவாக காணப்பட்ட ஒக்டேய்ன் 95 ரக பெற்றோல் லீற்றரின் விலை 02 ரூபாவினால் குறைக்கப்பட்டுள்ளதுடன், அதன் புதிய விலை 337 ரூபாவாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

317 ரூபாவாக காணப்பட்ட ஓட்டோ டீசல் லீற்றரின் விலை 10 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளதுடன் அதன் புதிய விலை 307 ரூபாவாக அறிவிக்கப்பட்டுள்ளது.

355 ரூபாவாக விற்கப்பட்ட லங்கா சுப்பர் டீசல் 04 ஸ்டார் யூரோ 04 இன் லீற்றர் ஒன்றின் விலை 03 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளதுடன் அதன் புதிய விலை 352 ரூபாவாக குறிப்பிடப்பட்டுள்ளது.

மண்ணெண்ணெய் விலையில் மாற்றம் செய்யப்படாததால் ஒரு லீற்றர் 202 ரூபாவுக்கே தொடர்ந்தும் விற்பனை செய்யப்படவுள்ளது.

அத்துடன், இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் விலைத் திருத்தத்துக்கு சமாந்திரமாக தமது எரிபொருட்களின் விலைகளை திருத்தம் செய்துள்ளதாக ஐ.ஓ.சி நிறுவனமும் அறிவித்துள்ளது.

அதேநேரம் சினோபெக் நிறுவனமும் இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் விலைத் திருத்தத்துக்கு சமாந்திரமாக எரிபொருட்களின் விலைகளை திருத்தியுள்ளது.

## சுமந்திரனின் ஆதரவு சஜித்துக்கு...

தெரிவித்தார். அவர் தொடர்ந்தும் தெரிவிக்கையில்,

மத்திய குழுக் கூட்டம் பல மணிநேரமாக நடைபெற்றது. இதில் மூன்று தீர்மானங்கள் எடுக்கப்பட்டன. ஜனாதிபதி தேர்தலில் பொது வேட்பாளராக அறிவிக்கப்பட்டுள்ள பா.அரியநேந்திரனை ஆதரிப்பதில்லையென தமிழரசுக் கட்சி தீர்மானித்துள்ளது. அத்துடன், எமது கட்சி உறுப்பினராகிய அரியநேத்திரன் ஜனாதிபதி தேர்தலிலிருந்து விலகுமாறு நாங்கள் கேட்டுக் கொள்கின்றோம்.

ஜனாதிபதி தேர்தல் 2024 இல் சஜித் பிரேமதாசவுக்கு ஆதரவு கொடுப்பதாக தமிழரசுக் கட்சி தீர்மானித்துள்ளது.

இதுவரை எமது கட்சி தீர்மானம் எதனையும் அறிவிக்காமையால் கட்சி உறுப்பினர்கள் பலவாறாக செயற்பட்டனர்.

தற்போது தீர்மானம் எடுக்கப்பட்டு சஜித் பிரேமதாசவுக்கு ஆதரவளிப்பதென தீர்மானிக்கப்பட்டுள்ளதால் கட்சி உறுப்பினர்கள் அதற்கேற்ப செயற்படுவார்கள் எனத் தெரிவித்தார்.

## பஸ் கட்டணங்களில்...

தீர்மானிக்கப்படுவதாகவும், எரிபொருள் விலை10 ரூபாவாக குறைக்கப்பட்டமை பஸ் கட்டணத்தை குறைப்பதற்கு போதுமானது அல்ல என தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்தார். விஜேரத்ன மேலும் தெரிவிக்கையில், பஸ் கட்டணத்தை குறைப்பது குறித்து பரிசீலிக்க எரிபொருள் விலை 25 ரூபாவால் குறைப்பது அவசியம் என்றும் அவர் மேலும் கூறினார்.

## ரூ. 200 மில். நஷ்டஈடு...

உத்தியோகத்தர் ஒருவரின் பெயரில் வழங்கப்பட்டதாக உண்மைக்கு புறம்பான அறிக்கையினால் தனது நற்பெயருக்கு ஏற்பட்ட கலங்கத்துக்காக 200 மில்லியன் ரூபாவை நட்டஈடாக வழங்குமாறு ஆளும் கட்சியின் பிரதம கொறடாவும், நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சருமான பிரசன்ன ரணதுங்க, குருநாகல் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி தயாசிறி ஜயசேகரவுக்கு இந்த கோரிக்கை கடித்த்தை அனுப்பியுள்ளார்.

உரிய இழப்பீட்டுத் தொகையை 14 நாட்களுக்குள் வழங்காவிட்டால் அதற்கான தொகையையும் அதற்கான சட்டரீதியான வட்டியையும் பெற்றுக் கொள்ள வழக்குத் தாக்கல் செய்யவுள்ளதாக அமைச்சர் தனது சட்டத்தரணி நதீஷா ஹெட்டியாராச்சி ஊடாக தயாசிறிக்கு அறிவித்துள்ளார்.

பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேக்கர மாத்தறை, அக்குரஸ்ஸவில் நடைபெற்ற கூட்டத்தில் தமது கட்சிக்காரர் ஆளும் கட்சியின் பிரதம கொறடாவும் நகர அபிவிருத்தி வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தொடர்பில் தொலைக்காட்சி, பத்திரிகைகள், சமூக ஊடகங்கள் மற்றும் காலை செய்தி வாசிப்பு நிகழ்ச்சிகளில் தெரிவித்த கருத்துக்கள் உண்மைக்கு புறம்பானவையென சட்டத்தரணி நதீஷா ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார். தற்போதைய அரசாங்கத்தின் பலமான அமைச்சரவை அமைச்சர் மற்றும் பொதுத் தேர்தலில் அதிகூடிய வாக்குகளைப் பெற்று பாராளுமன்றத்திற்கு தெரிவான எனது கட்சிக்காரர் மீதான மக்களின் நம்பிக்கையை பாரியளவில் சேதப்படுத்தும் சாத்தியக்கூறுகள் அவர்வெளியிட்டுள்ள கருத்துகளில் உள்ளதாகவும் இந்த கோரிக்கை கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகரவின் இந்தக் கருத்து தொடர்பில், அதன் ஊழியர் மதுவரி ஆணையாளர் நாயகத்திடம் கேட்ட போது, தனது வாடிக்கையாளரின் பெயரிலோ அல்லது அவரது பரிந்துரையின் பேரிலோ வேறு எவருக்கும் மதுவரி அனுமதி பத்திரம் வழங்கப்படவில்லையென எனது கட்சிக்காரருக்கு உறுதியளிக்கப்பட்டுள்ளதாகவும் சட்டத்தரணி நதீஷா ஹெட்டியாராச்சி மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## சஜித்துக்கு இந்த தேர்தலில்...

வெற்றி நாட்டின் வெற்றியாக அமையும் எனவும் தெரிவித்தார். இங்கு மேலும் தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க,

நாட்டில் நிலைத்தன்மை உருவாக்கப்பட்டதால் இன்று தேர்தல் நடத்த முடிகிறது. பங்களாதேஷில் இன்று தேர்தல் நடத்த முடியாத நிலைமை வந்துள்ளது. அன்று நான் நாட்டை நிலைப்படுத்தும் முயற்சிகளை எடுத்ததாலேயே அனுரவும் சஜித்தும் சுதந்திரமாக தேர்தலில் போட்டியிடுகின்றனர். அதனால் அவர்கள் எனக்கு நன்றி சொல்ல வேண்டும். இது தான் ரணில் ஆட்சி என்பதை அவர்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

பொருளாதாரத்தை நிலைப்படுத்த வேண்டும் என்பதே எனது தேவையாக இருந்தது. ஏற்றுமதி பொருளாதாரத்தை நோக்கி நாட்டை நகர்த்தவே நாட்டின் அதிகாரத்தை மீண்டும் தருமாறு மக்களிடம் கோருகிறேன். வீடு உடைந்தால் அதனை திருத்தியமைப்பது போல நாட்டைக் கட்டியெழுப்பவே நான் மக்கள் ஆணையை கேட்கிறேன். அனுரவும் சஜித்தும் வீட்டின் எஞ்சிய பகுதிகளுக்கும் தீவைக்க பார்க்கின்றனர்.

## ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின்...

பிற்பகல் கட்சியின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மஹிந்த ராஜபக்ஷவிடம் கையளிக்கப்பட்டிருந்தது.

ஒரு போராளியின் இதயத் துடிப்பை அறியும் அரசியல் சக்தியாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் உருவாக்கப்பட்ட ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன, நாட்டின் அபிவிருத்தி மற்றும் இளைஞர்களின் எதிர்காலம் மற்றும் அதற்கான வேலைத்திட்டம் தொடர்பில் மேற்கொள்ள வேண்டிய செயற்பாடுகளை தனது விஞ்ஞாபனத்தில் உள்ளடக்கியுள்ளது. தற்போதுள்ள சவால்களுக்கு எதிராக நாட்டை முன்னோக்கி கொண்டு செல்லும் அந்த திட்டங்கள் கண்டிப்பாக நடைமுறைப்படுத்தப்படுமென ஜனாதிபதி வேட்பாளர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

## மக்கள் தீர்க்கமான... (03 ஆம் பக்க தொடர்)

தற்போது சுற்றுலா பயணிகள் பெருமளவு வருகை தருவதால் அந்த துறை மூலம் வருமானம் அதிகரித்துள்ளது. எரிபொருள், எரிவாயு, மருந்து போன்ற அத்தியாவசிய பொருட்கள் தட்டுப்பாடு இன்றி கிடைக்கின்றன. இன்று பாடசாலைகள் திறக்கப்பட்டுள்ளன. அனைத்து துறைகளும் இயல்பு நிலைக்கு திரும்பியுள்ளன. இந்த நிலையை இழக்க முடியாது. நாட்டை மீட்டு முன்னோக்கி கொண்டுசெல்ல அனுபவமும் திறமையும் இருக்க வேண்டும்" என தெரிவித்தார்.

## கிழக்கில் ரணிலுக்கு ...(03 ஆம் பக்க தொடர்)

சம்மாந்துறைப் பகுதியில் ரணில் விக்கிரமசிங்கவை ஆதரித்து நடைபெற்ற கூட்டத்துக்கு முன்னர் கூட்ட அழைப்புகாக குதிரைகளை ஏற்பாட்டாளர்கள் காட்சி பொருளாக பயன்படுத்தி மக்களை கவர்ந்திழுக்கும் முயற்சியில் ஈடுபட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஏ.எல்.எம் அதாவுல்லாஹ்வின் தேசிய காங்கிரஸ் கட்சியின் சின்னம் குதிரை என்பதுடன் இம்முறை நடைபெறும் ஜனாதிபதி தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவை அவர் ஆதரிப்பதும் குறிப்பிடத்தக்கது.

## அலங்காரக் கந்தனின்...

உலகில் பல பாகங்களிலிருந்தும் வருகை தந்திருந்த ஆயிரக்கணக்கான அடியார்களும் நேற்றைய தேர்த் திருவிழாவில் கலந்து கொண்டனர்.

## தொழில்சார் பயிற்சிகளுக்காக...

அரசாங்கத்தின் கீழ் திருகோணமலையில் 99 எண்ணெய் தாங்கிகளைப் பயன்படுத்தி எரிபொருள் சுத்திகரிப்பு நிலையமொன்று ஆரம்பிக்கப்படுமென அவர் தெரிவித்துள்ளார். விஹாரமஹாதேவி பூங்காவில் நடைபெற்ற மக்கள் சந்திப்பின் போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

## இனவாதம் இல்லாத...

அறத்தையும், சுய கௌரவத்தையும் காட்டிக் கொடுத்து, இனவாதத்தை தூண்டியதாக எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

இனவாதத்தினால் முழு நாடும் சீரழிந்து போனது. இனவாதத்தையும் மதவாதத்தையும், இனமத பேதங்களையும் ஊக்குவிக்கின்ற யுகத்தை இல்லாமல் செய்வோம். அனைத்து இன மக்களும் துன்பப்பட்டுக் கொண்டிருக்கின்ற, வேதனையான நிலைக்கு தள்ளப்பட்டு இருக்கின்ற இந்த சந்தர்ப்பத்தில் துன்பத்தைத் துறந்து கண்ணீரைத் துடைத்து சுபிட்சமான வாழ்க்கையை உருவாக்குகின்ற பொறுப்பை ஏற்றுக் கொள்வதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

2024 ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலை முன்னிட்டு ஐக்கிய மக்கள் சக்தி ஏற்பாடு 29 ஆவது மக்கள் வெற்றிப் பேரணி எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தலைமையில் அநுராதபுரம் நாச்சியாதீவு நகரில் (30) மாலை வெற்றிகரமாக நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றும்போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

## ஐ.ம.சக்தி தேர்தல் விஞ்ஞாபனத்தில்...

கோரி வருகிறது. எனினும் ஜனாதிபதி தேர்தலில் தங்களை ஆதரிக்க வேண்டுமென தமிழ்த் தேசிய மக்கள் முன்னணிடம் ஐக்கிய மக்கள் சக்தியின் வேட்பாளர் சஜித் பிரேமதாச விடுத்த வேண்டுகோளுக்கு பதிலளிக்கும் வகையில் கடந்த ஓகஸ்ட் 28 புதன்கிழமை எழுத்துமூல தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி பதிலை வழங்கியுள்ளது.

அந்த கடித்த்திலேயே சமஷ்டியை அறிமுகப்படுத்துவதற்கான யோசனையை ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவருக்கு வலியுறுத்தியுள்ளது.

தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் சார்பில், எதிர்க்கட்சித் தலைவரின் கோரிக்கைக்கு பதிலளித்த தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளர் செல்வராசா கஜேந்திரன், ஒற்றையாட்சி ஊடாக தமிழ் மக்களின் இனப்பிரச்சினைக்குத் தீர்வு கிடைக்காதென்றும்,.

ஒற்றையாட்சியில் தற்போது நடைமுறையில் உள்ள 13ஆவது திருத்தச் சட்டம் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கான தீர்வோ அல்லது தீர்விற்கான ஆரம்பப் புள்ளியோ அல்ல என்பதே தமது கட்சியின் நிலைப்பாடு என சஜித் பிரேமதாசவிடம் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# நகர்வலம்



# அனைத்து விவசாயிகளுக்கும் MOP உரம் இலவசமாக வழங்க ஒப்பந்தம் கைச்சாத்து

## ஹம்பாந்தோட்டையில் அமைச்சர் மஹிந்த அமரவீர

**ஹம்பாந்தோட்டை குறூப் நிருபர்**

சகல விவசாயிகளுக்கும் MOP உரத்தினை இலவசமாக வழங்குவதற்கு ஒப்பந்தம் கைச்சாத்திட்டு நாட்டைக் கட்டியெழுப்பும் புண்ணியத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஈடுபட்டு வருகிறார் என விவசாய மற்றும் பெருந்தோட்ட அமைச்சரும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட உப தலைவருமான மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை ஆதரித்து ஹம்பாந்தோட்டை பஸ் நிலையத்திற்கு முன்னாலுள்ள மைதானத்தில் நடைபெற்ற 'இயலும் ஸ்ரீலங்கா' வெற்றிக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே (29) அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.



அமைச்சர் மஹிந்த அமரவீர இங்கு தொடர்ந்தும் உரையாற்றுகையில், தற்பொழுது எமக்கு புதியவர்களை பரீட்சிக்கும் காலம் இது அல்ல, இந்த நாட்டை கட்டியெழுப்பும் வேலைத் திட்டத்தினை முன்னெடுத்துச் செல்லும் திட்டத்தினை வெற்றிபெறச் செய்ய வேண்டிய பாரிய பொறுப்பு எமக்குள்ளது.

இந்த நாட்டையும் மக்களையும் ஓர் ஒழுங்கான திட்டத்தின் கீழ் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க குறுகிய காலத்தில் கட்டியெழுப்ப நடவடிக்கையெடுத்தார்.

நாடு பாரிய நெருக்கடிகளுக்கு முகம் கொடுத்திருந்த சந்தர்பத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, ஜனாதிபதியாக இருந்து நாட்டைப் பொறுப்பேற்று கட்டியெழுப்பியதனால் நாம் அவருக்கு ஆதரவினை வழங்குவதற்கு முன்வந்தோம்.

அன்று மக்கள் நீண்ட வரிசைகளில் தங்களது உயிர்களை பழிகொடுத்தார்கள். அச் சந்தர்பத்தில் இவர் துணிச்சலாக நாட்டைப் பொறுப்பேற்க முன்வந்து நாட்டை நெருக்கடிகளிலிருந்து மீட்க நடவடிக்கையெடுத்தார்.

இந்த சந்தர்பர்பத்தில் ஜனாதிபதியின் வேண்டுகோளின் பேரில் விவசாய அமைச்சுப் பொறுப்பினையேற்று விவசாயிகளுக்குத் தேவையான உரத்தினை தடையின்றி வழங்குவதற்கு நடவடிக்கையெடுத்தேன். இதனூடாக விவசாயிகள் கைவிட்டிருந்த விவசாயத்தினை ஆரம்பிக்க முடிந்தது.

எமது எதிர்கால அரசாங்கத்தில் மிகை அரிசியினை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதோடு மக்களது பொருளாதாரத்தினை கட்டியெழுப்புவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும்.

நவீன தொழில் நுட்பத்தினூடாக விவசாயத்தில் ஈடுபட்டு தொழிலற்று இருக்கும் இளைஞர் யுவதிகளுக்கு மாதாந்தம் பல இலட்சம் ரூபா வருமானத்தினை ஈட்டுவதற்கான சந்தர்ப்பமும் ஏற்படுத்தி உரத்தினை நான்காயிரம் ரூபாவிற்கு வழங்குவதற்கு நிதியொதுக்கப்பட்டுள்ளதெனவும் அமைச்சர் தெரிவித்தார்

# பல்கலை தெரிவான மாணவர்களுக்கு மடிக்கணினிகள் வழங்கிவைப்பு

**திறப்பனை தினகரன் நிருபர்**



அ/நாச்சியாதீவு முஸ்லிம் மகா வித்தியாலய மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு பல்வேறு வழிகளிலும் ஒத்துழைப்பு வழங்கி மாணவர்களின் அடைவு மட்டத்தை அதிகரிக்கும் நோக்கில் serendip நிறுவனம் பல்வேறு வேலை திட்டங்களை தற்பொழுது மேற்கொண்டு வருகின்றது. அந்த வகையில் மேற்படி பாடசாலையின் க.பொ.த. (சாதாரண) தர மற்றும் உயர்தரம் கற்கும் மாணவர்களின் பரீட்சை பெறுபேறுகளை அதிகரிக்கும் வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகின்றது.

க.பொ.த. உயர்தரம் சித்தியடைந்து பல்கலைக்கழக அனுமதிபெற்ற மாணவர்களை பாராட்டி பரிசு வழங்கி கௌரவிக்கும் நிகழ்வொன்று பாடசாலை அதிபர் ரொஹான் ஆப்தீன் தலைமையில் பாடசாலையின் பிரதான மண்டபத்தில் அண்மையில் இடம் பெற்றது .

நிகழ்வின் பிரதம அதிதியாக serendip நிறுவனத்தின் நாச்சியாதீவு முஸ்லிம் மகா வித்தியாலயத்தின் இணைப்பாளர் டாக்டர் எம்.எச்.எம். ரம்ஸான் பிரதம அதிதியாக கலந்து சிறப்பித்ததோடு நிகழ்வின் விசேட அதிதியாக நீர் கொழும்பு பலகத்துறையின் முதல் பெண் டாக்டர் எம்.ஆர்.எம். நஸ்ஹானா கலந்து சிறப்பித்தார்.



ஜனாதிபதி வேட்பாளர் ரணில் விக்ரமசிங்கவை ஆதரித்து புத்தளத்தில் தேர்தல் பிரசார கூட்டமொன்று வெள்ளிக்கிழமை (30) இரவு புத்தளம் கொழும்பு முகத்திடலில் புத்தளம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அலிசப்ரி ரஹீமின் தலைமையில் இடம்பெற்றது. இந்தக் கூட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர்களான இஷாக் ரஹ்மான், முஷாரப் முதுநபீன் மற்றும் மேல் மாகாண முன்னாள் ஆளுநர் அசாத் சாலி உட்பட ரணில் விக்ரமசிங்கவுக்கு ஆதரவு வழங்கும் உள்ளூராட்சி மன்றங்களின் முன்னாள் தலைவர்கள், உறுப்பினர்கள் உள்ளிட்டோரும் கலந்துகொண்டுள்ளதையும், பொதுமக்களையும் படங்களில் காணலாம். **(படங்கள் கற்பிட்டி தினகரன் விசேட நிருபர்)**

# மோ. சைக்கிள் விபத்தில் லான்ஸ் கோப்ரல் உயிரிழப்பு

**அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்**

மோட்டார் சைக்கிள் விபத்தில் இராணுவ லான்ஸ் கோப்ரல் ஒருவர் உயிரிழந்துள்ளார். கெக்கிராவ எப்பாவல வீதியில் மகமீகஸ்சேகம பகுதியில் கடந்த (30) மாலை 4.30 மணியளவில் குறித்த விபத்து இடம்பெற்றுள்ளதாக இபலோகம பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்திற்குள்ளான லாரன்ஸ் கோப்ரல் பயணித்த மோட்டார் சைக்கிள் வேக கட்டுப்பாட்டை கட்டுப்படுத்த முடியாமல் வீதியை விட்டு விலகிச் சென்று அருகிலிருந்த தொலைபேசி கம்பத்துடன் மோதி இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. விபத்தில் 522வது படைப் பிரிவைச் சேர்ந்த யாழ்ப்பாணம் பகுதியில் கடமையாற்றும் லான்ஸ் கோப்ரல் ஒருவரே உயிரிழந்துள்ளார். உயிரிழந்த இவர், மகாஇலுப்பள்ளம் கெலேதிவுல்வெவ பகுதியைச் சேர்ந்த 31 வயதுடைய ஒரு பிள்ளையின் தந்தை என பொலிஸார் தெரிவித்தனர். இவர், ஒருநாள் விசேட விடுமுறையில் வீட்டுக்கு வந்திருந்த போது விபத்திற்குள்ளாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# 'விளைச்சல் நிலங்களுக்கு சூரிய சக்தி' – மக்களுக்கு தெளிவூட்டல்

'விளைச்சல் நிலங்களுக்கு சூரிய சக்தி' என்ற தொனிப்பொருளில் மக்களுக்கு தெளிவூட்டும் வேலைத்திட்டமொன்று அண்மையில் பன்னல உஸ்ஸான நீர்ப்பாசன திட்டத்தில் நடைபெற்றது. இலங்கை நிலைபெறுதகு சக்தி அதிகார சபையினால் நடத்தப்பட்ட இந்நிகழ்வுக்கு ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதி உதவி வழங்கப்பட்டதுடன் எதிர்வரும் இரண்டு பருவகாலங்களில் 500 ஏக்கரில் பயிர்ச்செய்கை மேற்கொள்வதே இந்த திட்டத்தின் பிரதான நோக்கமாகும்.

தற்போது இந்த விவசாயிகள் மழைநீரை கொண்டு ஒரு பருவத்தில் மட்டுமே விவசாயம் செய்து வருகின்றனர். 1978ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இந்த நீர்ப்பாசனத் திட்டம் சுமார் 12 வருடங்களாக வெற்றிகரமாக நடைபெற்று வந்த நிலையில், 1992ஆம் ஆண்டு முதல் இலங்கை மின்சார சபைக்கு செலுத்த வேண்டிய அதிக மின்சாரக் கட்டணத்தை விவசாயிகள் செலுத்த முடியாமல் மின் இணைப்பு தடை செய்யப்பட்டுள்ளது. இது தொடர்பில் உரிய அரச திணைக்களங்கள் கவனம் செலுத்த வேண்டும் என்பதே பன்னல உஸ்ஸான நீர்ப்பாசன அபிவிருத்திக் குழுவின் விருப்பமாகும்.

## இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு

## திறைசேரி உண்டியல்கள் வழங்கல்

**ரூ. 152,000 மில்லியனுக்கான திறைசேரி உண்டியல்கள் 2024 செப்டெம்பர் 04ஆம் திகதி ஏலவிற்பனை ஊடாக வழங்கப்படும்**

திறைசேரி உண்டியல் வழங்கல்களின் விபரங்கள் பின்வருமாறு:

| முதிர்வுக் காலம் | 91 நாட்கள் | 182 நாட்கள் | 364 நாட்கள் | மொத்தம் |
|---|---|---|---|---|
| ஐஎஸ்ஐஎன்* | LKA09124L061 | LKA18225C072 | LKA36425I057 | |
| முன்வைக்கப்பட்ட தொகை (ரூ. மில்.) | 70,000 | 62,000 | 20,000 | 152,000 |

ஏலவிற்பனைத் திகதி : 2024 செப்டெம்பர் 04
தீர்ப்பனவுத் திகதி : 2024 செப்டெம்பர் 06
வழங்கப்படும் திகதி : 2024 செப்டெம்பர் 06
விலைக்குறிப்பீடு சமர்ப்பிக்கப்படுவதற்கான இறுதித் திகதியும் நேரமும் : 2024 செப்டெம்பர் 04 புதன்கிழமை மு.ப. 11.00
விலைக்குறிப்பீட்டின் ஆகக்குறைந்த தொகை : ஐந்து மில்லியன் ரூபாய்கள் (ரூ.5,000,000/-) மற்றும் அதிலிருந்து ஒரு மில்லியன் ரூபாய்களின் (ரூ.1,000,000/-) பெருக்கங்களிலிருந்து

அரசாங்கப் பிணையங்களிலுள்ள முதனிலை வணிகர்களிடமிருந்து விலைக்குறிப்பீடுகள் கோரப்படுகின்றன. இலங்கை மத்திய வங்கியால் வழங்கப்பட்ட இலத்திரனியல் விலைக்குறிப்பீட்டு வசதியூடாக மட்டுமே விலைக்குறிப்பீடுகள் அனுப்பப்பட வேண்டும். முதலீட்டாளர்களாக வரக்கூடியவர்கள் (பொதுமக்கள் அல்லது எவரேனும் வேறு முதலீட்டாளர்) மேலே குறிப்பிட்டவாறு விலைக்குறிப்பீடொன்றின் குறைந்தபட்ச தொகையுடன் இணங்கியொழுகி பின்வரும் முதனிலை வணிகர்களூடாக ஏலத்திற்கு விலைக்குறிப்பீடுகளை சமர்ப்பிக்கலாம்.

**முதனிலை வணிகர்களின் பட்டியல்**

| | |
|---|---|
| அக்குயிட்டி செக்குரிட்டீஸ் லிமிடெட் | 2206297 |
| இலங்கை வங்கி | 2541938 |
| கெப்பிட்டல் எலையன்ஸ் பிஎல்சி | 2317777 |
| கொமர்ஷல் பாங்க் ஒவ் சிலோன் பிஎல்சி | 2332319 |
| பெஸ்ட் கெப்பிட்டல் ட்ரெஸரீஸ் பிஎல்சி | 2639883 |
| என்எஸ்பீ பண்ட் மனேஜ்மன்ற் கம்பனி லிமிடெட் | 2425010 |
| மக்கள் வங்கி | 2206783 |
| சம்பத் வங்கி பிஎல்சி | 2305842 |
| செலான் வங்கி பிஎல்சி | 2456340 |
| வெல்த் றஸ்ற் செக்குரிட்டீஸ் லிமிடெட் | 2675096 |

சந்தை நிலைமைகளுக்கமைய இலங்கை மத்திய வங்கி ஏலங்களில் முதிர்வுகளுக்கிடையிலான தொகைகளை மீள் ஒதுக்குச் செய்வதன் மூலம் ஒவ்வொரு முதிர்வுக்கும் முன்வைக்கப்பட்ட தொகைகளிலும் பார்க்க உயர்ந்த அல்லது குறைந்த தொகையினை முன்வைக்கப்படுகின்ற மொத்த தொகையினை விஞ்சாது ஏற்றுக்கொள்ளப்படலாம்.
முதலீட்டாளர்களாக வரக்கூடியவர்கள் இரண்டாந்தரச் சந்தையில் முதனிலை வணிகர்களிடமிருந்தும் அல்லது ஏதேனும் வேறு உரிமம்பெற்ற வர்த்தக வங்கியிடமிருந்தும் திறைசேரி உண்டியல்களை கொள்வனவு செய்யலாம்.

* பன்னாட்டுப் பிணையங்கள் அடையாள இலக்கம்

**என்.டி.வை.சி. வீரசிங்க**
**பொதுப்படுகடனின் கண்காணிப்பாளர்/பதிவாளர்**

*வழங்கும் அலுவலகம்:*
**பொதுப்படுகடன் திணைக்களம்,**
**இலங்கை மத்திய வங்கி,**
**30, சனாதிபதி மாவத்தை,**
**கொழும்பு-1.**
**தொலைபேசி: +94112477011, தொலைநகல்: +94112477687**
**வெப்தளம்: www.cbsl.gov.lk**

# கணித அறிவுத்திறன் போட்டியில் வெற்றி

**அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்**



அநுராதபுரம் ஸாஹிரா கல்லூரியில் தரம் 07 ல் கல்வி பயிலும் மாணவி எம்.ஆர். றீபா உலகளாவிய ரீதியில் நடைபெற்ற சிதம்பரா கணித அறிவுத்திறன் போட்டியில் பங்குபற்றி வெண்கலப் பதக்கம் பெற்று வெற்றி பெற்றுள்ளார். இம்முறை யாழ்ப்பாணம் ராமநாதன் கல்லூரியில் 2024.08.24ஆம் திகதியன்று நடைபெற்ற நிகழ்வின் போது இதற்கான பதக்கம் மற்றும் சான்றிதழ் ஆகியவற்றை பெற்றுக் கொண்டார். இம்மாணவி அநுராதபுரம் உதயா மாவத்தையைச் சேர்ந்த எம்.றிஸ்வான் ஏ.மும்தாஜ் பானு ஆகியோரின் புதல்வியாவார்.



மாறை / அறபா மத்திய கல்லூரியின் (தேசிய பாடசாலை) 2001ம் வருட க.பொ.த. சாதாரண தர பழைய மாணவர்களின் ஒன்றுகூடலொன்று (1/9) காலை கல்லூரியில் இடம்பெற்றது. இம் மாணவர்களால் பாடசாலைக்கு பெறுமதி வாய்ந்த இரண்டு Multi Media Projectors அன்பளிப்பாக வழங்கப்பட்டன. இம் மாணவர்களின் சார்பாக சட்டத்தரணி எம்.பீ.எம். ரமீஸ் , அதிபர் எம்.டி.எம். முதஹ்ஹரிடம் அதனைக் கையளிப்பதையும் (2001) பழைய மாணவர்களையும் படங்களில் காணலாம். **(படம் வெலிகம தினகரன் நிருபர்)**



ஐக்கிய மக்கள் சக்தியின் நிறைவேற்றுக் குழு உறுப்பினர் டாக்டர் ரூமி ஹாஷிம் அக்கட்சியின் ஜனாதிபதி தேர்தலுக்கான களுத்துறை மற்றும் புத்தளம் மாவட்டங்களுக்கான செயற்பாட்டு இணைப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார். இவருக்கான நியமனக் கடிதத்தை கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச அண்மையில் வழங்கி வைத்தபோது... **(பேருவளை விசேட நிருபர்)**

# தூக்கில் தொங்கிய நிலையில் இளைஞன் சடலமாக மீட்பு

**கற்பிட்டி தினகரன் விஷேட நிருபர்**

புத்தளம் நாகூர் பள்ளி வீதியில் வசித்து வந்த இளைஞர் ஒருவர் நேற்று முன்தினம் (31) தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். முஹம்மது ஹசன் முஹம்மது அம்ஜத் (வயது 23) எனும் திருமணமாகாத இளைஞர் ஒருவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

தொழில் நிமித்தம் கடன்பெற்று வெளிநாட்டுக்கு சென்றுள்ள குறித்த இளைஞர், அங்கு தொழில் கிடைக்காத நிலையில் அவர் பாரிய கடன் சுமையோடு கடந்த ஜூலை மாதம் மீண்டும் நாடு திரும்பியுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது. இந்த நிலையில் (31) காலை தனது பெற்றோர்களுடனும், இரண்டு சகோதரிகளுடனும் ஒன்றாக இருந்து உரையாடிக் கொண்டிருந்த குறித்த இளைஞர், வீட்டின் மேல் மாடியில் உள்ள படுக்கை அறையில் சுருக்கிட்டு தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.






## 'ரணிலுடன் இலங்கைக்கு வெற்றிகரமான 05 வருடங்கள்'

# நவீன விவசாய கலாசாரத்தை நாம் அறிமுகப்படுத்துவோம்!

(கடந்த வெள்ளிக்கிழமை பிரசுரமானதன் தொடர்)



## தேர்தல் விஞ்ஞாபனம்

ஓர் அயன மண்டல நாடாக பல்வேறு காலநிலை மாற்றங்கள் எதிர்காலத்தில் எம் முன்னிலையில் காணப்படுகின்றன. வெப்பநிலை உயர்வடைதல், மழைவீழ்ச்சி மாற்றமடைதல், கடல் மட்டம் உயர்வடைதல் அவற்றுள் சில ஆகும்.

நாம் இப்பிரச்சினையை முன்கூட்டியே உணர்ந்து, கடந்த இரண்டு ஆண்டுகளில் அதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டோம். அதன் ஊடாக ஒரு பசுமை தேசத்திற்காக பூகோள காலநிலை மாற்றங்களின் தீமைகளை எமது நாட்டுக்கு நன்மையானதாக ஆக்கிக் கொள்வதற்காக நாம் பாடுபட்டோம்.

காலநிலை மாற்றங்கள் தொடர்பான உலக நிகழ்ச்சித்திட்டத்தின் முன்னுரிமையை தற்போது அடைந்துள்ளோம். காலநிலை நியாயப்படுத்தல் அமைப்பு, காலநிலை சமுர்த்தி திட்டம், காலநிலை மாற்ற பல்கலைக்கழகம் போன்ற பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்களை நாம் ஆரம்பித்துள்ளோம்.

பூகோள ரீதியான வடக்கு மற்றும் தெற்கு நாடுகள் உள்ளடங்கலாக உலக காலநிலை மாற்றங்களுக்கு முகம்கொடுப்பதற்காக பிரான்ஸ் நாட்டின் தலைமையில் ஏற்படுத்தப்பட்ட பூகோள நிதி ஒப்பந்தத்தில் நாம் பிரதான பங்குதாரர்களுள் ஒருவராக உள்ளோம். அதேபோல் தெற்கு பூகோள நாடுகளை அடிப்படையாகக் கொண்ட இந்தோனேசியாவினால் ஆரம்பிக்கப்பட்ட பூகோள கலப்பு நிதி முயற்சிக்காகவும் நாம் ஒன்றிணைந்துள்ளோம்.

அயன மண்டல சூழல் பாதுகாப்புக்காக நாம் தற்போது அயன மண்டல வலய முயற்சியை ஆரம்பித்துள்ளோம். இப்பணிகளுக்காக செயலூக்கத்துடன் பங்கேற்பதன் மூலம் எமது பொருளாதாரத்துக்கு வலுசேர்க்கும் சந்தர்ப்பம் உருவாகும். அதற்குரிய பின்னணியினை வழங்கி காலநிலை மாற்ற சட்டத்தை நாம் நடைமுறைப்படுத்துவோம்.

காலநிலை விவகாரங்கள் தொடர்பான செயலகத்தை தாபித்து காலநிலை மாற்ற நிதியம் ஒன்று தாபிக்கப்படும். எமது சூழலைப் பாதுகாத்து காலநிலை மாற்றங்களுக்கு வலுவான முறையில் முகம் கொடுப்பதற்கான சந்தர்ப்பத்தை நாம் அதன் மூலம் ஏற்படுத்துவோம்.

உயிர் பல்வகைமை நிறைந்த இலங்கையின் உயிரியல் அடிப்படையினைப் பாதுகாப்பதற்கு மற்றும் எதிர்கால சந்ததியினருக்கு அதனை உரித்தாக்குவதற்கான புதிய உயிரியல் விஞ்ஞான சட்டம் மற்றும் ஒழுங்குபடுத்தல் நிறுவனம் தாபிக்கப்படும்.

எமது ஐந்தாண்டு வேலைத்திட்டத்தில் காட்டப்பட்டுள்ள விவசாயம், கைத்தொழில், வலுசக்தி போன்ற பல்வேறு துறைகளுக்காக காலநிலை மாற்றங்களை அடிப்படையாகக் கொண்ட சூழல் நட்புறவான வழிமுறை ஒன்றை நடைமுறைப்படுத்துவோம். அவை பற்றிய விடயங்கள்விரைவில் உங்களுக்கு தெளிவாகும்.

ஏற்கனவே இவ் அனைத்து வேலைத்திட்டங்களையும் நாம் ஆரம்பித்துள்ளோம்.

நவீன விவசாய கலாச்சாரம்:

தற்போதைய உலக சனத்தொகை சுமார் 8 பில்லியன் ஆகும். 2050 ஆம் ஆண்டளவில் அது சுமார் 29 சதவீதம் அதாவது 9.8 பில்லியன் வரை அதிகரிக்கும். இவ்வாறு அதிகரிக்கும் சனத்தொகைக்கான உணவு மற்றும் தானியங்கள் இன்றுள்ளதை விடவும் கூடுதலாகத் தேவைப்படும்.

அத்தகைய தேவைப்பாட்டில் மிகவும் சிறியதொரு சதவீதத்தையாவது வழங்குதல் எமது இலக்காக அமைதல் வேண்டும். அதற்காக அதிக போட்டித் தன்மையுள்ள ஏற்றுமதியை இலக்காகக் கொண்ட கூடுதல் வருமானம் பெறும் நவீன விவசாய கலாசாரம் ஒன்றை நாம் அறிமுகப்படுத்துவோம். வெளிநாட்டு சந்தைக்கான சேதனப்பசளை பயிர்ச்செய்கைகளை நாம் ஊக்குவிப்போம்.

உரம், உதிரிப்பாகங்கள் மற்றும் நவீன இயந்திர சாதனங்கள் விவசாயிகளுக்கு வழங்கப்படும். விவசாய உற்பத்திகளை நேரடியாக விவசாயிகளிடம் கொள்வனவு செய்யும் விநியோக வலையமைப்பு ஒன்று தாபிக்கப்படும். கிராமிய விவசாயக் கைத்தொழிலைமேம்படுத்துவதற்காககுளிரூட்டி வலையமைப்பு ஒன்று நாடு முழுவதும் தாபிக்கப்படும்.

வீட்டுத்தோட்டம், நகர்ப்புற தொடர் மாடி வீடுகளை அண்டிய பயிர்ச்செய்கை விரிவுபடுத்தப்படும்.

அரசுக்குச் சொந்தமான குறைப் பயன்பாடுடைய காணிகளுள் புதிதாக 3 இலட்சம் ஏக்கர் காணிகள் வர்த்தகப் பயிர்ச் செய்கைக்காக ஒதுக்கப்படும்.

உருமய காணி உறுதிகளை வைத்திருக்கும் விவசாயிகளுக்கு அவர்களது பயிர்ச் செய்கைகளை மேலும் அபிவிருத்தி செய்வதற்குரிய ஆலோசனைகள் மற்றும் ஒத்துழைப்புக்கள் வழங்கப்படும்.அத்தகைய காணிகளை பயனுள்ள பயிர்ச் செய்கை மற்றும் ஏனைய விவசாய தொழில் முயற்சிகளில் ஈடுபடுத்துவதற்கு ஊக்குவிக்கப்படும்.

அறுவடைகளின் போக்குவரத்து,அறுவடைகள் வீண்விரயமாகாத விதமாக களஞ்சியப்படுத்தல் மற்றும் சந்தைப்படுத்தல் நவீனமயப்படுத்தப்படும். உள்நாட்டு உணவு வகைகளை பிரசித்தப்படுத்துவதற்காக அரச தலையீட்டுடன்திட்டமிடப்பட்ட வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படும்.

விவசாய நடவடிக்கைகள் மற்றும் அன்றாட நீர்த் தேவைப்பாடுகளை நிறைவு செய்வதற்காக மல்வத்து ஓயா,தல்பிட்டிகலமற்றும் வயம்ப கால்வாய்க் கருத்திட்டம் துரிதமாக பூர்த்தி செய்யப்படும்.

இக்கருத்திட்டங்களின் முதற்கட்டம் 2030 இல் பூர்த்தி செய்யப்படும்.

நெல் விவசாயத்திற்குத் தேவையான உரம் அல்லது ஏனைய தேவைப்பாடுகளை நிவர்த்தி செய்வதற்காக 25000 ரூபா நிவாரண உதவி நேரடியாக விவசாயிகளின் வங்கிக் கணக்கிற்கு வழங்கப்படுவதுடன் ஒவ்வொரு போகத்தின் போதும்உத்தரவாத விலை நிரணயிக்கப்படும்.

நாட்டைச் சுற்றி கடல் வளம் காணப்பட்ட போதும் மீன்பிடி நடவடிக்கைகளுக்காக எம்மிடமுள்ள படகுகளின் எண்ணிக்கையில் 40 சதவீதத்திற்கும் குறைந்தபடகுகளே கடலுக்குச் செல்கின்றன. இதன் காரணமாக கடலிலில் இருந்து ஆகக்கூடிய பிரதிபலனைப் பெறக்கூடிய திட்டமொன்றை உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிபுணர்களின் தலைமையில் நாம் நடைமுறைப்படுத்துவோம். அதன் மூலம் தற்போது மீன்பிடி வள ஏற்றுமதி மூலம் நாம் உழைத்துக் கொள்ளும் 300 மில்லியன் டொலர்கள் இரட்டிப்பாக்கப்படும்.

நன்னீர் மீன்பிடிக் கைத்தொழில், இறால் செய்கை, நீரியல் தாவரம், அலங்கார மீன் கைத்தொழில் ஆகியவற்றை ஊக்குவித்து அத்தகைய துறைகள் பிரசித்தப்படுத்தப்படும்.

நாடு முழுவதும் உள்ள மீன்பிடித் துறைமுகங்கள் நவீனமயப்படுத்தப்படும். அவை மீன்பிடிப் பொருளாதார மத்திய நிலையமாக அபிவிருத்தி செய்யப்படும்.இச் செயன்முறைக்காக மீனவ சங்கங்கள், மீனவர்கள், முதலீட்டாளர்கள் மற்றும் விசேட நிபுணர்கள் தொடர்பு படுத்தப்படுவார்கள்.

சிறிய மீன்பிடிப் படகுமற்றும் பலநாள் மீன்பிடிப் படகுகளைக் கொள்வனவு செய்வதற்கான சலுகை முறைஒன்று முன்னெடுக்கப்படும்.

மீன்பிடிக் கைத்தொழில் அபிவிருத்திக்காக நேரடி வெளிநாட்டு முதலீடுகள் ஊக்கப்படுத்தப்படும்.

சர்வதேச போக்குகளுக்கு உகந்த வகையில் மீன்பிடிக்கைத்தொழிலை நவீனப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். புதிய படகுகள், உபகரணங்கள் மற்றும் தொழில்நுட்பத்தை நவீனமயப்படுத்துவதற்கு மீனவ சமூகத்திற்கு உதவிகள் வழங்கப்படும்.

குறுகிய காலப்பகுதியினுள் மீனவ சமூகத்தின் வாழ்க்கைத் தரத்தை அதிகரிப்பதற்கு இந்த வேலைத்திட்டத்தின் மூலம் ஆற்றல் கிடைக்கும்.

மீன்பிடித் துறைமுகங்களைச் சூழவுள்ள மீனவ நகரங்களை அபிவிருத்தி செய்து, வீடுகள் மற்றும் ஏனைய சமூக வசதிகளுடன் மீனவர்கள் வலுவூட்டப்படுவார்கள். தற்போது பயன்பாட்டில் உள்ள மீனவ வீடுகளின் தரத்தை மேம்படுத்துவதற்குநடவடிக்கை எடுக்கப்படும். மீனவர்களுக்கு சலுகை கிடைக்கும் வகையில் எரிபொருள் நிவாரணத்தை நேரடியாக அவர்களின் வங்கிக் கணக்குகளுக்கு வழங்குதல் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்த அனைத்துப் பணிகளும் 2025 இல் ஆரம்பிக்கப்படும்.

கடலுக்கு அடியில் காணப்படும் பல்வேறு வளங்கள் தொடர்பாக இதுவரை நாம் உரிய கவனம் செலுத்தவில்லை. சர்வதேச விசேட நிபுணத்துவ அறிவு மற்றும் அனுபவங்களைப் பயன்படுத்தி இந்த வளங்களிலிருந்து உயர்ந்தபட்ச பயனை அடைந்து கொள்ளும் நீண்டகால வேலைத்திட்டம் ஒன்றை நாம் நடைமுறைப்படுத்துவோம்.

இந்த அனைத்து திட்டங்களிறன் முதற்கட்டம் 2025 மற்றும் 2029 இற்கு இடையில் நடைமுறைப்படுத்தப்படும்.

எமக்குத் தேவையான பாலின் அளவில் இன்னமும் எமது நாட்டில் உற்பத்தி செய்யப்படுவது சுமார் 35 சதவீதம் ஆகும். பால் அறுவடை இல்லாத காரணத்தால் மில்கோ நிறுவனத்திலுள்ள பல நவீன இயந்திர ஆலைகள் வருடம் ஒன்றுக்கு மிகவும் குறுகியதொரு காலத்துக்கு மாத்திரம் செயற்படுத்தப்படுகின்றன. இதன் காரணமாக பால் இறக்குமதிக்காக வருடம் ஒன்றுக்கு 282 மில்லியன் டொலர்கள் வெளிநாடுகளுக்கு செல்கிறது.

அம்பேவெல தனியார் பண்ணையில் நாளொன்றுக்கு பசுமாடு ஒன்றின் மூலம் 35 லீற்றர் பால் பெற்றுக் கொள்ளும் அதேவேளை நமது நாட்டின் ஏனைய பால் பண்ணையாளர்கள் பசுமாடு ஒன்றின் மூலம் சராசரியாக சுமார் 5 லீற்றர் பாலையே பெற்றுக் கொள்கின்றார்கள்.

இந்த நிலைமையை மாற்றியமைத்து தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்தி சபைஇந்திய தொழில்நுட்பம் மற்றும் முதலீட்டாளர்களை தொடர்புபடுத்தி பால் அறுவடையை அதிகரிக்கும் வேலைத்திட்டம் ஒன்று நடைமுறைப்படுத்தப்படும்.

இந்த வேலைத்திட்டத்தின் மூலம்

★380 மில்லியன் லீற்றர் தற்போதைய வருடாந்த பால் உற்பத்தி 2035 ஆம் ஆண்டளவில் 820 மில்லியன் லீற்றர் வரை அதிகரிக்கப்படும்.

★அப்போது நாட்டின் அனைத்து பாடசாலை மாணவர்களுக்கும் இலவசமாக தூய பசும்பால் கிண்ணம் ஒன்றை வழங்க முடியும்.

★ பால் உற்பத்தியில் தன்னிறைவடையும் போது தற்போது பால் இறக்குமதிக்காக வருடம் ஒன்றுக்கு வெளிநாடுகளுக்குச் செல்லும் பணம் சேமிக்கப்படுவதுடன் மிகையாகவுள்ள பாலில் இருந்து மேற்கொள்ளப்படும் பால் சார்ந்த உற்பத்திகள் மூலம் நிதியினை ஈட்டிக்கொள்ளும் சந்தர்ப்பம் கிடைக்கப்பெறும்.

★ 200,000 இற்கும் அதிகமான சிறிய பால் பண்ணையாளர்கள் மற்றும் தொழில் முயற்சியாளர்களுக்கு தரத்தில் உயர்ந்த மரபணு விலங்குகள், விலங்குணவுகள், மருந்து வகைகள், தடுப்பூசிகள், செயற்கை இனப்பெருக்கத்திற்கான மாடுகளின் விந்துகளைப் பெற்றுக் கொள்ளும் வசதிகள் வழங்கப்படும்.

★ தரத்தில் உயர்ந்த மரபணு வகை 20000 பசுமாடுகள் 2025 ஆம் ஆண்டளவில் உள்நாட்டு பால் பண்ணையாளர்களுக்கு வழங்கப்படும்.

★இந்த வேலைத்திட்டத்தின் மூலம் 2035 ஆம் ஆண்டளவில் உள்நாட்டு பால் பண்ணையாளர்கள் பெற்றுக் கொள்ளும் வருமானம் 40 பில்லியன் ரூபாவைத் தாண்டும்.

அதன் மூலம் கிராமியப் பொருளாதாரம் வலுவடையும்.

★ உள்நாட்டு பால் பண்ணையாளர்களுக்காக சலுகைக் கடன் திட்டம் ஒன்று ஆரம்பிக்கப்படும்.

★ உள்நாட்டு பால் பண்ணையாளர்கள் பசு ஒன்றிலிருந்து நாளொன்றுக்கு பெற்றுக் கொள்ளும் பால் 20 லீற்றர் வரை அதிகரிக்கப்படும். இந்த வேலைத்திட்டத்தின் முதற்கட்டம் 2025 மற்றும் 2035 காலத்திற்குள் நிறைவு செய்யப்படும்.

பயணியுங்கள் நாட்டைச் சுற்றி:

### சுற்றுலாக் கைத்தொழில் மலையகத்துக்கு விரிவுபடுத்தப்படும்

இலங்கை உலகின் முக்கியமான ஒரு சுற்றுலா முடிவிடம் ஆகும். சுற்றுலாப் பயணிகளுக்குத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை உயர்வான நிலைக்கு கொண்டு வந்து தற்போதைய 2.5 மில்லியன் சுற்றுலாப் பயணிகளின் வருகைஎதிர்வரும் ஐந்து ஆண்டுகளில் 5 மில்லியன் வரை அதிகரிக்கப்படும். தற்போது சுற்றுலாப் பயணி ஒருவர் மூலம் மொத்தம் 150 அமெரிக்க டொலர் வருமானம் நாட்டுக்கு கிடைக்கப் பெறுகிறது. அது 2035 இல் 500 அமெரிக்க டொலர்கள் வரை அதிகரிக்கப்படும்.

கொழும்பு, காலி, கண்டி, நுவரெலியா மற்றும் திருகோணமலை ஆகியன சுற்றுலா கேந்திர நிலையங்களாக அபிவிருத்தி செய்யப்படும். கிழக்கு கரையோரம் மற்றும் யாழ்ப்பாணத்தைமுதற்தர சுற்றுலாக் கிராமமாக மாற்றுவதற்குத் தேவையான வசதிகள் வழங்கப்படும். தெற்கு கரையோரத்துக்கான கேள்வியை மென்மேலும் அதிகரிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும். சுற்றுலாக் கைத்தொழில் மலையகத்துக்கு விரிவுபடுத்தப்படும்.

அனுராதபுரம் கலாசார மரபுரிமை நகரமாக மாற்றப்பட்டு சீகிரியாவின் நிலைக்கு உலகத்தின் முன் பிரசித்தப்படுத்தப்படும். பல புதிய சுற்றுலா வலயங்களின் பணிகள் எதிர்வரும் ஐந்தாண்டுகளில் பூர்த்தி செய்யப்படும்.

★இரணவில 400 ஏக்கர்

★பெந்தோட்டை 1000 ஏக்கர்

★ ஹப்புத்தலை – வெலிமடை 100 ஏக்கர்

ஹோட்டல் மற்றும் தங்குமிடங்களை மறுசீரமைத்தல், புதிய ஹோட்டல்களை நிர்மாணித்தல் உள்ளிட்ட சுற்றுலாத் துறையின் பல்வேறு பணிகளுக்காக அரச மற்றும் தனியார் பங்குதாரர்களின் முதலீடுகள் ஊக்குவிக்கப்படும்.

இப்பணிகள் 2025 இல் ஆரம்பிக்கப்பட்டு 2033 இல் நிறைவு செய்யப்படும்.

எமது உற்பத்திகள் சர்வதேசம் வரை:

பொருளாதாரத்தின் முன்னோக்கிய பாய்ச்சலைப் பாய்வதற்காக எமது கைத்தொழில் உற்பத்திகளைச் சர்வதேச சந்தையில் போட்டியிடக்கூடிய மட்டத்துக்கு மேம்படுத்துதல் வேண்டும். தற்போது நாம் தைத்த ஆடைகள், கைத்தொழில் வாகனங்களுக்கான டயர் போன்றவற்றின் மூலம் சர்வதேச ரீதியில் நன்மதிப்பை பெற்றுள்ளோம்.

இந்த நிலைமையை விரிவாக்குவதற்காக நவீன தொழில்நுட்பத்தை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்ட நவீன இயந்திர சாதனங்கள் இந்த நாட்டுக்கு கொண்டு வரப்படும்.

சர்வதேச முதலீடுகள், தொழில்நுட்பம் மற்றும் விஷேட நிபுணத்துவ அறிவினை நாம் உயர்ந்தபட்சம் பயன்படுத்துவோம்.

உற்பத்திப் பொருளாதாரத்தை வளர்ப்பதில் தற்போதுள்ள அனைத்து தடைகளும் நீக்கப்படும்.

முதலீட்டு ஊக்குவிப்புக்கான புதிய பொருளாதார ஆணைக்குழு, சர்வதேச வர்த்தக நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான சர்வதேச வர்த்தகம் தொடர்பான அலுவலகம் தாபிக்கப்படும்.

வலுசக்தி, போக்குவரத்து, துறைமுகம், கப்பல், விமானம், கைத்தொழில் போன்ற துறைகளை உள்ளடக்கிய பிரதான பொருளாதார மத்திய நிலையமாக திருகோணமலை மாற்றப்படும். இந்த நடவடிக்கைகளுக்காக இந்தியாவின் உதவி பெற்றுக் கொள்ளப்படும்.

ஐ. பிங்கிரிய முதலீட்டு ஊக்குவிப்பு வலயத்தை விரிவாக்கும் பணிகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

ஐஐ. காங்கேசந்துரை, பரந்தன் மற்றும் மாங்குளத்தில் 1000 ஏக்கர்களில் புதிய முதலீட்டு வலயத்தை தாபிக்கும் பணிகள் 2025 இல் ஆரம்பிக்கப்படும்.

★ 2027 இல் தொம்பேயில் 120 ஏக்கர்களில் புதிய முதலீட்டு வலயம் நிர்மாணிக்கப்படும். சப்புகஸ்கந்த முதலீட்டு ஊக்குவிப்பு வலயத்தை விரிவுபடுத்தி அதனுடன் மேலும் 400 ஏக்கர்கள் சேர்க்கப்படும்.

★ 4000 ஏக்கர் காணியில் நிர்மாணிக்கப்படும் ஹம்பாந்தோட்டை முதற்கட்டம் 2026 இல் ஆரம்பிக்கப்படும்.

★ கண்டி நகரத்தை மையமாகக் கொண்ட சுமார் 1000 ஏக்கர் தொழில்நுட்ப வலயம் ஒன்று 2026 இல் தாபிக்கப்படும்.

பாரியளவு கருத்திட்டங்கள் மற்றும் கைத்தொழில்களை ஆரம்பிப்பதற்கான நிதியினை ஒதுக்கீடு செய்வதற்கான தேசிய அபிவிருத்தி வங்கி 2025 இல் ஆரம்பிக்கப்படும்.

உற்பத்திக் கைத்தொழிலை ஊக்கப்படுத்துவதற்காக தற்போது பல நிறுவனங்கள் செயற்படுகின்றன. சிறிய மற்றும் நடுத்தர அளவு தொழில் முயற்சியாளர்களை பல்வேறு அசௌகரியங்களுக்கு ஆளாக்குகிறது. அதன் காரணமாக என்டர்பிரைஸ் ஸ்ரீலங்கா என்ற பெயரில் புதிய பலம் மிக்க நிறுவனம் ஒன்று 2025 இல் தாபிக்கப்படும்.

நுண், சிறிய மற்றும் நடுத்தர அளவு தொழில் முயற்சியாளர்கள் பொருளாதார நெருக்கடி காரணமாக பாரிய பின்னடைவைச் சந்தித்தார்கள். அவர்களை மீண்டும் கட்டியெழுப்புவதற்காக ஏற்கனவே பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அவர்களுக்கு வழங்கப்படும் 25 இலட்சம் ரூபாய் வரையான கடன் தொகையின் வட்டி வீதம் 5 சதவீதத்துக்கு கொண்டுவரப்படும். திறைசேரியில் இதற்காக ஒரு விசேட பிரிவு தாபிக்கப்பட்டு ஒருங்கிணைப்பு பணிகள் மேற்கொள்ளப்படும்.

மாகாண மட்டத்தில் நுண், சிறிய மற்றும் நடுத்தர அளவு தொழில் முயற்சியாளர்களைக் கட்டியெழுப்புவதற்குத் தேவையான நிதி மாகாண சபைகளுக்கு வழங்கப்படும் என்பதுடன் வழிகாட்டல் மற்றும் உற்பத்திப் பொருள் விற்பனை தொடர்பான ஆலோசனைகள் வழங்கப்படும்.

தற்போது நடைமுறைப்படுத்தப்படும் மற்றும் உத்தேச பொருளாதார மத்திய நிலையங்கள் ஊடாக அவர்களின் உற்பத்திகளை சந்தைப்படுத்துவதற்கு வழிவகுக்கப்படும்.

சிறிய மற்றும் நடுத்தர அளவு அரிசி ஆலை உரிமையாளர்களின் பிரச்சினைகள் பற்றி ஆராய்ந்து அவற்றைத் தீர்ப்பதற்கான விசேட வேலைத்திட்டம் ஒன்று முன்னெடுக்கப்படும்.

அனைத்து உற்பத்திக் கைத்தொழில்களும் சூழல் பாதுகாப்பினை அடிப்படையாகக் கொண்டு ஆரம்பிக்கப்படும். கைத்தொழில்கள் மூலம் ஏற்படும் சூழல் மாசடைவதனைக் குறைப்பதற்காக சர்வதேச தரங்களுக்கு அமைவாகமாசடையாத வர்த்தக முறைமை அறிமுகப்படுத்தப்படும். சுற்றாடலுக்கு விடுவிக்கப்படும் சூழலைப் பாதிக்கும் வாயுக்கள் அதன் மூலம் கட்டுப்படுத்தப்படும்.

காபன் வரியினை அறிமுகப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

உலகசக்திக்கு வலுசக்தி:

### பசுமை வலுசக்தி மத்திய நிலையமாக இலங்கையை மாற்றியமைப்போம்!

பசுமை ஹைட்ரஜன் உள்ளிட்ட மீள் புதுப்பிக்கத்தக்க வலுசக்தி உற்பத்திக்கான முதலீடுகள் ஊக்கப்படுத்தப்படும்.

2030 ஆம் ஆண்டளவில் மின்சார விநியோக வலையமைப்பின் 70 சதவீதம் அதாவது 2000 மெகாவொட் மீள்புதுப்பிக்கத்தக்க வலுசக்தியிலிருந்து பெற்றுக் கொள்ளப்படும்.

இலங்கையை பசுமை வலுசக்தி மத்திய நிலையமாக மாற்றி இந்தியா மற்றும் அயல் நாடுகளுக்கு வலுசக்தி ஏற்றுமதி செய்யப்படும்.

இயற்கை வாயு மின்சக்தி உற்பத்தி விரிவுபடுத்தப்படும்.

(தொடரும்)

# கிழக்கின் குரல்



# தென்கிழக்கு பல்கலைக்கழகத்துக்கு மருத்துவப் பீடம் சம்மாந்துறை பேரணியில் ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு





**அம்பாறை மத்திய தினகரன் நிருபர்**

அம்பாறை வைத்தியசாலையை இணைத்துக்கொண்டு முஸ்லிம், தமிழ் மற்றும் சிங்கள மாணவர்கள் பயன்படுத்தும் விதத்தில் தென்கிழக்கு பல்கலைக்கழகத்தில் மருத்துவபீடம் ஒன்றை அமைக்கவுள்ளதாக, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

"இயலும் ஸ்ரீலங்கா" மாபெரும் மக்கள் பேரணி சம்மாந்துறை பொது மைதானத்தில் நேற்று முன்தினம் (31) றனூஸ் இஸ்மாயில் தலைமையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய சுயேட்சை ஜனாதிபதி வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்க,

தென்கிழக்கு பல்கலைக்கழகத்தை பிரதான பல்கலைக்கழகமாக மாற்றுவதற்கான வேலைத்திட்டங்களை ஆரம்பிக்குமாறு, வேந்தர் பாயிஸ் முஸ்தபாவிடம் கூறியுள்ளதாகவும் ஆசிரியர் கலாசாலைகளையும் பல்கலைக்கழகங்களாக மாற்றவுள்ளதாகவும் தெரிவித்தார். மேலும் கருத்து தெரிவித்த அவர்,

சம்மாந்துறையில் கூடியுள்ள மக்கள் திரளைப்பார்க்கும்போது, 1977 ஆண்டு தேர்தல் வெற்றியே எனக்கு ஞாபகத்துக்கு வருகிறது. அஷ்ரப் பிறந்த இடமும் நண்பர் நௌசாத் வாழ்ந்த இடமும் சம்மாந்துறை என்பதனால் சம்மாந்துறை எனக்கு மறக்காது.

கடந்த கூட்டங்களில், நான் நல்லவன், என்னை சுற்றியுள்ளவர்கள் தவறானவர்கள் என ரிஷாத் பதியூதீன் கூறினாராம். இப்போது ஜனாதிபதி தேர்தலே நடக்கவுள்ளது. இது நாட்டுக்கு சிறந்த ஜனாதிபதியை தேர்ந்தெடுப்பதற்கான தேர்தலாகும். ஜனாதிபதியை சுற்றியுள்ளவர்களைத் தேர்ந்தெடுப்பது பாராளுமன்ற தேர்தல். அவ்வாறாயின், நான் நல்லன் என்றால் என்னை தெரிவு செய்யுமாறு முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் ரிஷாத் அணியினரிடம் கேட்டுக்கொள்கிறேன். முஸ்லிம் மக்களை பாதுகாக்க நான் என்ன செய்துள்ளேன் என அவர்களுக்கு நன்றாகவே தெரியும்.

இவர்கள் முஸ்லிம் ஜனாஷக்களை அடக்கம் செய்யும் விடயத்தில் அழுத்தங்களை கொடுக்காது, பொருட்களின் விலைகளை குறைக்கும் விடயத்திலேயே அழுத்தங்களை பிரயோகித்தனர். எமது அரசாங்கமே அதற்கான சட்டங்களை தயாரித்துள்ளது.

இக்கட்டான காலத்தில், ஜனாதிபதி பதவியை ஏற்றுக்கொண்டவன் என்ற வகையில், தற்போது சுயேட்சை வேட்பாளராக நான் களமிறங்கியுள்ளேன். நாட்டை முன்கொண்டுச்செல்ல அனைத்து கட்சிகளிடமும் உதவி கோரினேன். சிலர் முன்வந்தனர். சிலர் எதிர் தரப்பில் உள்ளனர்.

நாட்டின் பொருளாதாரத்தை மீண்டும் கட்டியெழுப்ப வேண்டும். முழுமையாக அது வீழ்ச்சியடைந்துள்ளது. நான் பதவியை பொறுப்பேற்றதிலிருந்து அதனை சீர்செய்ய பல்வேறு பிராயத்தனன்களை எடுத்தேன். அப்போது சம்மாந்துறை கல்முனை மற்றும் காத்தான்குடி போன்ற இடங்களில் பெற்றோலுக்காகவும் கேஸுக்காகவும் நீண்ட வரிசைகள் இருந்தன, அவற்றை நான் இல்லாமலாக்கினேன். அதற்க்கு IMF எங்களுக்கு உதவியது. இவ்வாறான நிலை நீடிக்காமல் இருக்க வேண்டுமானால் இவர்களுடனான ஒப்பந்தங்களை மீறாது நாங்கள் செயற்பட வேண்டும். அத்துடன். அரச ஊழியர்களுக்கு ஜனவரி மாதத்தில் 5000 ரூபாய் சம்பள அதிகரிப்பை வழங்கினோம். பின்னர் ஏப்ரல் மாதம் 10000 ரூபாவாக அதிகரித்தோம். எதிர்காலத்தில் அரச ஊழியர்களுக்கு பாரியளவான சம்பள அதிகரிப்பை வழங்கவுள்ளதாக அவர் தெரிவித்தார்.

## பதவிக்காக அன்றி எதிர்கால தமிழினத்திற்காக தமிழ் தலைவர்கள் உருவாக வேண்டும்

### முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் வெள்ளிமலை

**பெரியபோரதீவு தினகரன் நிருபர்**



தமிழ் மக்கள் விடுதலையடைய வேண்டுமாயின் அனைவரும் ஒன்றுபட வேண்டும். ஒவ்வொருவரும் வெவ்வேறு பக்கங்களில் செல்வதனால் எவ்வித பலனும் கிடைக்கப்வேதில்லை என மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும், முன்னாள் கிழக்கு மகாண சபை உறுப்பினருமான வெள்ளிமலை என அழைக்கப்படும் ஞானமுத்து கிருஷ்ணபிள்ளை தெரிவித்துள்ளார். களுவாஞ்சிகுடியில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது இதனை தெரிவித்த அவர்,

பொதுவேட்பாளர் என்றொருவர் இருக்கும்போது தமிழ் கட்சிகளின் தலைவர்கள் பெரும்பான்மை இனத்துக்கு வாக்களிக்கச் சொல்வதை ஏற்றுக்கொள்ள முடியாது. ஏனெனில் இலங்கையில் 1948 ஆம் ஆண்டிலிருந்து தற்போது வரையும் உள்ள சிங்கள பெரும் தலைவர்கள் தேர்தல் காலங்களில் போலி வாக்குறுதிகளை வழங்கி வாக்குளை பெற்றுச் செல்கின்றனர்.

இற்றைவரையில், தமிழ் மக்களுக்கான தீர்வை தருவதாக எந்தவொரு சிங்கள தலைவர்களும் கூறியது கிடையாது. ஆனால், என்.எம்.பெரேரா பதவிக்கு அமர்வதற்கு முதல் தமிழ் மக்களுக்கு பிரச்சனை உள்ளது. அவற்றை தீர்த்துவைக்க வேண்டும் என பேசினார். பதவிக்கு வந்த பின்னர் கொல்வின் ஆர்.டி.சில்வா உட்பட அந்த எண்ணம் மாறி சிங்களவாதம் பேசினார்கள்.

எனவே, எதிர்கால தமிழினத்திற்காக ஒன்றுபட தமிழ் தலைவர்கள் உருவாக வேண்டுமே தவிர, பதவி மோகத்தால் ஒவ்வொருவரும் அறிக்கைவிடுவதை அடியோடு மறுப்பதாகவும், அதனை தமிழ் மக்களும் விரும்பவில்லையெனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

'உதிரம் கொடுப்போம் உயிர் காப்போம்'

## பொத்துவில் ஆதார வைத்தியசாலையில் இரத்ததான நிகழ்வு முன்னெடுப்பு

**பாலமுனை விசேட நிருபர்**



பொத்துவில் ஆதார வைத்தியசாலையின் இரத்த வங்கியில் நிலவும் இரத்தப் பற்றாக்குறையினை நிவர்த்தி செய்யும் நோக்கில், பொத்துவில் சுகாதார வைத்திய அதிகாரி காரியாலமும் குருதிக் கொடையாளர் ஒன்றியமும் இணைந்து நேற்று (01)இரத்ததான நிகழ்வொன்றை பொத்துவில் ஆதார வைத்தியசாலையில் ஏற்பாடு செய்திருந்தது.

'உதிரம் கொடுப்போம் உயிர் காப்போம்' எனும் தொனிப்பொருளில் இடம்பெற்ற குறித்த இரத்ததான நிகழ்வில் பொத்துவில் பிரதேசத்தைச் சேர்ந்த பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், குருதிக் கொடையாளர் ஒன்றியத்தின் உறுப்பினர்கள் என பலரும் கலந்துகொண்டு இரத்ததானம் செய்தனர். இந்நிகழ்வில், பொத்துவில் சுகாதார வைத்திய அதிகாரி டொக்டர் உவைஸ் பாறூக், மேற்பார்வை பொதுச் சுகாதார பரிசோதகர் எம்.எஸ்.எம்.அப்துல் மலிக் மற்றும் குருதிக் கொடையாளர் ஒன்றியத்தின் தலைவரும், பொத்துவில் பிரதேச சபையின் முன்னாள் தவிசாளருமான எம்.எஸ்.அப்துல் வாசித் உள்ளிட்ட அதன் உறுப்பினர்கள் பலரும் கலந்துகொண்டனர்.

## வாகன விபத்தில் ஒருவர் உயிரிழப்பு

**மாளிகைக்காடு குறூப் நிருபர்**

கல்முனை, மட்டக்களப்பு பிரதான வீதியில், களுவாஞ்சிகுடி உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் அலுவலகத்திற்கு முன்பாக இடம்பெற்ற வாகன விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார். குறித்த விபத்து கடந்த 30 ஆம் திகதி இடம்பெற்றுள்ளது.

துவிச்சக்கர வண்டியின் பின்பகுதியில் சொகுசு பஸ்ஸொன்று மோதியதில் இவ் விபத்து இடம்பெற்றுள்ளதாகவும் இதில், துவிச்சக்கர வண்டியில் பயணித்தவரே உயிரிழந்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை களுவாஞ்சிகுடி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.





வரலாற்றுப்பிரசித்தி பெற்ற காரைதீவு பாலையடி வால விக்னேஸ்வரர் ஆலய வருடாந்த மஹோற்சவத்தின் ஓரங்கமான பாற்குடபவனி நேற்று (01) காலை நடைபெற்றபோது.... படங்கள்: காரைதீவு குறூப் நிருபர்

## இன்று இஸ்ரேலை எதிர்க்கும் அநுர நாளை தேனிலவு பாடமாட்டாரென எவ்வாறு நம்புவது?

### இம்ரான் எம்.பி கேள்வி

**தம்பலகாமம் குறூப் நிருபர்**

அநுரவும் அவரின் சஹாக்களும் அடுத்தடுத்து மேற்குலக நாடுகளுக்கு விஜயத்தை மேற்கொண்டுள்ளதாகவும், இன்று இஸ்ரேலை எதிர்க்கும் இவர்கள் நாளை இஸ்ரேலுடனும் தேனிலவு கொண்டாடமாட்டார்கள் என எவ்வாறு நம்புவது? என பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் கேள்வியெழுப்பியுள்ளார். கடந்த 30 ஆம் திகதி கிண்ணியாவில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும்போது இதனை தெரிவித்த அவர், தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

மோடி அரசாங்கத்தின் நிகழ்ச்சி நிரலில் அநுரவின் இந்தியா விஜயம் இடம்பெற்றது. முஸ்லிம்களையும் சிறுபான்மை மக்களையும் வஞ்சிக்கும் மோடி அரசாங்கத்தின் நிகழ்ச்சி நிரலுக்கு அமைவாகவே அநுரவும் அவரது சகாக்களும் இந்தியா சென்றனர். இந்தியாவின் அழைப்புக்கமைய, மோடி அரசின் நிகழ்ச்சி நிரலுக்கு அமையவே, அநுரவின் இந்தியா விஜயம் அமைந்திருந்தது.

வெளிநாட்டு முதலீடுகளுக்கு எதிராக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடும் அநுர, இந்திய விஜயத்தின் பின் இந்தியாவின் முதலீடுகளுக்கு எதிராக இதுவரை எந்த ஆர்ப்பாட்டத்தையும் முன்னெடுக்கவில்லை.

## முஸ்லிம் கட்சிகளின் பிரதநிதிகளை சந்தித்த இந்திய தேசிய பாதுகாப்பு ஆலோசகர்

### ஜனாதிபதி தேர்தல் நிலைவரம் குறித்தும் ஆராய்வு

**அஸ்லம் எஸ்.மௌலானா**

இலங்கைக்கு விஜயம் செய்திருந்துள்ள இந்திய தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் தொவால் முஸ்லிம் கட்சிகளின் பிரதிநிதிகளையும் சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

இச் சந்திப்பில், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் செயலாளர் ஜனாதிபதி சட்டத்தரணி நிசாம் காரியப்பரும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் சார்பாக அதன் தலைவர் ரிஷாட் பதியுத்தீன் மற்றும் அமிர் அலி ஆகியோரும் பங்குபற்றியிருந்தனர்.

இதன்போது, தங்களுடைய இரு கட்சிகளும் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸவை ஆதரிக்க தீர்மானித்துள்ளதாகவும், இதுவரை நடத்தப்பட்ட பிரசார கூட்டங்கள் வெற்றிகரமாக நடத்தப்பட்டுள்ளதாகவும் அவர்கள் சுட்டிக்காட்டினர்.

மேலும், இந்தியாவின் தொடர்ச்சியான ஆதரவு இலங்கைக்கு கிடைக்கும் என எதிர்பார்ப்பதாகவும் பொருளாதார விடயங்கள் மற்றும் முஸ்லிம்கள் உள்ளிட்ட சிறுபான்மையினரின் உரிமைகள் சம்பந்தமான விடயங்களிலும் இந்தியாவின் பங்களிப்பு இருக்கும் என தாம் எதிர்பார்ப்பதாக முஸ்லிம் கட்சிகளின் பிரதிநிதிகள் வலியுறுத்தியுள்ளனர். இவர்களால் சொல்லப்பட்ட விடயங்கள் சம்பந்தமாக இந்தியாவும் ஒரு சாதகமான நிலைப்பாட்டில் இருப்பதாக இந்திய தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் தொவால் குறிப்பிட்டுள்ளார்.

## ஆயித்தியமலை புனித சதா சகாய மாதா திருத்தலத்தின் 70ஆவது ஆண்டு திருவிழா





**புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்**

மட்டக்களப்பு மாவட்டத்தின் மேற்கே அமைந்துள்ள புகழ்பெற்ற ஆயித்தியமலை புனித சதா சகாய மாதா திருத்தலத்தின் 70ஆவது வருடாந்த திருவிழா கடந்த 30 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமானது.

கரடியனாறு சந்தியிலிருந்து அன்னையின் திருச்சொரூப பவனி ஆலயத்தை வந்தடைந்து, அருட்தந்தை ஜெரிஸ்டன் வின்சன் தலைமையில், மண்முனை மேற்கு பிரதேச செயலாளர் என்.சத்தியானந்தி பங்குபற்றலுடன் கொடியேற்றம் இடம்பெற்று முதலாம் நவநாள் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது.

அன்னையின் இறுதி பெருவிழா கூட்டுத்திருப்பலி மட்டக்களப்பு மறைமாவட்ட ஆயர் ஜோசப் பொன்னையா ஆண்டகை தலைமையில் எதிர்வரும் 8 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணிக்கு இடம்பெறபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## மல்வத்தை விபுலாநந்த ம.வியில் மாணவருக்கான பயிற்சிநெறி

**கல்முனை மத்திய தினகரன் நிருபர்**

மாணவர்களுக்கான தலைமைத்துவ மற்றும் போதைப்பொருள் தடுப்புக்கான ஒருநாள் பயிற்சி நெறி கடந்த 29 ஆம் திகதி மல்வத்தை விபுலானந்த மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது.

இப்பயிற்சியில் ஒலுவில் அல்ஹம்றா மகா வித்தியாலய மாணவர்கள் 35 பேர் கலந்துகொண்டு சான்றிதழ்களையும் பெற்றுக்கொண்டனர்.

பொலிஸ் கெடட் பிரிவின் பணிப்பாளரும், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருமான சிந்தக குணரத்னவின் தலைமையில், சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் சஜீவ மெதவத்தவின் வழிகாட்டலுதலுக்கமைய, மாணவர்களுக்கு தலைமைத்துவப் பயிற்சி மற்றும் போதைப்பொருள் தடுப்புக்கான ஒருநாள் பயிற்சி முகாம் நடத்தப்பட்டது. இதில் பிரதம அதிதியாக கிழக்கு மாகாணத்துக்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் அஜித் ரோஹண கலந்துகொண்டு மாணவர்களுக்கு தலைமைத்துவம் சம்மந்தமாக தெளிவூட்டினார்.



# வரலாற்று சிறப்பு மிக்க நல்லூர் கந்தசுவாமி ஆலய தேர்த்திருவிழா







யாழ். விசேட நிருபர்

வரலாற்றுச் சிறப்பு மிக்க நல்லூர் கந்தசுவாமி ஆலய வருடாந்த மகோற்சவ தேர்த்திருவிழா நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை நடைபெற்றது.

காலை 6 மணியளவில் ஆரம்பமான விசேட பூஜை வழிபாடுகளை தொடர்ந்து ஆறுமுக பெருமான் வள்ளி தெய்வானை சமேதரராய் தேரில் ஆரோகணித்து பக்தர்களுக்கு அருட்காட்சி அளித்தார்.

ஆயிரக்கணக்கான அடியவர்கள் அங்கப் பிரதட்சணம் செய்தும், நூறுக்கணக்கானவர்கள் காவடிகள் எடுத்தும் கற்பூர சட்டிகள் ஏந்தியும் முருக பெருமானை வழிபட்டனர்.

இன்று திங்கட்கிழமை காலை 7 மணிக்கு தீர்த்தோற்சவம் நடைபெறவுள்ளதுடன், மாலை 5 மணிக்கு கொடியிறக்கம் நடைபெறவுள்ளது.

# அமரர் சௌமியமூர்த்தி தொண்டமானின் 111 ஆவது ஜனன தினம் அனுஷ்டிப்பு



'மலையகத்தின் தந்தை' என போற்றப்படுகின்ற பெருந்தலைவர் அமரர் சௌமியமூர்த்தி தொண்டமானின் 111 ஆவது ஜனன தினம் கடந்த வெள்ளிக்கிழமை (30) அனுஷ்டிக்கப்பட்டது.

கொழும்பு பழைய நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் அமைந்துள்ள அவரது உருவச் சிலைக்கு இ.தொ.காவின் பிரதிநிதிகள் மலர்மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

இ.தொ.காவின் பொதுச்செயலாளரும், நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சருமான ஜீவன் தொண்டமான், இ.தொ.காவின் தலைவரும், கிழக்கு மாகாண ஆளுநருமான செந்தில் தொண்டமான், இ.தொ.காவின் தவிசாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான மருதபாண்டி ராமேஷ்வரன், தொழில் இராஜாங்க அமைச்சர் வடிவேல் சுரேஸ், இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பிரதித் தலைவர்கள், உப தலைவர்கள், முன்னாள் பிரதேச சபை தலைவர்கள், உறுப்பினர்கள் உப்பட இ.தொ.கா முக்கியஸ்தர்கள் என பலர் இந்நிகழ்வில் பங்கேற்றிருந்தனர்.

இந்நிகழ்வின் பின்னர் இ.தொ.காவின் தலைமையகமான சௌமியபவனில் பூஜை வழிபாடுகள் இடம்பெற்றிருந்தன. அத்துடன், கொட்டகலையில் உள்ள சி.எல்.எப் வளாகம் உட்பட மலையக பகுதிகளிலும் ஜனன தின நிகழ்வுகள் இடம்பெற்றன.

சுதந்திர இலங்கையில் உருவான முதலாவது நாடாளுமன்றத்தில் உறுப்பினராக அங்கம் வகித்தவர் அமரர் சௌமியமூர்த்தி தொண்டமான்.

இலங்கை, இந்திய காங்கிரஸ் உருவாக்கத்துக்கு முக்கிய பங்களிப்பு வழங்கிய அவர் அதன் தலைவராகவும் செயற்பட்டுள்ளார். இலங்கை, இந்திய காங்கிரஸ், இலங்கை தொழிலாளர் காங்கிரஸாக பெயர் மாற்றம் பெற்றது முதல் அதன் தலைவராக செயற்பட்டார்.

முக்கிய பல அமைச்சுகளை வகித்துள்ளார். இலங்கையில் சிறந்ததொரு தேசிய தலைவராகவும் செயற்பட்டார்.

# தமிழ் அரசியல்வாதிகள் பொறுப்புடன் நடந்து கொள்ள வேண்டும்

## சி.வி.விக்னேஸ்வரன் எம்.பி



இனப் பிளவுகளை வலியுறுத்துவது தமிழர் பிரச்சினையை பலவீனப்படுத்தி தேசிய நல்லிணக்கத்துக்குப் பின்னடைவை ஏற்படுத்துமென பாராளுமன்ற உறுப்பினர் சி.வி.விக்கினேஸ்வரன் எச்சரித்துள்ளார். தமிழ் அரசியல்வாதிகள் பொறுப்புடன் நடந்து கொள்ள வேண்டும், சாத்தியமான வீழ்ச்சிக்கு தென்னிலங்கையைக் குறை கூறக்கூடாதென்றும் அவர் கூறியுள்ளார்.

தமிழ் அரசியல்வாதிகளின் பொறுப்பற்ற செயல்களால் ஏற்படப்போகும் விளைவுகளை எடுத்துக்காட்டிய அவர், சாதாரண மக்களே இதனால் பாதிக்கப்படுவரென்றும் குறிப்பிட்டுள்ளார்.

தீவிரவாதத்தைத் தூண்டும் ஆபத்துகளுக்கு எதிராக எச்சரிக்கை விடுத்த அவர், அனைவரையும் உள்ளடக்கிய மற்றும் அமைதியான அணுகுமுறைக்கும் அழைப்பு விடுத்துள்ளார்.

வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துதல், வடக்குக்கான முதலீடுகளை ஈர்த்தல், பிராந்தியத்தை வர்த்தக மையமாக மாற்றுவது, உள்ளூர் பொருளாதாரம் மற்றும் சமூகங்களுக்கு நன்மை பயக்கும் வகையில் பிரிவினையை வளர்க்ககூடாதென்றும் வலியுறுத்தினார்.

தனிநாடு என்ற தீவிர சித்தாந்தத்துக்கு முற்றுப்புள்ளி வைத்து, நவீன மற்றும் அமைதியான இலங்கையில் அனைத்து சமூகங்களும் வாழவேண்டுமென அவர் குறிப்பிட்டார்.

# நல்லூரில் சஜித் பிரேமதாச



யாழ்ப்பாணத்திற்கு இரண்டு நாள் விஜயம் மேற்கொண்ட எதிர்க்கட்சி தலைவரும், ஜனாதிபதி வேட்பாளருமான சஜித் பிரேமதாச கடந்த சனிக்கிழமை நல்லூர் கந்த சுவாமி ஆலயத்திற்குச் சென்று வழிபாட்டில் ஈடுபட்டார். சஜித் பிரேமதாச நேற்று ஞாயிற்றுக்கிழமையும் யாழ்ப்பாணத்தில் தங்கி இருந்து பல்வேறு தரப்பினருடனும் பேச்சு வார்த்தைகளில் ஈடுபட்டார்.

# வடபகுதியில் மனிதாபிமான கண்ணிவெடி அகற்றலில் ஈடுபடும் ஸார்ப்

(பரந்தன் குறூப் நிருபர்)

முல்லைத்தீவு, தச்சடம்பன், அம்பகாமம், ஒலுமடு மற்றும் மாங்குளம் கொக்காவில் பகுதியிலும், கிளிநொச்சி மாவட்டத்தில் முகமாலை இயக்கச்சி மற்றும் ஆனையிறவிலும் தட்டுவன்கொட்டி பகுதியிலும் முப்பத்தொரு இலட்சத்து இருபத்தையாயிரத்து ஐநூற்று முப்பத்தெட்டு சதுரமீற்றர் பரப்பளவில் இருந்து எழுபத்தேழாயிரத்து எழுநூற்று ஐம்பத்தைந்து அபாயகரமான வெடிபொருட்களை அகற்றியுள்ளதாக ஸார்ப் நிறுவனத்தின் நடவடிக்கை முகாமையாளர் ஓய்வுபெற்ற கப்டன் பிரபாத் நாரம்பனவ தெரிவித்தார். வடபகுதியில் மனிதாபிமான கண்ணிவெடியகற்றலில் ஈடுபடும் ஸார்ப் நிறுவனம், வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில்,

இலங்கையின் வடபகுதியில் மனிதாபிமான கண்ணிவெடியகற்றலில் ஜப்பான் மற்றும் அமெரிக்கா நாட்டு நிதியுதவியுடன் ஈடுபடும் ஸார்ப் (sharp) மனிதாபிமானக் கண்ணிவெடியகற்றும் அரச சார்பற்ற நிறுவனமானது 2016 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் தொடக்கம் 2024 ஆகஸ்ட் மாதம் 18 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் முல்லைத்தீவு மாவட்டத்தில் ஒட்டுசுட்டான் பிரதேச செயலகத்தின் கீழ் உள்ள தச்சடம்பன், அம்பகாம், ஒழுமடு மற்றும் மாங்குளம், கொக்காவில் பகுதியிலும், புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்தின் கீழ் உள்ள பகுதியிலும் கிளிநொச்சி மாவட்டத்தில் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகத்தின் கீழ் உள்ள முகமாலை, இயக்கச்சி மற்றும் ஆனையிறவிலும் கண்டாவளை பிரதேச செயலகத்தின் கீழ் உள்ள தட்டுவன்கொட்டி பகுதியிலும் முப்பத்தொரு இலட்சத்து இருபத்தையாயிரத்து ஐநூற்று முப்பத்தெட்டு சதுரமீற்றர் பரப்பளவில் இருந்து எழுபத்தேழாயிரத்து எழுநூற்று ஐம்பத்தைந்து (77இ755) அபாயகரமான வெடிபொருட்களை அகற்றியுள்ளதாக ஸார்ப் நிறுவனத்தின் நடவடிக்கை முகாமையாளர் ஓய்வுபெற்ற கப்டன் பிரபாத் நாரம்பனவ தெரிவித்தார்.

# கிளிநொச்சி வைத்தியசாலையில் குருதி தட்டுப்பாடு

கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் ஓ வகை குருதி தட்டுப்பாடு நிலவுவதாக மாவட்ட வைத்தியாலையின் இரத்த வங்கி தெரிவித்துள்ளது.

மாவட்ட வைத்தியசாலையின் இரத்த வங்கியில் O+ மற்றும் O இரத்த வகைகளுக்கு தட்டுப்பாடு காணப்படுகிறது. எனவே குருதி கொடை வழங்கும் அன்பர்கள் மாவட்ட வைத்தியசாலையின் இரத்த வங்கியுடன் தொடர்பு கொண்டு இரத்த தானம் செய்ய முடியும் எனவும் தெரிவித்துள்ளனர்.




# ஜனாதிபதி ரணிலின் வெற்றி காலத்தின் கட்டாயமாகும்; அவர் தோல்வியுற்றால் முழு நாடும் தோல்வியடையும்

## மருதபாண்டி ராமேஷ்வரன் எம்.பி தெரிவிப்பு

**ஹற்றன் சுழற்சி நிருபர்**



ஜனாதிபதி தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க வெற்றிபெற வேண்டியது காலத்தின் கட்டாயமாகும் எனவும் சிலவேளை அவர் தோல்வியடைந்தால் முழு நாடும் தோல்வியடைந்து மீண்டும் வரிசை யுகத்துக்குச் செல்ல நேரிடும் என இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தவிசாளரும், நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான மருதபாண்டி ராமேஷ்வரன் தெரிவித்தார்.

எனவே, மலையக மக்கள் உட்பட ஒட்டுமொத்த நாட்டு மக்களும், நாட்டின் நலன்கருதி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை வெற்றிபெற வைக்க வேண்டும் என அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

ஜனாதிபதி வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்கவை ஆதரித்து நேற்று முன்தினம் (31) கொட்டகலை பகுதியில் இடம்பெற்ற பிரசார கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போது இதனை தெரிவித்த அவர்,

எமது மக்களின் அமோக ஆதரவுடன் நானும், எமது கட்சியின் பொதுச்செயலாளர் அமைச்சர் ஜீவன் தொண்டமானும் பாராளுமன்றத்துக்கு தெரிவானோம். அதனால் நெருக்கடியான காலகட்டத்தில்கூட எமது மக்களுக்கு எம்மால் சேவையாற்ற முடிந்தது.

எமது பொதுச்செயலாளர் அமைச்சரான பின்னர் குறுகிய காலப்பகுதிக்குள் மலையகத்துக்கும், முழு நாட்டுக்கும் பல சேவைகளை செய்துள்ளார். கொட்டகலை உட்பட பல பகுதிகளில் வீதிகள் புனரமைக்கப்பட்டன. உட்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்பட்டன. கடந்தகாலங்களில் முழுமைப்படுத்தப்படாதிருந்த வீட்டுத் திட்டங்கள் முழுமைப்படுத்தப்பட்டுள்ளன. புதிய வீடமைப்புத் திட்டங்கள் ஆரம்பமாகின.

நுவரெலியா மாவட்டத்திலுள்ள அனைத்து பாடசாலைகளுக்கும் தேவையான உபகரணங்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியான பின்னர், வரிசை யுகத்துக்கு முடிவுகட்டினார். பொருளாதாரத்தை மேம்படுத்த திட்டங்களை வகுத்தார். இன்று ரூபாவின் பெறுமதி வலுவடைந்து வருகின்றது. பொருட்களின் விலைகளும் குறைவடைந்துள்ளன. சுற்றுலாப்பயணிகளின் வருகை அதிகரித்துள்ளது. எமது பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு சம்பள உயர்வும் வழங்கப்பட்டுள்ளது .

எனவே, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்நாட்டை ஆள வேண்டியது காலத்தின் கட்டாய தேவையாகும். இன்னும் ஐந்தாண்டுகளுக்கு அவரின் தலைமைத்துவம் இருந்தால் இந்நாடு நிச்சயம் முன்னேறும். சிலவேளை ரணில் விக்கிரமசிங்க தோற்றால் அது தனிமனிதனுக்குரிய தோல்வி அல்ல, இந் நாட்டின் தோல்வியாகும். மீண்டும் வரிசை யுகம் உருவாகும் என அவர் தெரிவித்தார்.

அமைச்சர் ஜீவன் தொண்டமானின் ஆலோசனைக்கமைய, பாராளுமன்ற உறுப்பினர் எம்.ராமேஷ்வரனின் தலைமையில் இடம்பெற்ற இக்கூட்டத்தில் கொட்டகலை பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் ராஜமணி பிரசாத், இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பிரதி தலைவர் அனுஷா சிவராஜா உள்ளிட்ட கட்சியின் முக்கியஸ்தர்கள் என பலர் கலந்துகொண்டனர்.

# சிறுத்தைக்கு உணவான 25 நாய்கள் ; பலாங்கொடை பிரதேச மக்கள் அச்சம்!

**இரத்தினபுரி சுழற்சி நிருபர்**

வீடுகளில் வளர்க்கப்பட்ட 25 நாய்களை இழுத்துச் சென்று வேட்டையாடியதாக கூறப்படும் சிறுத்தையொன்றின் நடமாட்டத்தினால் பலாங்கொடை மெத்தகந்த பிரதேச மக்கள் அச்சம் வெளியிட்டுள்ளனர்.

மெத்தகந்த உள்ளிட்ட கிராமங்கள் மற்றும் காட்டுப்பகுதியில் இச்சிறுத்தை உலா வருவதாகவும் இப்பகுதி வீடுகளில் வளர்க்கப்படும் செல்லப் பிராணிகளையும் இழுத்துச் சென்று கொன்று உணவாகக் உட்கொள்வதாகவும் இம் மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

பனானகந்த, பீல்லகும்புர, கெசெல்வத்த மற்றும் மெத்தெகந்த ஆகிய கிராமங்களில் வீடுகளில் வளக்கப்பட்டு வரும் நாய்கள் அடிக்கடி காணாமல் போகின்றமை தொடர்பாக, மக்கள் அவதானம் செலுத்தியுள்ள நிலையில், இச் சிறுத்தையின் நடமாட்டமும் இது நாய்களை இழுத்துச்செல்வதும் தெரியவந்துள்ளது.

அதன்படி, குறித்த பகுதிகளில் வீடுகளில் வளக்கப்பட்டு வந்த சுமார் 25 நாய்கள் காணாமல்போயுள்ள நிலையில், அவற்றின் எஞ்சிய எலும்புக்கூடுகளும் எச்சங்களும் அப்பிரதேச பற்றைக் காடுகளுக்குள் இருந்து கண்டெடுக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், இப்பிரதேசத்தில் தேயிலை தோட்டங்களில் பணியாற்றும் தொழிலாளர்கள் அச்சமடைந்துள்ளதாகவும், பொறுப்புவாய்ந்த அதிகாரிகள் தமது பாதுகாப்பு தொடர்பாக உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமெனவும் பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# மலையக மக்களுக்கு அஸ்வெசும நலன்புரி திட்டத்தின் கீழ் உதவி வழங்க ஜனாதிபதி உறுதி

## செந்தில் தொண்டமான் தெரிவிப்பு

**மாத்தளை சுழற்சி நிருபர்**

அரசினால் முன்னெடுக்கப்படும் அஸ்வெசும நலன்புரி திட்ட உதவித்தொகையை மலையக தோட்டப்புறங்களில் வசிக்கும் மக்களுக்கும் மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகளை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்னெடுத்து வருவதாக கிழக்கு மாகாண ஆளுநரும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவருமான செந்தில் தொண்டமான் தெரிவித்தார். மாத்தளை மகாத்மா காந்தி சர்வதேச மண்டபத்தில் நேற்று முன்தினம் (31) இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும்போது அவர் இதனை தெரிவித்தார்.



மாத்தளை மாவட்ட இ.தொ.கா.வின் அமைப்பாளரும் மத்திய மாகாண சபை முன்னாள் உறுப்பினருமான எம்.சிவஞானம் தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில், இ.தொ.க மாத்தளை மாவட்ட பிரதிநிதிகள் தோட்டக் கமிட்டி தலைவர்கள், ஆலய அறங்காவலர் சபை உறுப்பினர்கள் மற்றும் பல்வேறு சமூக அமைப்புகளைச் சேர்ந்த பிரதிநிதிகள் என பலரும் கலந்து கொண்டனர்.

இதன்போது, முன்னாள் இ.தொ.கா கட்சியின் தலைவர் சௌமியமூர்த்தி தொண்டமான் மற்றும் மகாத்மா காந்தியின் உருவப்படங்களுக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தியதன் பின்னர் உரையாற்றிய ஆளுநர் செந்தில் தொண்டமான்,

அஸ்வெசும நலன்புரி திட்டத்தை மலையக மக்களுக்கும் பெற்றுக்கொடுப்பது தொடர்பாக ஜனாதிபதியிடம் அண்மையில் நடத்திய கலந்துரையாடலின் போது, மலையக தோட்டப்புறங்களில் வசிக்கும் தகுதியான சகல குடும்பங்களுக்கும் அஸ்வெசும நலன்புரி திட்ட உதவித்தொகையை வழங்குவதற்கான துரித நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக ஜனாதிபதி தன்னிடம் உறுதியளித்துள்ளார்.

மேலும், ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மக்களுக்கு வழங்கிவரும் சாத்தியமான வாக்குறுதிகளை நிச்சயமாக நிறைவேற்றுவார். எனவே இந் நாட்டின் பொருளாதாரம், அபிவிருத்தித் துறைகள் மற்றும் எதிர்காலத்தை கருத்திற்கொண்டு, எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் சுயேட்சையாகப் போட்டியிடும் ரணில் விக்ரமசிங்கவை இந்நாட்டு மக்கள் ஒன்றிணைந்து ஆதரிக்க வேண்டும் என அவர் தெரிவித்தார்.

# போலி வாக்குச்சாவடிகள் அமைக்கப்பட்டு வாக்கெடுப்பு

**இரத்தினபுரி சுழற்சி நிருபர்**

போலியான வாக்குச்சாவடி ஒன்று அமைத்து அதில் வாக்கெடுப்பு நடத்தப்பட்ட சம்பவமொன்று தொடர்பாக எக் சத் லங்கா பொதுஜன கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் பிரியந்த குமார ரத்னாயக எம்பிலிப்பிட்டிய பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடொன்றை பதிவுசெய்துள்ளார்.

கடந்த 21ஆ ம் திகதி எம்பிலிபிட்டிய நகரசபைக்கு முன்னால், ஒரு கட்டடத் தொகுதியில் வாக்குச் சாவடி அமைக்கப்பட்டு வாக்கு பெட்டிகள், வாக்களிப்பதற்கான மறைவிடம் ஆகிய வசதிகளுடன் வீதியில் சென்றவர்கள் அழைத்து வரப்பட்டு, வாக்களிப்பதற்கான வாய்ப்புக்கள் வழங்கப்பட்டுள்ளதாகவும், பின்னர் அதன் முடிவுகள் முகநூலில் பிரசுரிக்கப்பட்டதாகவும் அவர் தனது முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார்.

# கம்பி வலையில் சிக்கிய சிறுத்தை உயிருக்கு போராடிய நிலையில் பலி

**ஹற்றன் சுழற்சி நிருபர்**



மஸ்கெலியா பொலிஸ் பிரிவுகுட்பட்ட மவுஸ்ஸாக்கலை லக்கம் தோட்டத்தின் வீட்டுத்தோட்டப் பகுதியில், கம்பியில் சிக்குண்டு சிறுத்தையொன்று உயிரிழந்துள்ளது.

மரக்கறி தோட்டமொன்றில் மிருகங்களிடமிருந்து விளைச்சலை பாதுகாக்கும் நோக்கில் போடப்பட்டிருந்த கம்பி வலையிலேயே இச் சிறுத்தைப்புலி சிக்கியுள்ளது.

இது தொடர்பாக, அப்பிகுதி மக்களால் தோட்ட அதிகாரிக்கு தகவல் வழங்கப்பட்டதையடுத்து, குறித்த அதிகாரி மஸ்கெலியா பொலிஸாருக்கு தெரியப்படுத்தியுள்ளார்.

பின்னர், நல்லத்தண்ணி வனவிலங்கு அதிகாரிகளுக்கு வழங்கப்பட்ட தகவலுக்கமைய, பொலிஸார், வனவிலங்கு அதிகாரிகள் ஆகியோர் சம்பவ இடத்துக்கு விரைந்தனர்.

கம்பியில் சிக்குண்டு பல மணிநேரமாக உயிருக்கு போராடிய நிலையில், குறித்த சிறுத்தை நேற்று (01) உயிரிழந்த நிலையில் மீட்கப்பட்டதாக நல்லதண்ணி வனவிலங்கு அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்நிலையில், உயிரிழந்த சிறுத்தை ஹட்டன் நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டதன் பின்னர், நீதவானின் உத்தரவுக்கமைய, சிறுத்தையின் சடலம் பிரேத பரிசோதனைக்காக ரந்தெனிகல வனவிலங்கு கால்நடை வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளது.

மேலும். கம்பி வலையை போட்ட சந்தேகநபரை கைதுசெய்வதற்கான நடவடிக்கைகளையும் மஸ்கெலியா பொலிஸாரும் நல்லதண்ணி வனவிலங்கு அதிகாரிகளும் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.


# இலங்கையில் வணிகக்குறி எச்சரிக்கை அறிவித்தல்

வகுப்பு 29 - கொண்டைக் கடலை மற்றும் பருப்பு வகைகள், வகுப்பு 30 - அரிசியுடன் தொடர்புபட்டு பயன்படுத்தப்படும் பின்வரும் வணிகக்குறிகளின் ஏக உரிமையாளராக இந்தியா, இந்தோர்-452020, பல்டா, நெமாவர் வீதி, சக்தி தரம் கந்தாவுக்கு பின்னால், 334/1/18 மார்பிள் மண்டி, Rajat Agro Commodities Pvt. Ltd. (இந்திய சட்டங்களின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட நிறுவனம் ஒன்று) உள்ளது என்பதை எமது வாடிக்கையாளர்களுக்கு இத்தால் அறியத்தரப்படுகிறது.




2011 தொடக்கம் இலங்கையில் மேற்குறிப்பிட்ட வணிகக்குறிகளை எமது வாடிக்கையாளர்கள் பயன்படுத்தி வருகின்றனர் என்பதை பொதுமக்கள் மற்றும் வர்த்தகர்களுக்கு அறியத்தருகிறோம் என்பதோடு மேற்குறிப்பிட்ட அடையாளம் அல்லது பொதுமக்களை தவறுதலாக வழிநடத்தும் வகையில் அதனை ஒத்த ஓர் அடையாளத்தை பயன்படுத்துவது மேலுள்ள அடையாளத்தின் உரிமையாளர்களாக எமது வாடிக்கையாளர்களின் உரிமைகளை மீறுவதாக அமையும் என்பதோடு அது இலங்கையின் 2003 இன் 36 ஆம் இலக்க புலமை சொத்து சட்டத்தின் கீழ் பாதுகாக்கப்பட்ட பிரத்தியேக உரிமைகளை மீறுவதாகும்.

எந்த ஒரு நபரும் எந்த ஓர் அடையாளத்தையும் மீறுகின்ற அல்லது மோசடி செய்கின்ற அல்லது தவறுதலாக வழிநடத்தும் வகையில் வணிகக்குறி ஒன்றை கிட்டத்தட்ட ஒத்திருக்கும் வகையில் பொருட்கள் மற்றும் சேவைகளில் எந்த ஓர் அடையாளம் அல்லது அடையாளங்களை தவறாக அமைத்தல் அல்லது அடையாளம் ஒன்றை மோசடி செய்வதற்காக ஏதேனும் சாயம், தடுப்பு இயந்திரம் அல்லது மற்ற உபகரணங்களை மோசடி செய்யும் நோக்கத்திற்காக பயன்படுத்துவோர்; அல்லது பொருட்களுக்கு எந்த ஒரு தவறான விளக்கத்தையும் பயன்படுத்தல்; அல்லது அகற்றுதல்; அல்லது அடையாளம் ஒன்றை போலியாக அமைக்கும் நோக்குடன் ஏதேனும் சாயம், தடுப்பு இயந்திரம் அல்லது மற்ற உபகரணங்களை அவரது வசம் வைத்திருப்பது; அல்லது மேலே குறிப்பிடப்பட்ட காரியங்களில் ஏதேனும் ஒன்றை செய்தல் உரிமையாளரின் உரிமையை மீறுவதாக அமையும் என்பது தொடர்பில் பொதுமக்கள் மற்றும் வர்த்தகர்கள் எச்சரிக்கையுடன் இருத்தல் வேண்டும்.

மேலும் தவறாக வழிநடத்தல் அல்லது தவறாக பயன்படுத்துவதற்காக வணிகக்குறி ஒன்றை கிட்டத்தட்ட ஒத்திருக்கும் எந்த ஓர் அடையாளம் அல்லது எந்த ஒரு போலியான அடையாளத்துடனும் எந்த ஒரு பொருட்கள் அல்லது விடயங்களையும் வணிகம் அல்லது உற்பத்தி செய்யும் எந்த ஒரு நோக்கத்திற்காகவும் விற்பதற்காக வைத்திருக்கும் எந்த ஒரு நபரும் விற்பனை செய்தல் அல்லது விற்பனையாளருக்கு வெளிப்படுத்தலும் உரிமையாளரின் உரிமைகளை மீறுவதாக அமையும்.

எனவே எந்த ஒரு நபரும் மேலுள்ள செயற்பாடுகளில் ஈடுபட்டால் அது சட்டவிரோதம் மற்றும் சட்டத்திற்கு எதிரானது என்பதோடு அத்துமீறலுக்கான சேதங்கள் மற்றும் அவர்களின் வணிகக்குறியை ஐதாக்குவதற்கு கூடுதலாக, மேற்கூறிய சட்டவிரோத மற்றும் சட்டத்திற்கு எதிரான நடவடிக்கைகளைத் தடுப்பதற்கு சட்ட தீர்வை பெறுவதற்கு Rajat Agro Commodities Pvt. Ltd தயங்காது என்று பொதுமக்கள் மற்றும் வர்த்தகங்களை எச்சரிக்கிறது.

எந்த ஒரு விசாரணைகளும் கீழ் குறிப்பிடப்பட்ட அவர்களின் சட்ட பிரதிநிதிகளுக்கு தெரிவிக்கப்படுதல் வேண்டும்:

**IP Chambers**
**காப்புரிமை மற்றும் வணிகக்குறி சட்டத்தரணிகள்**
**கட்டம் 09-2, கிழக்கு கோபுரம், உலக வர்த்தக மையம்,**
**எச்செலோன் சதுக்கம், கொழும்பு 00100**
**இலங்கை.**
**தொ.: +94-11-4693331 | மின்னஞ்சல்: mail@ipchambers.lk**



# பெறுகைக்கான அழைப்பு

## இலங்கை புகையிரத சேவை

கொழும்பிற்கு புறம்பாக அமைந்துள்ள புகையிரத நிலைய வளாகங்களில் உள்ள கீழ்வரும் பொருட்களஞ்சியசாலை கட்டிடங்களை, பொருட்களை களஞ்சியப்படுத்துவதற்காகவோ அல்லது வியாபார நடவடிக்கைகளுக்காகவோ 05 வருட காலத்திற்கு குத்தகைக்கு வழங்குவதற்கான பெறுகைக் குழு விலைமனுக் கோரல்

இலங்கை புகையிரத திணைக்களம் சார்பாக திணைக்கள பெறுகைக் குழுவின் தலைவரால் கொழும்பிற்கு புறம்பாக அமைந்துள்ள புகையிரத நிலைய வளாகங்களில் உள்ள கீழ்வரும் பொருட் களஞ்சியசாலை கட்டிடங்களை, பொருட்களை களஞ்சியப்படுத்துவதற்காகவோ அல்லது வியாபார நடவடிக்கைகளுக்காகவோ 05 வருட காலத்திற்கு குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்விதாரர்களிடமிருந்து முத்திரை பொறிக்கப்பட்ட பெறுகை விலைமனுக்கள் கோரப்படுகின்றன

| தொடரி லக்கம் | களஞ்சியசாலைகள் அமைந்துள்ள பிரதேசம் | அளவு(ச.அ) | தொடரி லக்கம் | களஞ்சியசாலைகள் அமைந்துள்ள பிரதேசம் | அளவு(ச.அ) |
|---|---|---|---|---|---|
| 1 | ஹப்புத்தளை I | 1260 | 15 | திரகோலை | 1800 |
| 2 | ஹப்புத்தளை II | 1100 | 16 | ஹிக்கடுவை | 800 |
| 3 | ஹப்புத்தளை III | 700 | 17 | மாத்தறை | 2250 |
| 4 | ஹப்புத்தளை IV | 600 | 18 | சிலாபம் | 2592 |
| 5 | ஹப்புத்தளை ஓய்வு மண்டப கட்டிடம் | 1593 | 19 | மாதம்பே | 1960 |
| 6 | ஹாலிஎல | 861 | 20 | மீரிகம | 1711 |
| 7 | உலப்பனை | 960 | 21 | ஸ்ராவஸ்த்திரபுர I | 610 |
| 8 | பானந்துறை | 1765 | 22 | ஸ்ராவஸ்த்திரபுர II | 204 |
| 9 | ஹிங்குரக்கடை | 1000 | 23 | ஸ்ராவஸ்த்திரபுர III | 204 |
| 10 | அநுராதபுரம் | 1050 | 24 | நாத்தாண்டிய | 1200 |
| 11 | பதுளை | 891 | 25 | மாத்தளை I | 1155 |
| 12 | கலடை | 1800 | 26 | மாத்தளை II | 356 |
| 13 | பலப்பிட்டிய | 989 | 27 | பொலன்னறுவை | 4680 |
| 14 | கெக்கிராவ | 1800 | | | |

**01. தகைமைகள்**

திணைக்கள நிபந்தனைகளுக்கு கீழ் அதிகூடிய விலையினை முன்வைக்கின்ற விண்ணப்பதாரிக்கு ஏற்புடைய பொருட் களஞ்சியசாலைகளுக்கு குத்தகைக்கு வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

**02. கேள்வி விண்ணப்பங்கள் பெற்றுக்கொள்ளல்.**

பெறுகை ஆவணங்களை 2024 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 25 ஆம் திகதி பி.ப 2.00 மணி வரை புகையிரத விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் அலுவலகத்தில் பெற்று கொள்ளலாம். அதற்காக கொழும்பு-10, இலங்கை புகையிரத சேவையின் பிரதான நிதி அதிகாரியிடம் மீளளிக்கப்படாத கேள்விபடிவக் கட்டணமாக ரூ.2,500/- தொகையைச் செலுத்தி பெற்றுக்கொள்ளும் பற்றுச்சீட்டை புகையிரத தலைமையகத்தின் விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் பிரதி அத்தியட்சகரிடம் சமர்ப்பித்தல் வேண்டும். கேள்வி படிவக் கட்டணத்திற்கு மேலதிகமாக அவ் அட்டணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு மீளளிக்கப்படும் கேள்வி பிணையொன்றும் செலுத்தப்பட வேண்டும். ஒரு விலைமனுகோரல் படிவத்தின் மூலம் ஒரு பொருட்களுக்கு களஞ்சியசாலை மாத்திரமே விலைமனுகோரலினை சமர்ப்பிக்கலாம்.

**03. கேள்வி விண்ணப்பங்கள் சமர்ப்பித்தல்**

மேற்படி 02ம் பந்தியில் குறிப்பிட்டுள்ளவாறு ஒவ்வொரு உணவகம் சார்பாகவும் பெற்றுக்கொள்ளப்பட்ட விண்ணப்பங்களின் மூலப்பிரதி மற்றும் நகல் பிரதிகளை முறையாக பூர்த்திசெய்து இரு உறைகளில் இட்டு முத்திரையிட வேண்டும். அவ்வுறைகளில் மூலப்பிரதி மற்றும் நகல்பிரதி என தெளிவாக குறிப்பிடுதல் வேண்டும். அவ்வுறைகள் இரண்டையும் ஒரு உறையில் இட்டு அதன் இடதுபக்க மேல் மூலையில் களஞ்சியத்தின் பெயர் மற்றும் சதுர அடியினை குறிப்பிட்டு "புகையிரத பொருட்களஞ்சியத்திற்கான விலைமனுக்கோரல்" என்று குறிப்பிட்டு அவ்வுறையை முத்திரையிட்டு 2024 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 26 ஆம் திகதி பி.ப 2.00 மணிக்கு முன்னதாக கிடைக்கக் கூடியதாக தலைவர் திணைக்கள பெறுகைக்குழு, விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் அலுவலகம், புகையிரத தலைமையகம் ஓல்கோர்ட் மாவத்தை, கொழும்பு 10 என்ற முகவரிக்கு பதிவுத் தபாலிலோ அல்லது புகையிரத தலைமையகத்தின் பிரதி அத்தியட்சகர் (விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல்) இன் உத்தியோகபூர்வ அறையில் கேள்விப்பத்திரங்கள் உள்ளிடுவதற்காக தயாரிக்கப்பட்டுள்ள விசேட கேள்விப் பெட்டியிலோ உள்ளிடலாம். அந்நேரத்தின் பின் கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். தபாலினால் தாமதமானவை அல்லது தொலைந்த விண்ணப்பங்கள் தொடர்பில் கருத்திற்கொள்ளப்பட மாட்டாது.

**04. கேள்வி ஏற்றுக்கொள்ளல் மற்றும் திறத்தல்.**

2024ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 26 ஆம் திகதி பி.ப 2.00 க்கு மேற்படி மூன்றாம் பந்தியில் தரப்பட்டுள்ள விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் அலுவலகத்தில் விண்ணப்பங்கள் திறக்கப்படுவதுடன் அவ்வேளையில் விண்ணப்பதாரியோ அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட ஒரு பிரதிநிதியோ சமுகமளிக்க அனுமதிக்கப்படும்.

**05.** கேள்விகளை கோருவதற்கு முன்னர் மேற்கூறப்பட்ட பொருட்களஞ்சியசாலைகளை பரீட்சிப்பதற்காக விண்ணப்பதாரிகளுக்கு சந்தர்ப்பங்கள் அளிக்கப்படும். அத்துடன் அதற்காக குறித்த புகையிரத நிலைய அதிபரிடம் அனுமதியைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்

**06.** திணைக்கள பெறுகைக் குழுவின் தீர்மானமே இறுதி தீர்மானமாகும்.

**07.** கேள்விதாரர்களுக்கு தேவையான மேலதிக விபரங்களை இலங்கை புகையிரத சேவையின் வர்த்தகம் மற்றும் சந்தைப்படுத்தல் அலுவலகத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம். தொ.பே.இல - 011 2421281 (நீடிப்பு - 8235, பெக்ஸ் - 011 2431909) / 011-4600944

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக்குழு,**
**புகையிரத தலைமையகம்,**
**ஓல்கோட் மாவத்தை,**
**கொழும்பு 10**

# சிறு விளம்பரம்

## மோட்டார் வாகனங்கள்

### 106 கார்கள் விற்பனைக்கு

301-5663 KIA PRIDE CAR அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 077 0107 270, 077 4789216 திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 059405

65-6880 BMW 320D CAR அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 077 0107 270, 077 4789216 திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 059425

### 107 டொயோட்டா கார்கள் விற்பனைக்கு

KE-9419 TOYOTA Vios, 2004, Car கூடிய விலைக் கோரிக்கைக்கு வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு - 03. தொ. பே - 0711-210810 / 071-4542958 059575

18-3066 TOYOTA CARINA CAR அதியுயர் விலைக்குண்டு செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 07701072 70, 07747892 16. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 059375

### 108 நிஸான் கார் விற்பனைக்கு

WP HP-5225 NISSAN SUNNY CAR அதியுயர் விலைக்குண்டு செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 07701072 70, 07747892 16. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 059397

300-1608 NISSAN MARCH CAR அதியுயர் விலைக்குண்டு செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 07701072 70, 07747892 16. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 059368

### 110 மாருதி கார்கள் விற்பனைக்கு

KE-1259 MARUTI 800, 2015, CAR கூடிய விலைக் கோரிக்கைக்கு வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு - 03. தொ. பே - 0711-210810 / 071-4542958 059555

### 119 பஸ்கள், லொறிகள் விற்பனைக்கு

CP HC-1276 MAZDA TITAN TRUCK அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 077 0107 270, 077 4789216 திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 059410

CP PV-8198 FOTON MINI TRUCK அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 077 0107 270, 077 4789216 திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 059426

DAH-2442 MAHINDRA MINI TRUCK - 2019 கூடிய விலைக் கோரிக்கைக்கு வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு - 03. தொ. பே - 0711-210810 / 071-4542958 059563

NP LM-3941 LANKA ASHOK LEYLAND 1616 அதியுயர் விலைக்குண்டு செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 07701072 70, 07747892 16. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 059341

PU-9345 TATA ACE 2012, லொறி கூடிய விலைக் கோரிக்கைக்கு வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு - 03. தொ. பே - 0711-210810 / 071-4542958 059559

SG LA-5949 LANKA ASHOK LEYLAND ECOM E அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 077 0107 270, 077 4789216 திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 059419

UP PU-5761 MAHINDRA MAXXIMO TRUCK அதியுயர் விலைக்குண்டு செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 07701072 70, 07747892 16. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 059392

266-1944 TOYOTA DYNA DUMP TRUCK அதியுயர் விலைக்குண்டு செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 07701072 70, 07747892 16. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 059378

47-8564 TOYOTA DYNA LORRY அதியுயர் விலைக்குண்டு செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 07701072 70, 07747892 16. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 059381

47-9027 TOYOTA DYNA TRUCK அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 077 0107 270, 077 4789216 திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 059415

47-9691 NISSAN ATLAS TRUCK அதியுயர் விலைக்குண்டு செங்கடகல பினான்ஸ்பிஎல்சி, கண்டி. 0770107270, 0774789216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 059386

48-6916 TOYOTA DYNA TRUCK அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 077 0107 270, 077 4789216 திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 059408

60-5623 ISUZU JOURNEY BUS அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ்பிஎல்சி, கண்டி. 077 0107270, 077 4789216 திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 059417

Repeat Your ad For Better Offers

### 122 மோட்டார் சைக்கிள், திரீவீலர்கள் விற்பனைக்கு

CP AAL-9143 BAJAJ THREE WHEELER அதியுயர் விலைக்குண்டு செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 07701072 70, 07747892 16. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 059338

NP AAI-3387 BAJAJ RE 205 THREE WHEELER அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 077 0107 270, 077 4789216 திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 059412

SG QW-6345 BAJAJ THREE WHEELER அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 077 0107 270, 077 4789216 திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 059430

SP BJB-8351 RANAMOTO PATTAYA DOUBLE P அதியுயர் விலைக்குண்டு செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 07701072 70, 07747892 16. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 059372

SP TA-3112 YAMAHA LIBERO - G5 அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 077 0107 270, 077 4789216 திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 059431

WP AAG-2009 BAJAJ THREE WHEELER அதியுயர் விலைக்குண்டு செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 07701072 70, 07747892 16. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 059370

WP AAR-0523 BAJAJ THREE WHEELER அதியுயர் விலைக்குண்டு செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 07701072 70, 07747892 16. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 059334

WP AAR-8150 PIAGGIO APE THREE WHEELER அதியுயர் விலைக்குண்டு செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 07701072 70, 07747892 16. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 059362

WP YY - 2752 BAJAJ THREE WHEELER அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 077 0107 270, 077 4789216 திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 059401

YF-6665 Bajaj - 2010 Threewheel கூடிய விலைக் கோரிக்கைக்கு வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு - 03. தொ. பே - 0711-210810 / 070-5999163 059570

### 124 டிராக்டர்கள், விவசாய உபகரணங்கள் விற்பனைக்கு

WP RE-5232 KUBOTA L4508 TRACTOR அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 077 0107 270, 077 4789216 திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 059421

## காணி/தோட்டம்

### 641 வீடு சொத்து கொழும்பு மாவட்டம் விற்பனைக்கு

மட்டக்குளி - முழுமையான இரு மாடி வீடு விற்பனைக்கு. நீர் மற்றும் மின்சாரம் வழிக் கட்டணம் வேறுவேறாகச் செலுத்தலாம். இரு குடும்பங்களுக்கும் உகந்தது. 02 வாகனங்களை நிறுத்தி வைக்கக்கூடிய வசதியுண்டு. 075-4437105, 072-4448411. 058810


OBSERVER aDZ TRUSTED CLASSIFIED GUIDE it's what you want · சிலுமின வெல சிடி · தினகரன் வாரமஞ்சரி

**Promotional Rates for Classified Advertisements** (Only 15 Words)

| Any Single Newspaper | Two Newspapers | Three Newspapers |
|---|---|---|
| Rs. 800/- (Expect Thinakaran Vaaramanjari) | Rs. 1,000/- (Expect Thinakaran Vaaramanjari) | Rs. 1,300/- |

**Badulla & Nuwaraeliya District**

Hatton - 051 22 225 63
2145 - T. P. C. Chinthaka Nanayakkara - Hatton Stores, No. 3, Main Street, Hatton.

Hatton - 052 22 773 47
2506 - C. T. Perumal - Hatton Stores, No. 3, Main Street, Hatton.

Nuwaraeliya - 052 22 341 34
2507 - A. Rajalingam - No. 6, New Market Building, Nuwaraeliya.

Thalawakele - 071 7 236 799
2517 - G. G. L. Ravindra Kumara - No. 119, 121, Nuwaraeliya Road, Thalawakele.

Kotagala - 051 4 924 447
2555 - D. Deonis Kodikara & Sons - Rosita Bazaar, Kotagala.

Haputale - 077 7 278 899
8117 - R. M. K. Fizar Khan - Multi Centre, No. 2, Main Street, Haputale.

Bandarawela - 071 0 796 060
8126 - L. Eubert Silva - Nayana Book Shop, No. 343, Main Street, Bandarawela.

Kandy - 055 22 571 30
8131 - Nimal Attanayake - Per Siripura Contractor, Ex-Kandy, Kandy.

Haputale - 057 22 443 92
8139 - A. K. P. Hemawathi - Multi Centre, No. 2, Main Street, Haputale.

Lunugala - 055 22 639 84
8140 - E. M. Lal - Maduka Gold House, No. 111, Main Street, Lunugala.

Bandarawela - 057 22 301 60
8172 - K. P. Kodagoda - 'Sri Subasetha', 2nd Floor, Sinhagiri Building, Bandarawela.

Badulla - 055 22 256 16
8196 - Advertising Office (Lake House), No. 14, Opposite Muthiyangana Clock Tower, Badulla.

Passara - 055 22 888 89
8202 - M. K. M. Ismath - Rishana Book Shop, No. 354, Main Street, Passara.

Badulla - 072 7 998 533
8207 - K. G. Prasanna Kumara - No. 9, Nadukara Kanda Road, Badulla.

Diyatalawa - 057 22 290 24
8228 - A. S. De Alwis - Alwis Book Shop, No. 16, Main Street, Diyatalawa.

**Colombo City Area**

Borella - 0112268251
1040 - Gunasiri Book Shop - No. 685, Maradana Road, Punchi Borella.

Dematagoda - 075 7 222 878
1044 - No. 166/17, Kolonnawa Road, Dematagoda.

Colombo 02 - 078 5 200 648
1046 - R. P. C. Jayawardana - Chiththampalam A Gardiner Mawatha, Colombo 02.

ADZ HOTLINE - 011 2 429 369
CALL - 011 2 429 342/ 343


# பெறுகைக்கான அழைப்பு
## இலங்கை புகையிரத சேவை

**கொழும்பு கோட்டை புகையிரத நிலையத்தின் பயணிகள் உடை மாற்றும் அலகினை குத்தகைக்கு வழங்குவதற்கான பெறுகைக் குழு விலைமனுக் கோரல்**

இலங்கை புகையிரத திணைக்களத்தின் சார்பாக திணைக்கள பெறுகைக் குழுவின் தலைவரால் கொழும்பு கோட்டை புகையிரத நிலையத்தின் பயணிகள் உடை மாற்றும் அலகினை நடாத்திச் செல்வதற்கு ஐந்து வருடகாலத்திற்கு குத்தகைக்கு வழங்குவது தொடர்பில் விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரை பொறிக்கப்பட்ட பெறுகை விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

**01. தகைமைகள்**
திணைக்கள நிபந்தனைகளுக்கு கீழ் அதிகூடிய விலையினை முன்வைக்கின்ற விண்ணப்பதாரிக்கு ஏற்புடைய பயணிகள் உடை மாற்றும் அலகினை குத்தகைக்கு வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

**02. கேள்வி விண்ணப்ப பத்திரங்களை பெற்றுக் கொள்ளல்.**
பெறுகை ஆவணங்களை 2024 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 24 ஆம் திகதி பி.ப 2.00 மணிவரை புகையிரத விற்பனை மற்றும் சந்தைபடுத்தல் அலுவலகத்தில் பெற்றுகொள்ளலாம். அது தொடர்பில் கொழும்பு-10, இலங்கை புகையிரத சேவையின் பிரதான நிதி உத்தியோகத்தருக்கு மீளளிக்கப்படாத கேள்வி படிவக்கட்டணமாக ரூ. 2,500/ தொகையைச் செலுத்தி பெற்றுக் கொள்ளும் பற்றுச்சீட்டை புகையிரத தலைமையகத்தின் விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் பிரதி அத்தியட்சகரிடம் சமர்ப்பித்தல் வேண்டும். கேள்விப் படிவக் கட்டணத்திற்கு மேலதிகமாக மீளளிக்கப்படும் கேள்வி பிணையாக ரூ.340,000.00 தொகையினை திணைக்களத்திற்கு செலுத்த வேண்டும். அக்கேள்வி பிணைத் தொகையினை புகையிரத தலைமையகத்தின் பிரதான நிதி உத்தியோகத்தருக்கு இலங்கையில் அங்கீகரிக்கப்பட்ட பணத்தில் செலுத்திப் பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டை (முதல் பிரதியை) கேள்வி மனுவோடு சமர்ப்பிக்க வேண்டும்.

**03. கேள்வி விண்ணப்பங்கள் சமர்ப்பித்தல்.**
மேற்படி 02 பந்தியில் குறிப்பிட்டுள்ளவாறு பெற்றுக்கொள்ளப்பட்ட விண்ணப்பங்களின் மூலப்பிரதி மற்றும் நகல் பிரதிகளை முறையாக பூர்த்தி செய்து இரு உறைகளில் இட்டு முத்திரையிட வேண்டும். அவ்வுறைகளில் மூலப் பிரதி மற்றும் நகல் பிரதி என தெளிவாக குறிப்பிடுதல் வேண்டும். அவ்வுறைகள் இரண்டையும் ஒரு உறையில் இட்டு அதன் இடது பக்க மேல் மூலையில் "கொழும்பு கோட்டை புகையிரத நிலையத்தின் பயணிகள் உடை மாற்றும் அலகிற்கான கேள்விப்பத்திரம்" என்று குறிப்பிட்டு அவ்வுறையை முத்திரையிட்டு 2024 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 25 ஆம் திகதி பி.ப 2.00 மணிக்கு முன்னதாக கிடைக்கக்கூடியதாக தலைவர் திணைக்கள பெறுகைக்குழு விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் அலுவலகம், புகையிரத தலைமையகம், ஓல்கோட் மாவத்தை, கொழும்பு 10 என்ற முகவரிக்கு பதிவுத் தபாலிலோ அல்லது புகையிரத தலைமையகத்தின் பிரதி அத்தியட்சகர் (விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல்) இன் உத்தியோகபூர்வ அறையில் கேள்விப்பத்திரங்கள் உள்ளிடுவதற்காக தயாரிக்கப்பட்டுள்ள விசேட கேள்விப் பெட்டியில் உள்ளிடும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். அதற்கு பின் கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். தபாலினால் தாமதமானவை அல்லது தொலைந்த விண்ணப்பங்கள் தொடர்பில் கருத்திற்கொள்ளப்பட மாட்டாது.

**04. கேள்வி விண்ணப்பங்களை திறத்தல்.**
2024 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 25 ஆம் திகதி பி.ப 2.00 க்கு மேற்கூறிய மூன்றாம் பந்தியில் தரப்பட்டுள்ள விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் அலுவலகத்தில் விண்ணப்பங்கள் திறக்கப்படுவதுடன் அவ்வேளையில் விண்ணப்பதாரியோ அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட ஒரு பிரதிநிதியோ சமுகமளிக்க அனுமதிக்கப்படும்.

**05.** கேள்விகளை கோருவதற்கு முன்னர் மேற்படி கட்டிடத்தை பரீட்சிப்பதற்காக விண்ணப்பதாரிகளுக்கு சந்தர்ப்பம் வழங்கப்படுவதுடன் அதற்காக கொழும்பு கோட்டை புகையிரத நிலைய அத்தியட்சகரின் ஊடாக அனுமதியைப் பெற்றுக் கொள்ளல் வேண்டும்.

**06.** திணைக்களப் பெறுகைக் குழுவின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.

**07.** கேள்விதாரர்களுக்கு தேவையான மேலதிக விபரங்களை இலங்கை புகையிரத சேவையின் விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் அலுவலகத்திலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

**தொ.பே இல - 011 2421281 (நீடிப்பு - 8235) / 0114600944**

**தலைவர்,
திணைக்கள பெறுகைக் குழு,
புகையிரத தலைமையகம்,
ஓல்கோட் மாவத்தை,
கொழும்பு - 10**

# இலங்கை பரீட்சைத் திணைக்களம்

**பாடசாலைகளுக்கு மாணவர்களைத் தெரிவு செய்வதற்கும் புலமைப்பரிசில் வழங்குவதற்குமாக தரம் 5 மாணவர்களுக்காக நடாத்தப்படும் பரீட்சை - 2024**

| நேர அட்டவணை | | |
|---|---|---|
| 2024 செப்டெம்பர் 15 ஞாயிறு | வினாப்பத்திரம் II | 09.30 - 10.45 மணி |
| | வினாப்பத்திரம் I | 11.15 - 12.15 மணி |

மேற்படி பரீட்சை 2024 செப்ரெம்பர் 15 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நாடளாவிய ரீதியில் 2849 பரீட்சை நிலையங்களில் நடைபெறும் என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.

இப்பரீட்சைக்காக விண்ணப்பித்த சகல பரீட்சார்த்திகளினதும் வரவு இடாப்பு உரிய பாடசாலை அதிபர்களுக்குத் தபாலில் தற்போது அனுப்பப்பட்டுள்ளன. இது வரையில் வரவு இடாப்பு கிடைக்கப்பெறாத பாடசாலை அதிபர்கள் www.doenets.lk அல்லது http://onlineexams.gov.lk/eic இணைப்பினூடாக வரவு இடாப்பை தரவிறக்கம் செய்து கொள்ள முடியும். திருத்தங்கள் ஏதுமிருப்பின் 2024 செப்டெம்பர் 02 ஆம் திகதி தொடக்கம் 2024 செப்டெம்பர் 09 ஆம் திகதி நிகழ்நிலை முறைமையில் மேற்கொள்வதற்கான வசதி செய்யப்பட்டுள்ளது.

**விசாரணைகள்**

தொலைபேசி இலக்கங்கள் : 011-2784208, 2784537, 2786616, 2785413
துரித அழைப்பு இலக்கம் : 1911
தொலைநகல் இலக்கம் : 011-2784422
தபால் முகவரி : பரீட்சை ஆணையாளர் நாயகம், (பாடசாலைப் பரீட்சைகள் ஒழுங்கமைப்பு, பெறுபேற்றுக் கிளை) இலங்கை பரீட்சைத் திணைக்களம், பெலவத்தை, பத்தரமுல்ல.

**எச்.ஜே.எம்.சீ. அமித் ஜயசுந்தர
"பரீட்சைகள் ஆணையாளர் நாயகம்**

**6/30/News Paper
இலங்கை பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை பத்தரமுல்ல.
2024.09.02**

# பகிரங்க சேவை ஆணைக்குழுவிற்கான உறுப்பினர் ஒருவரை நியமித்தல்

உறுப்பினர் ஒருவரின் பதவி வெற்றிடத்தை நிரப்புவதற்கு ஆவர்வம் காட்டும் தனிநபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன 54 ஆம் இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் உறுப்புரையில் குறித்துரைக்கப்பட்டுள்ளவாறாக, பாராளுமன்ற உறுப்பினராக, மகாண சபை உறுப்பினராக, உள்ளூரதிகாரசபை உறுப்பினராக இருக்கும் எவரும் பகிரங்க சேவை ஆணைக்குழுவின் உறுப்பினராக நியமிக்கப்படுவதற்குத் தகைமையுடையோராக இருக்கமாட்டார்கள். மேலும் பகிரங்க சேவை ஆணைக்குழுவின் ஓர் உறுப்பினராக நியமிக்கப்படுவதற்கு முன்பதாக, அரச சேவையில் அரச உத்தியோகத்தராக அல்லது நீதித்துறை உத்தியோகத்தராக இருந்த ஆள் ஒவ்வொருவரும் அவரின் நியமனத்திற்கு முன்பதாக, அவ்வாறான நியமனம் பயனுறத் தொடங்கியதும், அத்தகைய பதவிகளில் இருந்து நீங்க வேண்டும் என்பதுடன் பகிரங்க அலுவலரொருவராக அல்லது நீதித்துறை அலுவலரொருவராக மேற்கொண்டு நியமிக்கப்படுவதற்கு தகைமையுடையவராதலுமாகாது.

www.parliament.lk எனும் பாராளுமன்ற இணையதளத்தில் "பகிரங்க சேவை ஆணைக்குழுவிற்கான (பசேஆ) உறுப்பினர்கள் நியமனம்" என்ற துரித இணைப்பில் வழங்கப்பட்டுள்ள தகவல்களின் பிரகாரம் தயாரிக்கப்பட்டு, முறையாகப் பூர்த்தியாக்கப்பட்ட விண்ணப்பங்கள், 2024 செப்டெம்பர் 23 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னர்,

**அரசியலமைப்புப் பேரவையின் செயலாளர் நாயகம்
அரசியலமைப்புப் பேரவை - அலுவலகம்
இலங்கைப் பாராளுமன்றம்
ஸ்ரீ ஜயவர்தனபுர, கோட்டே.**

எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பப்பட வேண்டும் அல்லது constitutionalcouncil@parliament.lk எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் / மின்னஞ்சலின் விடயமாக "பகிரங்க சேவை ஆணைக்குழுவிற்கான உறுப்பினர்கள் நியமனம்" எனக் குறிப்பிடவும்.

அரசியலமைப்புப் பேரவையின் கட்டளையின் பேரில் வெளியிடப்பட்டது.

**அரசியலமைப்புப் பேரவையின் செயலாளர் நாயகம்
அரசியலமைப்புப் பேரவை - அலுவலகம்
இலங்கைப் பாராளுமன்றம்
ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே.
2024.08.30**

# டெங்கு அபாய வலயங்களாக ஐந்து மாவட்டங்கள் அறிவிப்பு




நாட்டில் நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக 05 மாவட்டங்களின் 29 சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகள் டெங்கு அபாய மிக்க பகுதிகளாக அடையாளம் காணப்பட்டுள்ளதென தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவு தெரிவித்துள்ளது.

கொழும்பு, கம்பஹா, களுத்துறை, இரத்தினபுரி மற்றும் கண்டி ஆகிய மாவட்டங்களிலேயே டெங்கு அபாயமிக்க மாவட்டங்களாக அடையாளம் காணப்பட்டுள்ளது.

வருடத்தின் இதுவரையான காலப்பகுதிக்குள் 36,552 டெங்கு நோயாளர் அடையாளம் காணப்பட்டுள்ளதுடன் 17 டெங்கு மரணங்கள் பதிவாகியுள்ளன.

அதிகளவான டெங்கு நோயாளர்கள் மேல் மாகாணத்திலிருந்து அடையாளம் காணப்பட்டுள்ளதுடன் அவர்களின் மொத்த எண்ணிக்கை 15,120 என பதிவாகியுள்ளது.

இதனால், பொதுமக்கள் அனைவரும் தங்களது சுற்றுச்சூழலைச் சுத்தமாகவும் பாதுகாப்பாகவும் வைத்திருக்குமாறு தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவு மேலும் தெரிவித்துள்ளது.

# கற்பிட்டி அந்நூரில் வருடாந்த சிறுவர் கண்காட்சி



*(புத்தளம் தினகரன் நிருபர்)*

கற்பிட்டி அந்நூர் பாலர் பாடசாலையின் வருடாந்த சிறுவர் கண்காட்சி புதன்கிழமை (28) பாலர் பாடசாலையின் அதிபர் அரூஸியா தலைமையில் இடம்பெற்றது.

இந் நிகழ்வின் பிரதம அதிதியாக கற்பிட்டி பிரதேச செயலகத்தின் பாலர் பாடசாலைகளுக்கான பொறுப்பதிகாரி எம்.நிப்ராஸ் கலந்து கொண்டார். கௌரவ அதிதிகளாக அந்நூர் இளைஞர் கழகத்தின் தலைவர் எம்.நியாஸ்தீன், அந்நூர் இளைஞர் கழகத்தின் முன்னாள் தலைவர் எம்.எப்.எம்.ரில்பாஸ் என பலரும் கலந்து சிறப்பித்தனர்

கற்பிட்டி அந்நூர் இளைஞர் கழகத்தினால் கடந்த 36 வருடங்களாக சிறப்பாக நடாத்தப்பட்டு வரும் அந்நூர் பாலர் பாடசாலை சிறார்களின் ஆளுமை விருத்தியை அதிகரிக்கும் வகையில் இணைப்பாடவிதான செயற்பாடுகளில் ஒரு அங்கமாக இடம்பெறும் இச் சிறுவர் கண்காட்சி 28 ஆவது வருடமாகவும் சிறப்பாக இடம்பெற்றது.

இந்நிகழ்வில் கலந்து கொண்ட அந்நூர் இளைஞர் கழகத்தின் முன்னாள் தலைவரும், சமூக சேவையாளருமான எம்.எப்.எம். ரில்பாஸ், அந்நூர் பாலர் பாடசாலையின் அபிவிருத்தியை மையப்படுத்திய வேலைத்திட்டங்கள் சிலவற்றை நிறைவேற்றி தருவதாக உறுதியளித்ததுடன் அந்நூர் இளைஞர் கழகம் மற்றும் பாலர் பாடசாலை என்பவற்றை மேலும் அபிவிருத்தியை நோக்கி சிறந்த சேவைகளை கற்பிட்டியில் வழங்குவதற்கான முன்னெடுப்புக்களை மேற்கொள்ள உள்ளதாகவும் தெரிவித்தார்.

## சிறுவர் காப்பகத்திலிருந்து
# காணாமல்போன மூன்றுசிறுமிகளும் கண்டுபிடிப்பு

*(அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்)*

மாத்தளை பகுதியில் அமைந்துள்ள சிறுவர் காப்பகம் ஒன்றிலிருந்து மூன்று சிறுமிகள் காணாமல் போயுள்ளதாக சிறுவர் காப்பகத்தின் உரிமையாளரால் கெக்கிராவ பொலிஸ் நிலையத்தில் செய்திருந்த முறைப்பாட்டிற்கமைய மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் இருந்து சிறுமிகளை கண்டு பிடித்துள்ளனர்.

09ஆம் தரத்தில் கல்வி பயிலும் 14 வயதுடைய இரு சிறுமிகளும் 11ஆம் தரத்தில் கல்வி பயிலும் 17 வயதுடைய சிறுமியொருவரையும் கண்டுபிடித்துள்ளனர்.

குறித்த சிறுமிகள் மூவரும் தற்போது கெக்கிராவ பொலிஸாரின் பாதுகாப்பில் இருப்பதுடன் விசாரணைகளின் பின்னர் அவர்கள் சிறுவர் காப்பகத்தில் ஒப்படைக்கப்படுவார்கள் என பொலிசார் தெரிவித்தனர்.


# கேள்விக்கோரல்களுக்கான அழைத்தல்
## வளிச்சீராக்கல் முறையை வழங்கல், நிறுவுதல் மற்றும் செயற்படவைத்தல்

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்காக வளிச்சீராக்கல் முறைமையை வழங்கல், நிறுவுதல் மற்றும் செயற்படவைத்தல் ஆகியவற்றிற்காக தகுதியும் தகைமையுமுள்ள கேள்விதாரர்களிடமிருந்து முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட கேள்விக்கோரல்களை சுகாதாரத் திணைக்களம் இப்போது அழைக்கின்றது.

1. விலைமனுக்கோரல் தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் மூலம் நடத்தப்படும்.
2. ஒப்பந்தத்தை கையளிப்பதற்காக எதிர்பார்க்கும் கேள்விதாரர் பின்வரும் தேவைப்படுத்தல்களை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.
   அ. வைத்தியசாலையினால் அல்லது ஏனைய நிறுவனங்களினால் கேள்விதாரர் தகுதிநீக்கம் செய்யப்பட்டவர்களின் பட்டியலில் இருத்தல் ஆகாது.
   ஆ. கேள்விதாரர் 2007 ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் கூட்டிணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
3. ஆர்வமும் தகுதியுமுள்ள கேள்விதாரர் மேலதிக தகவலை யாழ்ப்பாணம், போதனா வைத்தியசாலை கணக்காளரிடமிருந்து பெற்று (மின்னஞ்சல்: acctiaffnath@gmail.com 0212222261 Ext. 428 or 219) 2024 செப்டம்பர் 2 (திங்கட்கிழமை) இலிருந்து 2024 செப்டெம்பர் 17 ஆம் திகதியன்று வரையும் (செவ்வாய்க்கிழமை) எந்தவொரு வேலை நாளிலும் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 4 மணி வரையும் விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சிக்கலாம். விலைமனுதாரர் கொள்வனவிற்கு முன்னராக விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுவதுடன் அவைகளை கொள்வனவு செய்த பின்னர் விலைமனுக்கோரல் ஆவணக் கட்டணமானது எந்தவொரு காரணத்தின் அடிப்படையிலும் மீளளிக்கப்படமாட்டாது.
4. 2024 செப்டம்பர் 2 ஆம் திகதியிலிருந்து (திங்கட்கிழமை) 2024 செப்டெம்பர் 17 ஆம் திகதியன்று வரையும்(செவ்வாய்க்கிழமை) பெசேவ அடங்கலாக மீளளிக்கப்படாத கட்டணமாக இரண்டாயிரம் இலங்கை ரூபாவை (2000 இ.ரூ.) செலுத்திய பின்னர் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை பணிப்பாளருக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம். பணக்கொடுப்பனவு முறையானது ரொக்கப் பணத்திலேயே இருத்தல் வேண்டும்.
5. விலைமனுக்கள் 2024 செப்டெம்பர் 18 ஆம் திகதியன்று (புதன்கிழமை)மு.ப. 10 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கீழேயுள்ள முகவரியில் ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் 2024 செப்டெம்பர் 18 ஆம் திகதியன்று (புதன்கிழமை) கீழேயுள்ள முகவரியில் நேரடியாக சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் அல்லது ஒன்-லைனில் சமுகமளித்திருப்பவர்களின் முன்னிலையில் திறக்கப்படும்.
6. யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் எந்தவொரு அல்லது அனைத்து விலைமனுக்களையும் நிராகரிப்பதற்கும் விலைமனுவின் பகுதியொன்றை ஏற்றுக் கொள்வதற்கான உரிமையையும் ஒப்பந்தமொன்றை கையளிப்பதற்கு முன்னராக எந்தவொரு காரணத்தையும் முன்வைக்காமல் அதனை நிராகரிப்பதற்கான உரிமையையும் கொண்டுள்ளார். சேவை நாடுபவர் ஆகக் குறைந்த அல்லது எந்தவொரு விலைமனுவையும் ஏற்றுக் கொள்வதற்கான உரிமையையும் கொண்டுள்ளார்.
7. பெறுகைக் குழுவானது விலைமனுக்களை தயாரித்தல் அல்லது ஒப்படைத்தல் தொடர்பாக விலைமனுதாரர்களுக்கேற்படும் எந்தவொரு ஆகுசெலவுகள் அல்லது செலவினங்களுக்கும் பொறுப்பேற்க மாட்டார்.
8. இலங்கையில் செயற்படுவதும் தொழில்வழங்குநருக்கு ஏற்றுக் கொள்ளத்தக்கதான வகையிலும் நிபந்தனையற்ற கோரும்போது பெற்றுக் கொள்ளும் உத்தரவாத செயற்பாணியிலமைந்ததும் புகழ் பெற்ற வங்கியொன்றிலிருந்து பெறப்பட்டதாகவுமுள்ள ''கேளவிப்பிணையொன்றுடன்'' அனைத்து விலைமனுக்களும் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டுமென்பதுடன் விலைமனுக்களை திறந்த பின்னர் 105 நாட்களுக்கு செல்லுபடியாகும் தன்மையிலுமிருத்தல் வேண்டும்.

**மேலே குறிப்பீடு செய்யப்பட்டுள்ள முகவரி / முகவரிகள் பின்வருமாறு:**

**தலைவர்,**
**பிராந்திய பெறுகைக் குழு,**
**போதனா வைத்தியசாலை,**
**யாழ்ப்பாணம்.**

# தேர்தல் ஆணைக்குழு
## சனாதிபதித் தேர்தல் - 2024 செப்தெம்பர் 21
## வாக்களிக்கும் ஒழுங்கு

2024 செப்தெம்பர் மாதம் 21 ஆம் திகதி நடாத்தப்படவுள்ள சனாதிபதித் தேர்தலின் போது மூன்றுக்கு மேற்பட்ட வேட்பாளர்கள் போட்டியிடுகின்றமையினால் ஒரு வேட்பாளருக்கு வாக்கையும், வேறு இரண்டு வேட்பாளர்களுக்கு இரண்டாவது விருப்புத் தெரிவையும் மற்றும் மூன்றாவது விருப்புத் தெரிவையும் வாக்குச்சீட்டில் அடையாளமிடுவதற்கான சாத்தியப்பாடு காணப்படுவதோடு, அவசியமெனில் வாக்கை மாத்திரம் அடையாளமிடுவதற்கும் சாத்தியம் காணப்படுகின்றது.

02. வாக்காளர் வாக்குச்சீட்டில் தனக்கு விருப்பமான வேட்பாளரின் பெயர் மற்றும் சின்னத்திற்கு எதிரில் அதற்கென குறித்தொதுக்கப்பட்டுள்ள பகுதியில் 1 என்ற இலக்கத்தைக் குறித்து வாக்கைப் பிரயோகித்தல் வேண்டும். அதன் பின்னர் 2 மற்றும் 3 என்ற இலக்கங்களைக் குறிப்பதன் மூலம் தனது இரண்டாவது மற்றும் மூன்றாவது விருப்புத் தெரிவைக் குறிப்பிட முடியும். வாக்குச்சீட்டொன்றில் வாக்காளர் தனது இரண்டாவது அல்லது மூன்றாவது விருப்புத் தெரிவுகளை அடையாளமிடவில்லையெனினும் அதில் முறையானவாறு ஒரு வேட்பாளருக்கு அடையாளமிடப்பட்ட வாக்கொன்று காணப்படின் அது செல்லுபடியான வாக்கொன்றாக ஏற்றுக்கொள்ளப்படும். அதற்கமைய சட்டரீதியாக செல்லுபடியான வாக்கு மற்றும் விருப்புத் தெரிவுகளை அடையாளமிடக்கூடிய முறைகள் கீழே படங்களில் காட்டப்பட்டுள்ளன.

| | | |
|---|---|---|
| ABC | □ | |
| XYZ | ⬠ | 1 |
| IOU | △ | |
| PQR | ◇ | |
| LMN | ○ | |

| | | |
|---|---|---|
| ABC | □ | |
| XYZ | ⬠ | 1 |
| IOU | △ | |
| PQR | ◇ | 2 |
| LMN | ○ | |

| | | |
|---|---|---|
| ABC | □ | |
| XYZ | ⬠ | 1 |
| IOU | △ | |
| PQR | ◇ | 2 |
| LMN | ○ | 3 |

03. மேற்படி முறைகள் தவிர வாக்காளரின் வாக்களிக்கும் உளக்கருத்து வாக்குச்சீட்டின் மீது இடப்பட்ட ஏதேனும் அடையாளமொன்றினால் தெளிவாகத் தெரிகின்றவிடத்து (உதாரணமாக X மாத்திரம் அடையாளமிடப்பட்டுள்ள போது) அது வேட்பாளருக்கு அளிக்கப்பட்ட வாக்கொன்றாகக் கருதப்படும்.

04. வாக்காளரை அடையாளம் கண்டுகொள்ளக்கூடியவாறு ஏதேனுமொன்று எழுதப்பட்ட அல்லது அடையாளமிடப்பட்ட வாக்குச்சீட்டொன்று போன்றே கீழே குறிப்பிடப்பட்டுள்ள விதத்தில் அடையாளமிடப்பட்டுள்ள வாக்குச்சீட்டொன்றும் வாக்கெண்ணலின் போது நிராகரிக்கப்படும். அதாவது;

- எந்தவொரு வேட்பாளருக்கும் வாக்கு அடையாளமிடப்படாதுள்ள போது;
- ஒன்றுக்கு மேற்பட்ட வேட்பாளர்களுக்காக வாக்கு அடையாளமிடப்பட்டுள்ள போது;
- ஒரு வேட்பாளருக்கு 1 மற்றும் மற்றொருவருக்கு X அடையாளமிடப்பட்டுள்ள போது;
- இரண்டாவது விருப்புத் தெரிவு அல்லது மூன்றாவது விருப்புத் தெரிவு மாத்திரம் அடையாளமிடப்பட்டுள்ள போது;
- வாக்காளரை அடையாளம் கண்டுகொள்ளக்கூடியதான ஏதேனுமொன்று எழுதப்பட்டிருப்பின் அல்லது வரையப்பட்டுள்ள போது;
- 1 தவிர்ந்த வேறு அடையாளமொன்றுடன் 2,3 விருப்புத் தெரிவுகள் அடையாளமிடப்பட்டுள்ள போது;
- 1,2,3 ஐ விட வாக்கு மற்றும் விருப்புத் தெரிவுகள் அடையாளமிடப்பட்டுள்ள போது;

**ஆர்.எம்.ஏ.எல்.ரத்நாயக்க**
**தவிசாளர், தேர்தல் ஆணைக்குழு**
**(தேர்தல் ஆணைக்குழுவுக்காக)**

**தேர்தல் ஆணைக்குழு அலுவலகம்,**
**சரண மாவத்தை, இராஜகிரிய.**

# பெறுகைக்கான அழைப்பு
## இலங்கை புகையிரத சேவை

இலங்கை புகையிரத திணைக்களத்துக்குரிய புகையிரத நிலையங்களை அண்டிய வாகன தரிப்பிடங்களை குத்தகைக்கு வழங்குவதற்கான பெறுகைக் குழு விலைமனுக் கோரல்

இலங்கை புகையிரத திணைக்களம் சார்பாக திணைக்கள பெறுகைக் குழுவின் தலைவரால் கீழ் காணும் வாகன தரிப்பிடங்களை இரு வருட காலத்திற்கு குத்தகைக்கு வழங்குவது தொடர்பில் விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரை பொறிக்கப்பட்ட பெறுகை விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| தொடரிலக்கம் | வாகன தரிப்பிடம் | அளவு (பர்ச்சஸ்) |
|---|---|---|
| 01 | கொழும்பு கோட்டை புகையிரத நிலைய வளாக வாகன தரிப்பிடம் | முன் மற்றும் பின்புறம் |
| 02 | பெஸ்டியன் மாவத்தை | 1 ரூட் 5.95 பர்ச்சஸ் |
| 03 | டீ.பீ.ஜயா மாவத்தை | 102.45 |
| 04 | மருதானை புகையிரத நிலையத்திற்கு முன்னால் | 1ரூட் 0.40 பர்ச்சஸ் |
| 05 | கொழும்பு கெதர | 1ரூட் 16.90 பர்ச்சஸ் |
| 06 | ஹிக்கடுவை | 20.42 |
| 07 | குருணாகல் | 31.41 |
| 08 | பெலியத்த | 13.22 |
| 09 | பூஸ்ஸ | 47.75 |
| 10 | அம்பலங்கொடை 11 | 24.3 |

மேற்படி வாகன தரிப்பிடங்கள் பற்றிய விபரங்கள் பெறுகை ஆவணங்களில் அட்டவணை 01 கீழ் தரப்பட்டுள்ளது.

**01. தகைமைகள்**

திணைக்கள நிபந்தனைகளுக்கு கீழ் அதிகூடிய விலையினை முன்வைக்கின்ற விண்ணப்பதாரிக்கு ஏற்புடைய வாகன தரிப்பிடங்களை தனித்தனியே குத்தகைக்கு வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

**02. கேள்வி விண்ணப்பங்கள் பெற்றுக்கொள்ளல்.**

பெறுகை ஆவணங்களை 2024 செப்டெம்பர் மாதம் 24 ஆம் திகதி பி.ப 2.00 மணி வரை புகையிரத விற்பனை மற்றும் சந்தைபடுத்தல் அலுவலகத்தில் அல்லது வாகன தரிப்பிடங்கள் அமைந்துள்ள புகையிரத நிலையத்தில் பெற்று கொள்ளலாம். அதற்காக கொழும்பு-10, இலங்கை புகையிரத சேவையின் பிரதான நிதி உத்தியோகத்தரிடம் அல்லது குறித்த புகையிரத நிலையத்தின் நிலைய அதிபரிடம் மீளளிக்கப்படாத கேள்விபடிவக் கட்டணமாக ரூ.2,500/- தொகையைச் செலுத்தி பெற்றுக்கொள்ளும் பற்றுச்சீட்டை புகையிரத தலைமையகத்தின் விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் பிரதி அத்தியட்சகரிடமோ அல்லது குறித்த புகையிரத நிலையத்திற்கோ சமர்ப்பித்தல் வேண்டும். கேள்வி மனுக்கோரலின் உப அட்டவணை 01 இல் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து வாகன தரிப்பிடங்களுக்காகவும் தனி தனியாக கேள்விமனுக்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டியதுடன் கேள்வி படிவக் கட்டணத்திற்கு மேலதிகமாக அவ் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு மீளளிக்கப்படும் கேள்வி பிணையொன்றும் செலுத்தப்பட வேண்டும். விலைமனுகோரல் படிவத்தின் மூலம் ஒரு வாகன தரிப்பிடத்திற்கு மாத்திரமே விலை மனுகோரலினை சமர்ப்பிக்கலாம்.

**03. கேள்வி விண்ணப்பங்கள் சமர்ப்பித்தல்**

மேற்படி 02ம் பந்தியில் குறிப்பிட்டுள்ளவாறு ஒவ்வொரு வாகன தரிப்பிடம் சார்பாகவும் பெற்றுக்கொள்ளப்பட்ட விண்ணப்பங்களின் மூலப்பிரதி மற்றும் நகல் பிரதிகளை முறையாக பூர்த்திசெய்து இரு உறைகளில் இட்டு முத்திரையிட வேண்டும். அவ்வுறைகளில் மூலப்பிரதி மற்றும் நகல்பிரதி என தெளிவாக குறிப்பிடுதல் வேண்டும். அவ்வுறைகள் இரண்டையும் ஒரு உறை அதன் இடதுபக்க மேல்மூலையில், "புகையிரத நிலையங்களை அண்டிய வாகன தரிப்பிடங்களை குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்விப்பத்திரம்" என்று குறிப்பிட்டு அவ்வுறையை முத்திரையிட்டு 2024 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 25 ஆம் திகதி பி.ப 2.00 மணிக்கு முன்னதாக கிடைக்கக் கூடியதாக தலைவர், திணைக்கள பெறுகைக்குழு, விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் அலுவலகம், புகையிரத தலைமையகம், ஓல்கோட் மாவத்தை, கொழும்பு 10 என்ற முகவரிக்கு பதிவுத் தபாலிலோ அல்லது புகையிரத தலைமையகத்தின் பிரதி அத்தியட்சகர் (விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல்) இன் உத்தியோகபூர்வ அறையில் கேள்விப்பத்திரங்கள் உள்ளிடுவதற்காக தயாரிக்கப்பட்டுள்ள விசேட கேள்விப் பெட்டியிலோ உள்ளிடலாம். அந்நேரத்தின் பின் கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். தபாலினால் தாமதமானவை அல்லது தொலைந்த விண்ணப்பங்கள் தொடர்பில் கருத்திற்கொள்ளப்பட மாட்டாது.

**04. கேள்வி ஏற்றுக்கொள்ளல் மற்றும் திறத்தல்.**

2024 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 25 ஆம் திகதி பி.ப 2.00 க்கு மேற்படி மூன்றாம் பந்தியில் தரப்பட்டுள்ள விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் அலுவலகத்தில் விண்ணப்பங்கள் திறக்கப்படுவதுடன் அவ்வேளையில் விண்ணப்பதாரியோ அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட ஒரு பிரதிநிதியோ சமுகமளிக்க அனுமதிக்கப்படும்.

**05.** இலங்கைப் புகையிரத சேவையின் சகல ஊழியர்களுக்கும் மற்றும் அவர்களது குடும்பத்தின் நெருங்கிய அங்கத்தவர்களுக்கு விண்ணப்பங்களை சமர்ப்பிப்பதற்கு உரிமை இல்லை.

**06.** கேள்விகளை கோருவதற்கு முன்னர் மேற்படி வாகன தரிப்பிடங்களை பரீட்சிப்பதற்காக விண்ணப்பதாரிகளுக்கு சந்தர்ப்பங்கள் அளிக்கப்படும். அத்துடன் அதற்காக குறித்த புகையிரத நிலையத்தில் அனுமதியைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

**07.** திணைக்கள பெறுகைக் குழுவின் தீர்மானமே இறுதி தீர்மானமாகும்.

**08.** கேள்விதாரர்களுக்கு தேவையான மேலதிக விபரங்களை இலங்கை புகையிரத சேவையின் வர்த்தகம் மற்றும் சந்தைப்படுத்தல் அலுவலகத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

**தொ.பே.இல - 011 2421281 (நீடிப்பு - 8235, பெக்ஸ் - 011 2431909) / 011-4600944**

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக்குழு,**
**புகையிரத தலைமையகம்,**
**ஓல்கோட் மாவத்தை, கொழும்பு 10**

# பெறுகைக்கான அழைப்பு
## இலங்கை புகையிரத சேவை

இலங்கை புகையிரத திணைக்களத்துக்குரிய குருவிட்ட நகரத்தின் வர்த்தக கட்டிடம் மற்றும் வண்டி தரிப்பிடத்தை உடன்படிக்கைக்கு அமைய 05 வருட காலத்திற்கு குத்தகைக்கு வழங்குவதற்கான பெறுகைக் குழு விலைமனுக்கோரல்

இலங்கை புகையிரத திணைக்களம் சார்பாக திணைக்கள பெறுகைக் குழுவின் தலைவரால் கீழ் காணும் குருவிட்ட நகரத்தின் வர்த்தக கட்டிடம் மற்றும் வண்டி தரிப்பிடத்தை 05 வருட காலத்திற்கு குத்தகைக்கு வழங்குவதற்காக கேள்விதாரர்களிடமிருந்து முத்திரை பொறிக்கப்பட்ட பெறுகை விலைமனுக்கள் கோரப்படுகின்றன .

| விபரம் | அளவு (பர்ச்சஸ்) |
|---|---|
| கட்டிட இலக்கம் I | 5 |
| கட்டிட இலக்கம் II வண்டி | 10 |
| வண்டி தரிப்பிடம்(ப.இ 1,2,3,4,9) | 55.3 |

மேற்குறிப்பிடப்பட்ட கட்டிடங்கள் மற்றும் வாகனதரிப்பிடம் பற்றிய விபரங்கள் பெறுகை ஆவணங்களில் அட்டவணை 01 கீழ் தரப்பட்டுள்ளது .

**01. தகைமைகள்**

திணைக்கள நிபந்தனைகளுக்கு கீழ் அதிகூடிய விலையினை முன்வைக்கின்ற விண்ணப்பதாரிக்கு ஏற்புடைய வாகன தரிப்பிடங்களை தனித்தனியே குத்தகைக்கு வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

**02. கேள்வி விண்ணப்பங்கள் பெற்றுக்கொள்ளல்.**

பெறுகை ஆவணங்களை 2024 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 25 ஆம் திகதி பி.ப 2.00 மணி வரை புகையிரத விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் அலுவலகத்தில் பெற்று கொள்ளலாம். அதற்காக கொழும்பு-10, இலங்கை புகையிரத சேவையின் பிரதான நிதி உத்தியோகத்தரிற்கு மீளளிக்கப்படாத கேள்வி படிவக் கட்டணமாக ரூ. 2,500/- தொகையைச் செலுத்தி பெற்றுக்கொள்ளும் பற்றுச்சீட்டை புகையிரத தலைமையகத்தின் விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் பிரதி அத்தியட்சகரிடம் சமர்ப்பித்தல் வேண்டும். கேள்வி மனுக்கோரலின் உப அட்டவணை 01 இல் குறிப்பிடப்பட்டுள்ள கட்டிடங்கள் மற்றும் வாகன தரிப்பிடத்திற்காக தனி தனியாக கேள்வி மனுக்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டியதுடன் கேள்வி படிவக் கட்டணத்திற்கு மேலதிகமாக அவ்அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு மீளளிக்கப்படும் கேள்வி பிணையொன்றும் செலுத்தப்படவேண்டும். ஒரு விலைமனுக்கோரல் படிவத்தின் மூலம் ஒரு உருப்படிக்கு மாத்திரமே விலை மனுக்கோரலினை சமர்ப்பிக்கலாம்.

**03. கேள்வி விண்ணப்பங்கள் சமர்ப்பித்தல்**

மேற்படி 02ம் பந்தியில் குறிப்பிட்டுள்ளவாறு பெற்றுக்கொள்ளப்பட்ட விண்ணப்பங்களின் மூலப்பிரதி மற்றும் நகல் பிரதிகளை முறையாக பூர்த்தி செய்து இரு உறைகளில் இட்டு முத்திரையிட வேண்டும். அவ்வுறைகளில் மூலப்பிரதி மற்றும் நகல்பிரதி என தெளிவாக குறிப்பிடுதல் வேண்டும். அவ்வுறைகள் இரண்டையும் ஒரு உறையில் இட்டு அதன் இடது பக்க மேல்மூலையில் உணவகத்தின் கேள்வி இலக்கம் மற்றும் உணவகத்தின் பெயரை குறிப்பிட்டு, " குருவிட்ட நகரத்தின் வர்த்தக கட்டிடங்கள் மற்றும் வண்டி தரிப்பிடத்தை குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்விப்பத்திரம்" என்று குறிப்பிட்டு அவ்வுறையை முத்திரையிட்டு 2024 செப்டெம்பர் மாதம் 26 ஆம் திகதி பி.ப 2.00 முன்னதாக கிடைக்கக் கூடியதாக தலைவர், திணைக்கள பெறுகைக்குழு, விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் அலுவலகம், புகையிரத தலைமையகம் ஓல்கொட் மாவத்தை, கொழும்பு 10 என்ற முகவரிக்கு பதிவுத் தபாலிலோ அல்லது புகையிரத தலைமையகத்தின் பிரதி அத்தியட்சகர் (விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல்) இன் உத்தியோகபூர்வ அறையில் கேள்விப்பத்திரங்கள் உள்ளிடுவதற்காக தயாரிக்கப்பட்டுள்ள விசேட கேள்விப் பெட்டியிலோ உள்ளிடலாம். அந்நேரத்தின் பின் கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். தபாலினால் தாமதமானவை அல்லது தொலைந்த விண்ணப்பங்கள் தொடர்பில் கருத்திற் கொள்ளப்பட மாட்டாது.

**04. கேள்வி ஏற்றுக்கொள்ளல் மற்றும் திறத்தல்.**

2024 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 26 ஆம் திகதி பி.ப 2.00 க்கு மேற்கூறிய மூன்றாம் பந்தியில் தரப்பட்டுள்ள விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் அலுவலகத்தில் விண்ணப்பங்கள் திறக்கப்படுவதுடன் அவ்வேளையில் விண்ணப்பதாரியோ அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட ஒரு பிரதிநிதியோ சமுகமளிக்க அனுமதிக்கப்படும்.

**05.** திணைக்கள பெறுகைக் குழுவின் தீர்மானமே இறுதி தீர்மானமாகும்.

**06.** கேள்விதாரர்களுக்கு தேவையான மேலதிக விபரங்களை இலங்கை புகையிரத சேவையின் வர்த்தகம் மற்றும் சந்தைப்படுத்தல் அலுவலகத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

**தொ.பே இல - 011 2421281 (நீடிப்பு - 8235, பெக்ஸ் - 011 2431909) / 011-4600944**

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக்குழு**
**புகையிரத தலைமையகம்,**
**ஓல்கொட் மாவத்தை,**
**கொழும்பு 10**

# ஆதனங்களை குத்தகைக்கு விடுதல்

## மிஹிந்தலை பிரதேச சபை - 2024

மிஹிந்தலை பிரதேச சபைக்கு சொந்தமான கீழுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்ட ஆதனங்களை 2024 ஒக்டோபர் 31 ஆம் திகதி தொடக்கம் 2027 செப்டெம்பர் 30 ஆம் திகதி வரை 03 ஆண்டு காலத்திற்கு குத்தகைக்கு விடுவதற்கு முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் என்னால் கோரப்படுகின்றன. பெறுகை விண்ணப்பப் படிவத்தை மிஹிந்தலை பிரதேச சபை அலுவலகத்தில் இருந்து 2024.09.02 ஆம் திகதி தொடக்கம் 2024.09.24 ஆம் திகதி வரை மு.ப. 8.30 தொடக்கம் பி.ப. 3.00 வரை வழங்கப்படும். பெறுகை விண்ணப்பப் படிவக் கட்டணம் மற்றும் பிணை வைப்புக் கட்டணத்தை செலுத்தி பெறுகை விண்ணப்பப் படிவத்தை பெற முடியும். பெறுகை விண்ணப்பத்தை குறித்த திகதிக்கு சமர்ப்பிக்காத விண்ணப்பதாரர்களின் பிணை வைப்புத் தொகை மீளளிக்கப்படாது.

விண்ணப்பப் படிவங்களை பெறும்போது வதிவிடத்தை உறுதி செய்வதற்கு கிராம சேவகரினால் வழங்கப்படும் வதிவிட உறுதி மற்றும் தேசிய அடையாள அட்டையை சமர்ப்பித்தல் வேண்டும்.

பெறுகை விண்ணப்பத்தை ஏற்பது 2024.09.25 ஆம் திகதி பி.ப. 2.00க்கு முன்னர் "செயலாளர், பிரதேச சபை, மிஹிந்தலை" என்ற பெயரில் பதிவுத் தபாலில் அல்லது கைகளால் கொண்டுவந்து பிரதேச சபையில் வைக்கப்பட்டுள்ள விலைகேட்புப் பெட்டிக்கு இடுவதற்கு முடியும். பெறுகை விண்ணப்பத்தை திறப்பது 2024.09.25 ஆம் திகதி பி.ப. 4.00க்கு மேற்கொள்ளப்படும். அன்றைய தினம் அங்கீகரிக்கும் வெற்றிகரமாக கேள்விமனுதாரரினால் 06 மாத வாடகை தவணை தொகையை வைப்புச் செய்வதற்கு கேள்விமனுதாரர் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இது தொடர்பில் எடுக்கும் இறுதி முடிவு கேள்விமனு குழு வசமானதாகும்.

**மேலதிக விபரங்களுக்கு :- 025-2266560 இற்கு அழைத்து பெற்றுக்கொள்ள முடியும்.**

**அட்டவணை**

| வரிசை இலக்கம் | ஆதன உருப்படி | 2024 குறைந்தபட்ச விலைமனு (மாதாந்தம்) | கேள்விமனு பிணை வைப்புத் தொகை | விண்ணப்பப் படிவக் கட்டணம் |
|---|---|---|---|---|
| 01 | பிரதேச சபை கட்டிட புதிய சந்தைத் தொகுதி இலக்கம் 01 | ரூபா 60,000.00 | ரூபா 10,000.00 | ரூபா 1,000.00 |
| 02 | மிஹிந்தலை நகர பொது கழிப்பிட கட்டமைப்பு | ரூபா 7,500.00 | ரூபா 3,000.00 | ரூபா 1,000.00 |

**செயலாளர்,**
**பிரதேச சபை,**
**மிஹிந்தலை.**

# உயிரியல் மருத்துவ பொறியியல் சேவைகள் பிரிவு

## விலைமனுக்கோரல்களுக்கான திருத்தம்

**Supply of 01 No. Heart Lung Machine**

மேலேயுள்ள பெறுகை தொடர்பாக தினமின, தினகரன் மற்றும் டெயிலி நியுஸ் பத்திரிகைகளில் 2024.06.20 ஆம் திகதியன்று பிரசுரிக்கப்பட்ட விலைமனுக்கோரல்களுக்கான அழைத்தலுக்கு மேலானது.

| | அம்சம் | BES அலுவலகத்தில் செலுத்தவேண்டிய மீளளிக்கப்படாத கட்டணம் | மதிப்பீடு செய்யப்பட்டுள்ள ஆகுசெலவு (மில்லியன் ரூபாவில்) |
|---|---|---|---|
| 01 | 01 No, Heart Lung Machine | 20,000.00 | 80 |

1. கேள்விகோரல்களை சமர்ப்பிப்பதற்கான இறுதித் திகதியானது 2024.09.19 ஆம் திகதி வரையும் நீடிக்கப்பட்டுள்ளதுடன் விலைமனுக்களை திறத்தலானது அதே நாளில் (2024.09.19) மு.ப. 10 மணிக்கு நடைபெறும்.
2. கேள்விதாரர் மேலதிக தகவல், பரீட்சித்தல் மற்றும் கேள்விக்கோரல் ஆவணங்களை கையேற்றல் ஆகியனவற்றிற்காக கொழும்பு-10, டி சேரம் பிளேஸ், உயிரியல் மருத்துவ பொறியியல் சேவைகள் பணிப்பாளரிடமிருந்து 2024.09.02 ஆம் திகதியிலிருந்து 2024.09.18 ஆம் திகதி வரையும் வேலை நாட்களில் மு.ப. 9.30 மணிக்கும் பி.ப. 3 மணிக்குமிடையில் பெற்றுக் கொள்ளலாம். (தொலைபேசி: 011-2691916. தொலைநகல்: 011-2698317)
3. முன்னைய விளம்பரத்தில் வழங்கப்பட்டுள்ள ஏனைய அனைத்து நியதிகள் மற்றும் நிபந்தனைகளில் எவ்வித மாற்றமுமில்லை.
4. மீளளிக்கப்படாத கட்டணமானது ஒரு தடவையில் பெறுகைக்காக மாத்திரமே செலுத்தப்படல் வேண்டும்.

**தலைவர்,**
**அமைச்சு பெறுகைக் குழு,**
**உயிரியல் மருத்துவ பொறியியல் சேவைகள்,**
**இல.: 27, டி சேரம் பிளேஸ்,**
**கொழும்பு-10.**

# துறைமுகங்கள், கப்பற்துறை மற்றும் விமானசேவைகள் அமைச்சு

**விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (பிறைவெட்) லிமிடெட்**

## முன்மொழிவுகளுக்கான கோரிக்கை (RFP)

**அரச தனியார் கூட்டாண்மையின் கீழ் கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தில் (BIA) பிரத்தியேக பயணிகள் வசதி சேவை வசதி ஒன்றை நிறுவுதல்**

**RFP No: 089/T/2024**

1. அரச – தனியார் கூட்டாண்மையின் கீழ் கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தில் (BIA) பிரத்தியேக பயணிகள் வசதி சேவை வசதி ஒன்றை நிறுவுவதற்கான (இதன் பின் "திட்டம்" என குறிப்பிடப்படும்) திட்டத்தை மேற்கொள்வதற்கு விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (பிறைவெட்) லிமிடெட் (இதன்பின் "AASL" அல்லது "தொழில்வழங்குநர்" என்று குறிப்பிடப்படும்) எதிர்பார்க்கிறது. இந்தத் திட்டம் Build Own Transfer (BOT) அடிப்படையில் செயற்படுத்தப்படுவதோடு தேர்வு செய்யப்படும் முன்மொழிபவர் 30 ஆண்டு காலத்தில் திட்டத்தின் வடிவமைப்பு, நிர்மாணம், நிதி, செயற்பாடு, பராமரிப்பு மற்றும் பரிமாற்றத்திற்கு (DBFOMT) கடப்பாடு பெற்றுள்ளார்.
2. இந்த ஒப்பந்தத்தை வழங்குவதற்காக தகுதிபெற்ற ஆர்வம் கொண்ட தரப்புகளை தேர்வு செய்வதற்கு முன்மொழிவுகளுக்கான கோரிக்கைக்கு (RFP) அழைப்பு விடுத்தல், ஏற்றல் மற்றும் கோரிக்கையை மதிப்பீடு செய்யும் பொறுப்பை அமைச்சரவை நியமித்த பேச்சுவார்த்தைக் குழு (CANC) பெற்றிருக்கும். ஒப்பந்தம் வழங்கப்படும் வரையில், தொழில் வழங்குநர் மற்றும் ஆர்வமுடைய தரப்பு இடையே தொடர்பாடல் மற்றும் சமர்ப்பிப்புகள் குறிப்பிடப்பட்ட முகவரியில் CANC ஊடாக நேரடியாக இருத்தல் வேண்டும். ஒப்பந்தம் வழங்கப்படும் தரப்பு அனைத்து விதிகள் மற்றும் நிபந்தனைகளும் உள்ளடங்கியதாக AASL உடன் ஒப்பந்தம் ஒன்றுக்கு வருதல் வேண்டும்.
3. இந்தத் திட்டத்திற்காக தொழில்வழங்குநர் சார்பில் ஆர்வமுடைய தரப்புகளிடம் இருந்து தொழில் அமைச்சரவை நியமித்த பேச்சுவார்த்தைக் குழுவின் (CANC) தலைவரால் முத்திரை பொறிக்கப்பட்ட RFP தற்போது கோரப்படுகிறது. ஆர்வமுடைய தரப்புகள் இந்த சேவைகளை மேற்கொள்வதற்கு தமது தகைமைகள் மற்றும் தொடர்புடைய அனுபவத்தை நிரூபிக்கும் தகவல்களை வழங்குதல் வேண்டும். அதன்படி முன்மொழிவுகளின் குறுகிய பட்டியல் மேற்கொள்ளப்படும்.
4. உள்ளூர் மற்றும் சர்வதேச நிறுவனங்களுக்கு இந்த முன்மொழிவுகளுக்கான கோரிக்கை (RFP) திறந்திருக்கும்.
5. கீழ் தரப்பட்டுள்ள முகவரியில் 2024.10.15 ஆம் திகதி வரை அனைத்து வேலை நாட்களிலும் 09.00 மற்றும் 15.00 மணிக்கு இடையே (இலங்கையில் GMT நேரம் - 0530) 500 அமெரிக்க டொலர் அல்லது அதற்கு இணையான இலங்கை ரூபாவின் மீளளிக்கப்படாத கட்டணத்தை செலுத்தி ஆங்கில மொழியிலான முன்மொழிவுகளுக்கான கோரிக்கை (RFP) ஆவணத்தை பெற முடியும். மாறாக, ஒன்லைன் கொடுப்பனவு ஒன்றை செய்வதன் மூலம் www.airport.lk என்ற இணையதளத்தில் இருந்து அதனை தரவிரக்கம் செய்ய முடியும். அதே முகவரி அல்லது www.airport.lk இணையதளத்தில் கட்டணம் இன்றி RFP ஆவணத்தை பரீட்சிக்க முடியும்.

   **வழங்கல் சங்கிலி முகாமைத்துவ பிரிவு,**
   **விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (பிறைவெட்) லிமிடெட்,**
   **பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம் (BIA),**
   **கட்டுநாயக்க, இலங்கை.**
   **தொலைபேசி: +94-11-2264102, தொலைநகல் +94-11-2252239, மின்னஞ்சல்: head.scm@airport.lk**
6. இலங்கையில் இயங்கும் புகழ்பெற்ற வர்த்தக வங்கி அல்லது பிரத்தியேக வங்கி அல்லது இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட இலங்கையில் வர்த்தகம் மேற்கொள்வதற்கு உரிமம் பெற்ற வங்கி ஒன்றினால் உறுதி செய்யப்பட்ட சர்வதேச வங்கி ஒன்றில் இருந்து அல்லது வங்கி வரைவு ஒன்று அல்லது ரொக்கப்பணத்தில் 20,000 அமெரிக்க டொலர் பெறுமதியுடன் RFP ஆவணத்தின் "பிரிவு 4" இல் வழங்கப்பட்ட வடிவத்தில் முன்மொழிவு உத்தரவாதமாக தமது முன்மொழிவுகளுடன் சேர்த்து அனைத்து ஆர்வமுடைய தரப்புகளால் கோரும்போது பெறத்தக்க, மாற்ற முடியாத மற்றும் நிபந்தனையற்ற வங்கி உத்தரவாதம் ஒன்றை சமர்ப்பித்தல் வேண்டும். முன்மொழிவுகள் RFP மூடப்படும் திகதியில் இருந்து குறைந்தது நூற்று ஐம்பது (150) நாட்களுக்கு செல்லுபடியாக இருத்தல் வேண்டும் என்பதோடு முன்மொழிவு உத்தரவாதம் RFP மூடப்படும் திகதியில் இருந்து குறைந்தது நூற்று எண்பது (180) நாட்களுக்கு செல்லுபடியாக இருத்தல் வேண்டும். CANC இனால் கோரப்படுவது போன்று முன்மொழிவு உத்தரவாதத்தை விலைமனுதாரர் நீடிக்க வேண்டி இருக்கலாம்.
7. விலைமனுவுக்கு முந்திய சந்திப்பு கட்டுநாயக்க சர்வதேச விமானநிலையத்தில் (BIA) பிரத்தியேக பயணிகள் வசதி சேவை வசதிக்கு முன்மொழியப்பட்ட திட்டத்திற்காக வடிவமைக்கப்பட்ட இடத்திற்கு தளப் பயணம் ஒன்றைத் தொடர்ந்து கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தில் 2024.09.19 ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு (இலங்கையில் புஆவு நேரம் -0530) இடம்பெறும்.
8. முன்மொழிவுகளுக்கான கோரிக்கையை (RFP) 2024.10.16 ஆம் திகதி 14 மணி தாமதிக்காது (இலங்கையில் GMT நேரம் - 0530) கீழ் தரப்பட்டுள்ள, CANC, தலைவரின் முகவரிக்கு முத்திரை பொறிக்கப்பட்ட படிவம் ஒன்றில் பதிவுத் தபால் மூலம் அனுப்புவது அல்லது நேரடியாக சமர்ப்பித்தல் வேண்டும். மின்னணுவில் சமர்ப்பிக்கப்படுவது ஏற்கப்படமாட்டாது. தாமதித்து சமர்ப்பிக்கப்படுபவை திறக்கப்படாது நிராகரிக்கப்படும். கிடைக்கப்பெறும் RFP கள் இந்த நோக்கத்திற்காக நியமிக்கப்பட்ட அதிகாரிகள் குழு ஒன்றினால் ஏற்கும் நேரம் முடிந்த பின்னர் உடன் திறக்கப்படும்.

**தலைவர்,**
**அமைச்சரவை நியமித்த பேச்சுவார்த்தைக் குழு (CANC)**
**துறைமுகங்கள், கப்பல்துறை மற்றும் விமான சேவைகள் அமைச்சு,**
**கட்டம் 30, மேற்கு கோபுரம், உலக வர்த்தக மையம்,**
**கொழும்பு 02, இலங்கை**
**தொலைபேசி +94-11- 2439352, தொலைநகல் +94-11- 2438134,**
**மின்னஞ்சல்: pmaezd@gmail.com**

# துறைமுகங்கள், கப்பற்துறை மற்றும் விமான சேவைகள் அமைச்சு

**விமானநிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (பிறைவெட்) லிமிடெட்**

**முன்மொழிவுகளுக்கான கோரிக்கை (RFP)**

**அரச - தனியார் கூட்டாண்மையின் கீழ் இரத்மலானை, கொழும்பு சர்வதேச விமானநிலையத்திற்காக (CIAR) நிலையான அடிப்படையில் இயக்குபவர் (FBO) ஒருவரை நிறுவுதல்**

**RFP No: 091/T/2024**

1. அரச – தனியார் கூட்டாண்மையின் கீழ் இரத்மலானை, கொழும்பு சர்வதேச விமானநிலையத்திற்காக (CIAR) நிலையான அடிப்படையில் இயக்குபவர் (FBO) ஒருவரை நிறுவுவதற்கான (இதன் பின் "திட்டம்" என குறிப்பிடப்படும்) திட்டத்தை மேற்கொள்வதற்கு விமானநிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (பிறைவெட்) லிமிடெட் (இதன்பின் "AASL" அல்லது "தொழில்வழங்குநர்" என்று குறிப்பிடப்படும்) எதிர்பார்க்கிறது. இந்தத் திட்டம் Build Own Transfer (BOT) அடிப்படையில் செயற்படுத்தப்படுவதோடு தேர்வு செய்யப்படும் முன்மொழிபவர் 20 ஆண்டு காலத்தில் திட்டத்தின் வடிவமைப்பு, நிர்மாணம், நிதி, செயற்பாடு, பராமரிப்பு மற்றும் பரிமாற்றத்திற்கு (DBFOMT) கடப்பாடு பெற்றுள்ளார். தேர்வு செய்யப்பட்ட விலைமனுதாரர் CIAR இல் சர்வதேச நிறுவன ஜெட்களை கையாள்வதற்கு பிரத்தியேக உரிமை வழங்கப்படும்.
2. இந்த ஒப்பந்தத்தை வழங்குவதற்காக தகுதிபெற்ற ஆர்வம் கொண்ட தரப்புகளை தேர்வு செய்வதற்கு முன்மொழிவுகளுக்கான கோரிக்கைக்கு (RFP) அழைப்பு விடுத்தல், ஏற்றல் மற்றும் கோரிக்கையை மதிப்பீடு செய்யும் பொறுப்பை அமைச்சரவை நியமித்த பேச்சுவார்த்தைக் குழு (CANC) பெற்றிருக்கும். ஒப்பந்தம் வழங்கப்படும் வரையில், தொழில்வழங்குநர் மற்றும் ஆர்வமுடைய தரப்பு இடையே தொடர்பாடல் மற்றும் சமர்ப்பிப்புகள் குறிப்பிடப்பட்ட முகவரியில் CANC ஊடாக நேரடியாக இருத்தல் வேண்டும். ஒப்பந்தம் வழங்கப்படும் தரப்பு அனைத்து விதிகள் மற்றும் நிபந்தனைகளும் உள்ளடங்கியதாக விமானநிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (பிறைவெட்) லிமிடெட் (AASL) உடன் ஒப்பந்தம் ஒன்றுக்கு வருதல் வேண்டும்.
3. இந்தத் திட்டத்திற்காக தொழில்வழங்குநர் சார்பில் ஆர்வமுடைய தரப்புகளிடம் இருந்து தொழில் அமைச்சரவை நியமித்த பேச்சுவார்த்தைக் குழுவின் (CANC) தலைவரால் முத்திரை பொறிக்கப்பட்ட RFP தற்போது கோரப்படுகிறது. ஆர்வமுடைய தரப்புகள் இந்த சேவைகளை மேற்கொள்வதற்கு தமது தகைமைகள் மற்றும் தொடர்புடைய அனுபவத்தை நிரூபிக்கும் தகவல்களை வழங்குதல் வேண்டும். அதன்படி முன்மொழிவுகளின் குறுகிய பட்டியல் மேற்கொள்ளப்படும்.
4. உள்ளூர் மற்றும் சர்வதேச நிறுவனங்களுக்கு இந்த முன்மொழிவுகளுக்கான கோரிக்கை (RFP) திறந்திருக்கும்.
5. கீழ் தரப்பட்டுள்ள முகவரியில் 2024.10.15 ஆம் திகதி வரை அனைத்து வேலை நாட்களிலும் 09.00 மற்றும் 15.00 மணிக்கு இடையே (இலங்கையில் GMT நேரம் -0530) 200 அமெரிக்க டொலர் அல்லது அதற்கு இணையான இலங்கை ரூபாவின் மீளளிக்கப்படாத கட்டணத்தை செலுத்தி ஆங்கில மொழியிலான முன்மொழிவுகளுக்கான கோரிக்கை (RFP) ஆவணத்தை பெற முடியும். மாற்றாக, ஒன்லைன் கொடுப்பனவு ஒன்றை செய்வதன் மூலம் www.airport.lk என்ற இணையதளத்தில் இருந்து அதனை தரவிக்கம் செய்ய முடியும். அதே முகவரி அல்லது www.airport.lk இணையதளத்தில் கட்டணம் இன்றி RFP ஆவணத்தை பரீட்சிக்க முடியும்.

   **வழங்கல் சங்கிலி முகாமைத்துவ பிரிவு,**
   **விமானநிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (பிறைவெட்) லிமிடெட்,**
   **பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம் (BIA),**
   **கட்டுநாயக்க, இலங்கை.**
   **தொலைபேசி: +94-11-2264102, தொலைநகல் +94-11-2252239, மின்னஞ்சல்: head.scm@airport.lk**
6. இலங்கையில் இயங்கும் புகழ்பெற்ற வர்த்தக வங்கி அல்லது பிரத்தியேக வங்கி அல்லது இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட இலங்கையில் வர்த்தகம் மேற்கொள்வதற்கு உரிமம் பெற்ற வங்கி ஒன்றினால் உறுதி செய்யப்பட்ட சர்வதேச வங்கி ஒன்றில் இருந்து அல்லது வங்கி வரைவு ஒன்று அல்லது ரொக்கப்பணத்தில் 10,000 அமெரிக்க டொலர் பெறுமதியுடன் RFP ஆவணத்தின் "பிரிவு 4" இல் வழங்கப்பட்ட வடிவத்தில் முன்மொழிவு உத்தரவாதமாக தமது முன்மொழிவுகளுடன் சேர்த்து அனைத்து ஆர்வமுடைய தரப்புகளால் கோரும்போது பெறத்தக்க, மாற்ற முடியாத மற்றும் நிபந்தனையற்ற வங்கி உத்தரவாதம் ஒன்றை சமர்ப்பித்தல் வேண்டும். முன்மொழிவுகள் RFP மூடப்படும் திகதியில் இருந்து குறைந்தது நூற்று ஐம்பது (150) நாட்களுக்கு செல்லுபடியாக இருத்தல் வேண்டும் என்பதோடு முன்மொழிவு உத்தரவாதம் RFP மூடப்படும் திகதியில் இருந்து குறைந்தது நூற்று எண்பது (180) நாட்களுக்கு செல்லுபடியாக இருத்தல் வேண்டும். CANC இனால் கோரப்படுவது போன்று முன்மொழிவு உத்தரவாதத்தை விலைமனுதாரர் நீடிக்க வேண்டி இருக்கலாம்.
7. விலைமனுவுக்கு முந்திய சந்திப்பு முன்மொழியப்பட்ட FBO திட்டத்திற்காக வடிவமைக்கப்பட்ட இடத்திற்கு தளப் பயணம் ஒன்றைத் தொடர்ந்து இரத்மலானை கொழும்பு சர்வதேச விமானநிலையத்தில் 2024.09.18 ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு (இலங்கையில் GMT நேரம் -0530) இடம்பெறும்.
8. முன்மொழிவுகளுக்கான கோரிக்கையை (RFP) 2024.10.16 ஆம் திகதி 14 மணி தாமதிக்காது (இலங்கையில் GMT நேரம் -0530) கீழ் தரப்பட்டுள்ள, CANC, தலைவரின் முகவரிக்கு முத்திரை பொறிக்கப்பட்ட படிவம் ஒன்றில் பதிவுத் தபால் மூலம் அனுப்புவது அல்லது நேரடியாக சமர்ப்பித்தல் வேண்டும். மின்னணுவில் சமர்ப்பிக்கப்படுவது ஏற்கப்படமாட்டாது. தாமதித்து சமர்ப்பிக்கப்படுபவை திறக்கப்படாது நிராகரிக்கப்படும். கிடைக்கப்பெறும் RFP கள் இந்த நோக்கத்திற்காக நியமிக்கப்பட்ட அதிகாரிகள் குழு ஒன்றினால் ஏற்கும் நேரம் முடிந்த பின்னர் உடன் திறக்கப்படும்.

**தலைவர்,**
**அமைச்சரவை நியமித்த பேச்சுவார்த்தைக் குழு (CANC)**
**துறைமுகங்கள், கப்பற்துறை மற்றும் விமான சேவைகள் அமைச்சு, கட்டம் 30, மேற்கு கோபுரம், உலக வர்த்தக மையம், கொழும்பு - 01, இலங்கை**
**தொலைபேசி +9411- 2439352, தொலைநகல் +9411- 2438134,**
**மின்னஞ்சல்: pmaezd@gmail.com**

# கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில்

**வழக்கு இல.** DTS297/2024
**தன்மை:** மரணசாதன
**நடவடிக்கை முறை:** சுருக்கம்
**பெறுமதி:** ரூபா 40,283.907/-

ஐக்கிய இராச்சியம் HA28RZ, கெனில்வர்ன் அவனியு. எரோவ். இலக்கம் 53 கொண்ட பிரதேசத்தில் இறுதியாக வசித்த குசுமா ஆரியசேன அல்லது குசுமா அமரசிங்க ஆகியவரின் இறுதி விருப்பாவணம் மற்றும் மரண சாசனம் தொடர்பாக ஐக்கிய இராச்சிய இங்கிலாந்து மற்றும் வெல்னய உயர் நீதிமன்றத்தினால் ஐக்கிய இராச்சியம் எரோவ், HA28RZ, கெனில்வர்ன் அவினியு. 53இல் வசிக்கின்ற ரன்மலி லிலந்தி ஆரியசேன, ஐக்கிய இராச்சியம், IG8 0BE, ஹார்டின்ஸ், கொரோஸ்வெனர், 43இல் வசிக்கின்ற ஜனக ஆரியசேன மற்றும் ஐக்கிய இராச்சியம் எரோவ், HA28RZ, கெனில்வர்ன் அவினியு, 53இல் வசிக்கின்ற நிலந்த ஆரியசேன ஆகியவர்களுக்கு வழங்கப்பட்ட பிரபோட் அதிகாரப்பத்திரம் தொடர்பான சான்றிதழை 1977ஆம் ஆண்டு 20ஆம் இலக்க சட்டத்தினால் திருத்தியமைக்கப்பட்ட குடியியல் நடைமுறைச் சட்டக் கோவையின் XXXVIIIBஆம் அதிகாரத்தின் ஏற்படுகளின் கீழ் மீண்டும் முத்திரையிடுவது தொடர்பான கோரிக்கையுடன் சார்ந்தது.

**மரணித்தவர்**

**எதிர்**

1. ரன்மலி லிலந்தி ஆரியசேன
   53, கெனில்வர்ன் அவனியு,
   எரோவ். HA28RZ,
   ஐக்கிய இராசியம்
2. ஜனக ஆரியசேன
   43, கொரோஸ்வெனர்
   ஹார்டின்ஸ், IG8 0BE
   ஐக்கிய இராச்சியம்
3. நிலந்த ஆரியசேன
   53, கெனில்வர்ன் அவினியு
   எரோவ், HA28RZ,
   ஐக்கிய இராச்சியம்

இவர்களின் அற்றோணி தத்துவக்காரரான இல. 19/30B, வெள்ளவத்த பிரதேசம், நாவல எனும் விலாசத்தில் வசிக்கும் ஏவா ஹுன்பல்ல ஜகஸ்நாத தீரதிலக என்பவர் மூலம் தோன்றுகின்ற

**மனுதாரர்கள்**

ஐக்கிய இராச்சியம் HA28RZ, கெனில்வர்ன் அவனியு எரோவ். இலக்கம் 53 கொண்ட பிரதேசத்தில் இறுதியாக வசித்து மரணமடைந்த குசுமா ஆரியசேன அல்லது குசுமா அமரசிங்க ஆகியவரின் சொத்திற்கு ஐக்கிய இராச்சியம் இங்கிலாந்து மற்றும் வெல்னய உயர் நீதிமன்றத்தினால் ஐக்கிய இராச்சியம் எரோவ், HA28RZ, கெனில்வர்ன் அவினியு. 53இல் வசிக்கின்ற ரன்மலி லிலந்தி ஆரியசேன, ஐக்கிய இராச்சியம், IG8 0BE, ஹார்டின்ஸ், கொரோஸ்வெனர், 43இல் வசிக்கின்ற ஜனக ஆரியசேன மற்றும் ஐக்கிய இராச்சியம் எரோவ், HA28RZ, கெனில்வர்ன் அவினியு, 53இல் வசிக்கின்ற நிலந்த ஆரியசேன ஆகியவர்களுக்கு வழங்கப்பட்ட பிரபோட் அதிகாரப்பத்திரம் தொடர்பான சான்றிதழை 1977ஆம் ஆண்டு 20ஆம் இலக்க சட்டத்தினால் திருத்தியமைக்கப்பட்ட குடியியல் நடைமுறைச் சட்டக் கோவையின் XXXVIIIBஆம் அதிகாரத்தின் ஏற்படுகளின் கீழ் மீண்டும் முத்திரையிடுவது தொடர்பான கோரிக்கை பத்திரமொன்று. இது வெளியிடப்பட்ட திகதியில் இருந்து 28 நாட்கள் கடந்த பின் கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என்பதை இதனூடாக அறியப்படுத்தப்படுகின்றது.

2024ஆம் ஆண்டு 08 மாதம் 23ஆம் திகதி

**மனுதாரர்களின் பதிவுப் பெற்ற சட்டத்தரணிகள்**

---

## பெறுகைக்கான அழைப்பு
# இலங்கை புகையிரத சேவை

**இலங்கை புகையிரத திணைக்களத்துக்குரிய நுகேகொடை நகரின் மூன்று மாடி வர்த்தக கட்டிடத்தை ஐந்து வருட காலத்திற்கு குத்தகைக்கு வழங்குவதற்கான பெறுகைக் குழு விலைமனுக் கோரல்**

இலங்கை புகையிரத திணைக்களம் சார்பாக திணைக்கள பெறுகைக் குழுவின் தலைவரால் நுகேகொடை புகையிரத நிலையத்திற்கு முன்பாக 6.5 பர்ச்சஸ்சில் நிர்மாணிக்கப்பட்டுள்ள மூன்று மாடி வர்த்தக கட்டிடத்தை ஐந்து வருட காலத்திற்கு வியாபார நடவடிக்கைகளுக்காக குத்தகைக்கு வழங்குவது தொடர்பில் விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரை பொறிக்கப்பட்ட பெறுகை விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

**01. தகைமைகள்**

திணைக்கள நிபந்தனைகளுக்கு கீழ் அதிகூடிய விலையினை முன்வைக்கின்ற விண்ணப்பதாரிக்கு, ஏற்புடைய கட்டிடத்தை குத்தகைக்கு வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

**02. கேள்வி விண்ணப்ப பத்திரங்களை பெற்றுக்கொள்ளல்.**

பெறுகை ஆவணங்களை 2024 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 25 ஆம் திகதி பி.ப 2.00 மணிவரை புகையிரத விற்பனை மற்றும் சந்தைபடுத்தல் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம். அதுதொடர்பில் கொழும்பு-10, இலங்கை புகையிரத சேவையின் பிரதான நிதி உத்தயோகத்தரிற்கு, மீளளிக்கப்படாத கேள்வி படிவக்கட்டணமாக ரூ.2,500 தொகையைச் செலுத்தி பெற்றுக் கொள்ளும் பற்றுச்சீட்டை புகையிரத தலைமையகத்தின் விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் பிரதி அத்தியட்சகரிடம் சமர்ப்பித்தல் வேண்டும். கேள்விப் படிவக்கட்டணத்திற்கு மேலதிகமாக மீளளிக்கப்படும் கேள்வி பிணையாக ரூ.205,000.00 தொகையினை திணைக்களத்திற்கு செலுத்த வேண்டும். அக்கேள்வி பிணைத் தொகையினை புகையிரத தலைமையகத்தின் பிரதான நிதி உத்தியோகத்தருக்கு, இலங்கையில் அங்கீகரிக்கப்பட்ட பணத்தில் செலுத்தி பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டை (முதல் பிரதியை) கேள்விமனுவோடு சமர்ப்பிக்க வேண்டும்.

**03. கேள்வி விண்ணப்பங்கள் சமர்ப்பித்தல்**

மேற்படி 02ம் பந்தியில் குறிப்பிட்டுள்ளவாறு பெற்றுக்கொள்ளப்பட்ட விண்ணப்பங்களின் மூலப்பிரதி மற்றும் நகல் பிரதிகளை முறையாக பூர்த்தி செய்து இரு உறைகளில் இட்டு முத்திரையிட வேண்டும். அவ்வுறைகளில் மூலப் பிரதி மற்றும் நகல் பிரதி என தெளிவாக குறிப்பிடுதல் வேண்டும். அவ்வுறைகள் இரண்டையும் ஒரு உறையில் இட்டு அதன் இடது பக்க மேல் மூலையில் "நுகேகொடை நகரின் மூன்று மாடி வர்த்தக கட்டிடத்திற்கான விலைமனுக் கோரல்" என்று குறிப்பிட்டு அவ்வுறையை முத்திரையிட்டு 2024 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 26 ஆம் திகதி பி.ப 2.00 முன்னதாக கிடைக்கக் கூடிய வகையில் தலைவர், திணைக்கள பெறுகைக்குழு, விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் அலுவலகம், புகையிரத தலைமையகம், ஒல்கோட் மாவத்தை, கொழும்பு 10 என்ற முகவரிக்கு பதிவுத் தபாலிலோ அல்லது புகையிரத தலைமையகத்தின் பிரதி அத்தியட்சகர் (விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல்) இன் உத்தியோகபூர்வ அறையில் கேள்விப்பத்திரங்கள் உள்ளிடுவதற்காக தயாரிக்கப்பட்டுள்ள விசேட கேள்விப் பெட்டியில் உள்ளிடவோ நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். அந்நேரத்தின் பின் கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். தபாலினால் தாமதமானவை அல்லது தொலைந்த விண்ணப்பங்கள் தொடர்பில் கருத்திற்கொள்ளப்பட மாட்டாது.

**04. கேள்வி விண்ணப்பங்களை திறத்தல்.**

2024 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 26 ஆம் திகதி பி.ப 2.00 க்கு மேற்கூறிய மூன்றாம் பந்தியில் தரப்பட்டுள்ள விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் அலுவலகத்தில் விண்ணப்பங்கள் திறக்கப்படுவதுடன் அவ்வேளையில் விண்ணப்பதாரியோ அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட ஒரு பிரதிநிதியோ சமுகமளிக்க அனுமதிக்கப்படும்.

**05.** கேள்விகளை கோருவதற்கு முன்னர் மேற்படி கட்டிடத்தை பரீட்சிப்பதற்காக விண்ணப்பதாரிகளுக்கு சந்தர்ப்பம் வழங்கப்படுவதுடன் அதற்காக பிரதி பொதுமுகாமையாளர் (வணிகம்) ஊடாக அனுமதியைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

**06.** திணைக்களப் பெறுகைக் குழுவின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.

**07.** கேள்விதாரர்களுக்கு தேவையான மேலதிக விபரங்களை இலங்கை புகையிரத சேவையின் விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் அலுவலகத்திலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

**தொ.பே இல 011 2421281 (நீடிப்பு - 8235) / 011-4600944**

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**புகையிரத தலைமையகம்,**
**ஒல்கோட் மாவத்தை,**
**கொழும்பு 10**

---

**2015ஆம் ஆண்டின் 05ஆம் இலக்க தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தும் அதிகாரசபைச் சட்டத்தின் (3) எனும் அத்தியாயத்தின் கீழ் மற்றும் கௌரவ நீதிமன்றத்தின் கட்டளையின் பிரகாரம் இலங்கை மக்களிடம் மன்னிப்பு கோருதல்**

இல. 150/A, விதானகே வத்த, கிந்தகல்ல, அங்கொடயில் வசிக்கும் யட்டிகல ஹல்கொட லியனகே ரம்ய சம்பத் ஆகிய நான். இல. 216, ஹெட்டி வீதி, வெலிகம எனும் முகவரியில் அமைந்துள்ள சம்பத் பாமசி எனும் மருந்தகத்தில் சேவையாற்றுகின்றேன்.

அந்த மருந்தகத்தில் மருந்தாளர் அல்லாத நபரொருவரினால் மருந்து வழங்கிய குற்றத்திற்காக 89607ஆம் இலக்க வழக்கின் கீழ் தொடரப்பட்ட வழக்கில் நான் குற்றவாளி எனவும் மாத்தறை மேலதிக நீதவான் நீதிமன்றத்தினால் 25,000.00 ரூபா அபராதமும் விதிக்கப்பட்டதாக பொதுமக்களுக்கு இத்தால் அறிவிக்கின்றேன்.

இந்தக் குற்றத்தை மீண்டும் நான் செய்யமாட்டேன் எனப் பிரகடனப்படுத்துவோடு ஏற்பட்ட தவறு தொடர்பில் அனைத்து இலங்கை மக்களிடமும் மன்னிப்பைக் கோருகின்றேன்.

---

# பொது அறிவித்தல்

கீழே குறிப்பிட்டுள்ள பாரிய அளவுள்ள வாகனங்கள் குறிப்பிட்டுள்ள பாதைகளின் வழியாகவும் திட்டவட்டமாக குறிப்பிட்டுள்ள திகதிகளிலும் பயணம் செல்லுமென்பது பொது மக்களுக்கு அறிவிக்கப்படுகின்றது.

| | | |
|---|---|---|
| இலிருந்து | : | 2024.09.03 - 2024.09.30 வரையும். |
| வாகன இலக்கங்கள் | : | LY 3173/LY 3174/LY 2338/LY 3995/LY 3996/LY 5119/LY 4942<br>46-3745/45-7882/HM 9246/LX 0918/67-1824/46-9439/LX 2103 |
| வாகன வழி | : | கொழும்பு - காலி - ஹம்பந்தோட்டை - வெல்லவாய வீதி (ஏ002) வழியாக தளத்திலிருந்து மாகம்புர இடைமாற்றத்திற்கு. ஈ06, ஈ01, ஈ02, ஈ03 ஆகிய அதிவேக நெடுஞ்சாலைகள் வழியாக ஹம்பந்தோட்டையிலிருந்து கட்டுநாயக்க வரையும் பேலியகொட-புத்தளம் வீதி (ஏ03) வழியாக கட்டுநாயக்கவிலிருந்து பாலாவி வரையும். பாலாவி -கற்பிட்டி (B349) வழியாக பாலாவியிலிருந்து நுரைச்சோலை வரையும். |

பெரிய அளவிலான வாகனங்களுக்கு தற்காலிகமான பயண அனுமதிப்பத்திரங்களை வழங்குவதற்காக வீதி அபிவிருத்தி அதிகாரசபையினால் மேற்கொள்ளப்பட்ட தேவைப்படுத்தலை பூர்த்தி செய்வதற்காகவே இந்த அறிவித்தல் பிரசுரிக்கப்படுகின்றது.

**Bridgeway Enterprises (Pvt) Ltd.**

---

**For classified advertisements and for replies**

**received in response to advertisements published under Lake House box numbers**

**+94 112429342**
**+94 112429343**

---

**இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு**
**வனசீவராசிகள் மற்றும் வனவளங்கள் பாதுகாப்பு அமைச்சு**
**வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம்**

# கேள்வி அழைப்பு

## Herbivore Pellets கொள்வனவு செய்தல்

**WL/2/21/Herbivore Pellets/2024**

வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தின் திணைக்கள பெறுகைக் குழுத் தலைவரால் வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தின் கீழ் பாதுகாப்புப் பெறும் யானைக் குட்டிகளுக்குத் தேவையான Herbivore Pellets கொள்வனவு செய்வதற்காக தகைமையுள்ள மற்றும் இதில் ஆர்வம் காட்டுகின்ற கேள்விதாரர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

1. கேள்வி கோரல் தேசிய போட்டி கேள்வி கோரலின் கீழ் இடம்பெறும்.
2. இதற்காக ஆர்வம் காட்டுகின்ற கேள்விதாரர்களுக்கு கேள்வி ஆவணங்களை 2024.09.02ஆம் திகதி முதல் 2024.09.23ஆம் திகதி வரையான அரச வேலை அலுவலக நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 2.30 மணி வரை பத்தரமுல்ல, வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தின் கணக்குப் பிரிவில் இலவசமாக பரீட்சித்துப் பார்க்கலாம்.
3. கேள்வி ஆவணங்கள் ஆங்கில மொழியில் தயாரிக்கப்பட்டுள்ளதுடன் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 2.30 மணி வரையில் 2024.09.20ஆம் திகதி வரை வனசீவராசிகள் பணிப்பாளர் நாயகம், வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம், பெயரில் செய்யப்படும் எழுத்துமூல வேண்டுகோளுடன் ரூ. 3950.00 மீளளிக்கப்படாத வைப்புத் தொகையை ரொக்கப் பணமாக திணைக்களத்தின் காசாளரிடம் செலுத்தியதன் பின் பெற்றுக் கொள்ளலாம்.
4. கேள்வி ஆவணங்களுடன் கேள்வி திறக்கப்படும் தினம் முதல் 120 நாட்கள் வரை செல்லுபடியாகுமாறு பெற்றுக் கொண்ட ரூ. 148,500.00 கேள்விப் பிணையொன்றை சமர்ப்பித்தல் வேண்டும். அத்துடன் அதனை கேள்வி ஆவணங்களில் உள்ளடக்கப்பட்டுள்ள மாதிரியின் பிரகாரம் அரச அங்கீகாரம் பெற்ற வர்த்தக வங்கியிலிருந்து பெற்ற அல்லது வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தின் காசாளருக்கு 2024.09.23ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு முன்பு பணத்தைச் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம். கேள்வி ஆவணங்களுடன் கேள்விப் பிணையை சமர்ப்பித்திராத கேள்விப் பத்திரங்கள் நிராகரிக்கப்படும்.
5. கேள்வி, கேள்விகள் திறக்கப்படும் நாள் முதல் குறைந்தபட்சம் 90 நாட்கள் வரையில் செல்லுபடியாதல் வேண்டும்.
6. பூர்த்தி செய்யப்பட்ட கேள்வி ஆவணங்கள் மூலப்பிரதி மற்றும் நகல்பிரதியென வெவ்வேறான கடித உறைகளில் இட்டு முத்திரை பொறியிட்டு மீண்டும் ஒரு உறையில் இட்டு பொறியிட்டு உறையின் இடது பக்க மேல் மூலையில் குறித்த ஒப்பந்தத்தின் பெயர் மற்றும் இலக்கத்தை குறிப்பிட்டு 2024.09.23ஆம் திகதி பி.ப. 2.30 மணிக்கு முன்பு கீழ்க்காணும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தின் நிதிப் பிரிவில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம். அத்துடன் தாமதமாகக் கிடைக்கும் கேள்விப் பத்திரங்கள் நிராகரிக்கப்படும். கேள்விகள் திறத்தல் அன்றைய தினமே பி.ப. 2.30 மணிக்கு இடம்பெறுவதுடன் இந்நிகழ்வில் நீங்கள் அல்லது உங்களது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியொருவர் கலந்துகொள்ளலாம்.
7. கேள்விப் பத்திரங்கள் பற்றிய மேலதிக விபரங்களை 011 2871537 தொ. பே. இலக்கத்தின் ஊடாக திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் (நிதி) அவர்களைத் தொடர்புகொண்டு பெற்றுக் கொள்ளலாம். கேள்விப் பத்திரங்கள் பற்றிய தீர்மானங்களை எடுக்கும் உரிமையை திணைக்கள பெறுகைக் குழு தன்னகத்தே கொண்டுள்ளது என்பதுடன் இவ்வறிவித்தலில் அல்லது கேள்வி மாதிரிகளில் குறிப்பிடப்படும் அல்லது குறிப்பிடப்படாத இப்பெறுகை செயற்பாடுகளுடன் சம்பந்தப்பட்ட ஏதேனும் விடயங்கள் பற்றி தீர்மானம் எடுக்கும் உரிமையை வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தின் பணிப்பாளர் தன்னகத்தே கொண்டிருப்பார்.
8. கேள்விப் பத்திரங்களை தயாரித்தல் சம்பந்தமாக ஏற்படும் எந்த செலவுகளுக்கும் தலைவர், திணைக்கள பெறுகைக் குழுவினால் பொறுப்புக் கூறப்படமாட்டாது.
9. எந்தவொரு கேள்வியையும் ஏற்றுக்கொள்ளும், நிராகரிக்கும், அதன் ஒரு பகுதியை ஏற்றுக் கொள்ளும் அல்லது எந்தக் காரணமும் காட்டாமல் நிராகரிக்கும் உரிமையை பெறுகைக் குழு தன்னகத்தே கொண்டுள்ளது.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம்,**
**இல. 811/ஏ, ஜயந்திபுர வீதி, பத்தரமுல்ல.**

---

# போகம்பர பஸ் நிலையத்தில் சூரிய PV அமைப்பின் வடிவமைப்பு, வழங்கல், நிறுவுதல், சோதனை, செயற்படவைத்தல் மற்றும் பராமரித்தல் மற்றும் தற்போதிருக்கும் சூரிய PV அமைப்புக்கு 5 kW சேர்ப்பதற்கான விலைமனுக் கோரல்

Grid Tied சூரிய கூரை அமைப்புகளை வடிவமைத்தல், வழங்கல், விநியோகித்தல், நிறுவுதல், சோதனை, செயற்படவைத்தல் மற்றும் பராமரித்தலுக்கு பொருத்தமான மற்றும் தகுதியுடைய விலைமனுதாரர்களிடம் இருந்து மத்திய மாகாண வீதி அபிவிருத்தி, போக்குவரத்து, மின் மற்றும் வலுசக்தி மற்றும் வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சின் பெறுகைக் குழுவினால் விலைமனுக்கள் கோரப்படுகின்றன. பயன்பாட்டு வழங்குநராக இலங்கை மின்சார சபை உள்ளது. தேர்வுசெய்யப்படும் விலைமனுதாரர் தொழில்நுட்பத் திறன், இணங்கிய திகதியில் அமைப்புகளை விரைவாக நிறுவுவதற்கு இருப்பு மற்றும் நிதி வலுத்தன்மையை பெற்றிருத்தல் வேண்டும்.

தேர்வுசெய்யப்படும் விலைமனுதாரர் அங்கீகாரக் கடிதத்தை வழங்கிய பின்னர் மத்திய மாகாண வீதி அபிவிருத்தி, போக்குவரத்து, மின் மற்றும் வலுசக்தி மற்றும் வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சுடன் ஒப்பந்த உடன்படிக்கை ஒன்றில் கைச்சாத்திடுதல் வேண்டும். விலைமனுக்களை சமர்ப்பிப்பதற்கு முன்னர் விலைமனுதாரர் தளத்திற்கு வருகை தருதல் வேண்டும்.

| இல. | இடம் | முகவரி | திறன் (kW) | DC/ AC வீதம் | இணைப்பு வகை | விலைமனு செல்லுபடி | விலைமனு பிணை | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | ரொக்கப்பணம் (ரூபா) | வங்கி உத்தரவாதம் (ரூபா) | செல்லுபடி |
| 01 | போகம்பர பஸ் நிலையம் | இல. 22, வில்லியம் கொபல்லாவ மாவத்தை, போகம்பர, கண்டி | 20 kW | 1.2 | Net Accounting | 2024.12.23 வரை | 40,000.00 | 80,000.00 | 2025.01.23 வரை |
| 02 | மத்திய மாகாண வீதி அபிவிருத்தி, போக்குவரத்து, மின் மற்றும் வலுசக்தி மற்றும் வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சு | த. பெட்டி 104, இல. 109, யட்டிநுவர வீதி, கண்டி | 5 kW | 1.2 | Net Metering | 2024.12.23 வரை | 12,000.00 | 24,000.00 | 2025.01.23 வரை |

மத்திய மாகாண வீதி அபிவிருத்தி, போக்குவரத்து, மின் மற்றும் வலுசக்தி மற்றும் வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சு, செயலாளருக்கு கோரிக்கை ஒன்றுடன் ஆவணங்களின் தொகுதி ஒன்றுக்கு 1,500.00 ரூபா மீளளிக்கப்படாத கேள்விமனு கட்டணம் ஒன்றை ரொக்கப்பணத்தில் செலுத்தி கண்டி, யட்டிநுவர வீதி, இல. 109, த. பெட்டி 104, மத்திய மாகாண வீதி அபிவிருத்தி, போக்குவரத்து, மின் மற்றும் வலுசக்தி மற்றும் வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சிடம் இருந்து விலைமனு ஆவணங்களை பெற முடியும்.

விலைமனுக்களை வழங்குவது 2024.09.03 ஆம் திகதி தொடக்கம் 2024.09.20 ஆம் திகதி பி.ப. 03.00 வரை நடத்தப்படும்.

இரு பிரதிகளுடனான முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்களை 2024.09.23 ஆம் திகதி மு.ப. 10.30 அல்லது அதற்கு முன்னர் கண்டி, யட்டிநுவர வீதி, இல. 109, த. பெட்டி 104, மத்திய மாகாண வீதி அபிவிருத்தி, போக்குவரத்து, மின் மற்றும் வலுசக்தி மற்றும் வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சில் வைக்கப்பட்டுள்ள விலைக்கேட்பு பெட்டிக்கு சேர்த்தல் வேண்டும்.

மேலுள்ள முகவரியில் மத்திய மாகாண வீதி அபிவிருத்தி, போக்குவரத்து, மின் மற்றும் வலுசக்தி மற்றும் வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சில் விலைமனுக்களை ஏற்கும் இறுதித் திகதி நிறைவடைந்த பின் விலைமனுக்கள் உடன் திறக்கப்படும். விலைமனுக்களை திறக்கும் சந்தர்ப்பத்தில் இணைவதற்கு விலைமனுதாரர்கள் அல்லது அவர்தம் அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் அனுமதிக்கப்படுவர்.

30 நாட்களுக்குள் பணியை பூர்த்தி செய்தல் வேண்டும்.

விலைமனுவுக்கு முந்திய சந்திப்பு கண்டி, யட்டிநுவர வீதி, இல. 109, த. பெட்டி 104, மத்திய மாகாண வீதி அபிவிருத்தி, போக்குவரத்து, மின் மற்றும் வலுசக்தி மற்றும் வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சில் 2024.09.12 ஆம் திகதி மு.ப. 10.00க்கு இடம்பெறும்.

விலைமனு ஆவணத்தில் தரப்பட்ட அறிவுறுத்தல்களுக்கு அமையவும் முறையாகவும் தயாரிக்கப்பட்ட விலைமனு ஆவணத்துடன் விலைமனுதாரர்களால் அனைத்து ஆதரவு ஆவணங்களும் வழங்கப்படுதல் வேண்டும். இந்த ஆதரவு ஆவணங்களின் சரியான தன்மைக்கு விலைமனுதாரர் முழு பொறுப்பாவார் என்பதோடு இந்த ஆவணங்களின் முழுமையற்ற தன்மை விலைமனுக்கள் நிராகரிக்கப்படுவதற்கு காரணமாகும். எந்த ஒரு காரணமும் கூறாது எந்த ஒரு கேள்விமனு அல்லது அனைத்து கேள்விமனுக்களையும் ஏற்பது மற்றும் நிராகரிக்கும் உரிமை இருக்கும் அதேநேரம் குறைந்த விலைமனுவை ஏற்கும் எந்த ஒரு கடப்பாடும் பொறுகைக் குழுவின் தலைவருக்கு இல்லை. ஒப்பந்தம் வழங்கப்படும் காலம் பெறுகைக் குழுவினால் தீர்மானிக்கப்படும்.

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**மத்திய மாகாண வீதி அபிவிருத்தி, போக்குவரத்து, மின் மற்றும் வலுசக்தி மற்றும் வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சு,**
**த.பெட்டி 104, இல. 109, யட்டிநுவர வீதி, கண்டி.**

---

**The Housewives' companion**
**Classifieds on**
**Daily News**

## இலங்கை ஏ அணி வெற்றி ஆரம்பம்



தென்னாபிரிக்கா சுற்றுப்பயணம் மேற்கொண்டிருக்கும் இலங்கை ஏ அணி தென்னாபிரிக்க ஏ அணிக்கு எதிரான முதலாவது உத்தியோகபூர்வமற்ற ஒருநாள் போட்டியில் 93 ஓட்டங்களால் அபார வெற்றியீட்டியது.

பொச்செப்ஸ்ட்ரூமில் நேற்று முன்தினம் (31) நடைபெற்ற இந்தப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாட பணிக்கப்பட்ட இலங்கை ஏ அணி சார்பில் கமில் மிஷார (71) மற்றும் நுவனிந்து பெர்னாண்டோ (97) ஆகியோர் இரண்டாவது விக்கெட்டுக்கு 101 ஓட்டங்களை இணைப்பாட்டமாக பகிர்ந்துகொண்டனர்.

மத்திய பின் வரிசையில் சமிந்து விக்ரமசிங்க 39 பந்துகளில் 55 ஓட்டங்களை விளாசினார். இதன்மூலம் இலங்கை ஏ அணி 50 ஓவர்களுக்கும் 9 விக்கெட்டுகளை இழந்து 298 ஓட்டங்களை பெற்றது.

தொடர்ந்து பதிலெடுத்தாடிய தென்னாபிரிக்க ஏ அணி 36.5 ஓவர்களுக்கு 205 ஓட்டங்களுக்கே சுருண்டது. இடது கை சுழற்பந்து வீச்சாளர் வனிந்து சஹன் மற்றும் சுழற்பந்து சகலதுறை வீரர் துஷான் ஹேமன்த தலா 3 விக்கெட்டுகளை வீழ்த்தினர். மொஹமட் ஷிராஸ் ஒரு விக்கெட்டை வீழ்த்தினார்.

இலங்கை ஏ அணி இந்த வெற்றியுடன் மூன்று போட்டிகளைக் கொண்ட ஒருநாள் தொடரில் 1–0 என முன்னிலை பெற்ற நிலையில் இன்று தனது இரண்டாவது போட்டியில் களமிறங்கவுள்ளது.

# இலங்கை அணி போராட்டம்



இங்கிலாந்துக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் 483 ஓட்ட வெற்றி இலக்கை நோக்கி இரண்டாவது இன்னிங்ஸை ஆடும் இலங்கை அணி தோல்வியை தவிர்க்க போராடியது.

லண்டன் லோட்ஸ் மைதானத்தில் நடைபெற்று வரும் போட்டியின் நான்காவது நாளான நேற்று (01) தனது இரண்டாவது இன்னிங்ஸை ஆடும் இலங்கை அணி பகல்போசன இடைவேளைக்குப் பின்னர் வரை 54 ஓவர்களில் 3 விக்கெட்டுகளை இழந்து 151 ஓட்டங்களை பெற்றிருந்தது.

அனுபவ வீரர்களான அஞ்சலோ மத்தியூஸ் (36) மற்றும் தினேஷ் சந்திமால் (32) களத்தில் இருந்தனர். எனினும் மீண்டும் ஒருமுறை சோபிக்கத் தவறிய ஆரம்ப வீரர் நிஷான் மதுஷங்க 13 ஓட்டங்களையே பெற்றதோடு பத்தும் நிசங்கவால் 14 ஓட்டங்களையே பெற முடிந்தது.

நிதானமாக ஆடிய ஆரம்ப வீரர் திமுத் கருணாரத்ன 129 பந்துகளில் 7 பௌண்டரிகளுடன் 55 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் ஒல்லி ஸ்டோனின் பந்துக்கு ஆட்டமிழந்தார். இதன்போது ஒல்லி ஸ்டோன் 2 விக்கெட்டுகளை வீழ்த்தி இருந்தார்.

முன்னதாக இங்கிலாந்து அணி தனது முதல் இன்னிங்ஸில் 427 ஓட்டங்களை பெற்றதோடு இலங்கை அணியால் முதல் இன்னிங்ஸுக்காக 196 ஓட்டங்களையே பெற முடிந்தது. தொடர்ந்து சோபித்து வரும் கமிந்து மெண்டிஸ் மாத்திரம் (74) அரைச்சதம் ஒன்றை பெற்றார்.

இந்நிலையில் தனது இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்த இங்கிலாந்து அணி வேகமாக துடுப்பெடுத்தாடி ஓட்டங்களை சேர்த்தது. இதன்மூலம் அந்த அணி 54.3 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 251 ஓட்டங்களை பெற்றது. முதல் இன்னிங்ஸில் சதம் பெற்ற ஜோ ரூட் மீண்டும் சதம் ஒன்றை குவித்தார்.

இலங்கை சார்பில் அசித்த பெர்னாண்டோ மற்றும் லஹிரு குமார தலா 3 விக்கெட்டுகளை வீழ்த்தினர்.

இலங்கை அணி ஏற்கனவே முதல் டெஸ்ட் போட்டியில் தோல்வியை சந்தித்த நிலையில் இந்த டெஸ்டிலும் தோற்றால் மூன்று போட்டிகளைக் கொண்ட தொடரை இழந்துவிடும் நிலை இருந்தது.




## கம்போடியாவுக்கு எதிரான இலங்கை குழாம் அறிவிப்பு



கம்போடியாவுக்கு எதிரான ஆசிய கிண்ண தகுதிகாண் போட்டிகளுக்கான இலங்கை கால்பந்து குழாம் அறிவிக்கப்பட்டுள்ளது.

25 பேர் கொண்ட குழாத்தில் அணித் தலைவராக சுஜான் பெரேரா தொடர்ந்து செயற்படவுள்ளதோடு உடற்தகுதி இன்மையால் டிலோன் டி சில்வா இடம்பெறவில்லை.

இதில் இலங்கை அணியின் இடைக்கால பயிற்சியாளராக குவைட்டைச் சேர்ந்த அப்துல்லா அல் முத்தைரி செயற்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

இதன்போது இலங்கை அணி பிளேஓப் முறையில் கம்போடியாவுடன் இரண்டு போட்டிகளில் மோதவிருப்பதோடு முதல் போட்டி எதிர்வரும் செப்டெம்பர் 5 ஆம் திகதி கொழும்பு, குதிரைப்பந்தய திடல் மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இதனையடுத்து இரண்டாவது போட்டி எதிர்வரும் செப்டெம்பர் 10 ஆம் திகதி கம்போடியாவில் நடைபெறவுள்ளது. இலங்கை கால்பந்து அணி கம்போடியாவை எதிர்கொள்வது எட்டு ஆண்டுகளில் இது முதல் முறையாகும்.

**இலங்கை குழாம்:** சுஜான் பெரேரா, ஹர்ஷ பெர்னாண்டோ, மொஹமட் ஆகிப், மொஹமட் ஹஸ்மீர், மொஹமட் அமான், பாரத் சுரேஷ், வசீம் ரசீக், ஆதவன் ராஜமோகன், ஒலிவர் கெலாட், சகாய் ஸ்டீவன், லியோன் பெரேரா, வேட் டக்கர், ஜேசன் தயாபரன், ஜக் ஹிங்கர்ட், கிளாடியோ மத்தியஸ், ஷெனால் சன்தேஷ், சாமுவேல் டர்ரன்ட், வொரன் பெரேரா, அனுஜன் ராஜேந்திரன், பிராஸ் மர்ஷூக், ஜூட் சுப்புன், மொஹமட் ரிப்கான், கவீஷ் பெர்னாண்டோ, மொஹமட் முர்சித், தனுக்க ரனவீர.



## சர்வதேச செய்திகள்

# தாக்குதலுக்கு இடையே காசாவில் போலியோ தடுப்பு மருந்து வழங்கும் நடவடிக்கை ஆரம்பம்

## மேற்குக் கரையின் ஜெனினில் ஐந்தாவது நாளாகவும் முற்றுகை

காசாவில் 640,000 குழந்தைகளுக்கு போலியோ தடுப்பு மருந்து வழங்கும் நடவடிக்கை நேற்று (01) ஆரம்பமானபோதும் அங்கு தொடர்ந்தும் இஸ்ரேலின் தாக்குதல்கள் உக்கிரமடைந்திருந்ததோடு ஆக்கிரமிக்கப்பட்ட மேற்குக் கரையிலும் இஸ்ரேலின் முற்றுகை ஐந்தாவது நாளாக நேற்றும் (01) நீடித்தது.

பலஸ்தீன சுகாதார நிறுவனத்துடன் இணைந்து ஐக்கிய நாடுகள் சபையே காசாவில் போலியோ தடுப்பு மருந்து வழங்கும் திட்டத்தை ஆரம்பித்துள்ளது. இதனையொட்டி தடுப்பு மருந்து வழங்கும் பகுதிகளில் தற்காலிக மனிதாபிமான போர் நிறுத்தம் ஒன்றுக்கு இஸ்ரேல் மற்றும் ஹமாஸ் போராளிகள் இணங்கியுள்ளனர்.

இந்நிலையில் நேற்று மத்திய காசாவில் தற்காலிக போர் நிறுத்தம் ஒன்று கடைப்பிடிக்கப்பட்டு தடுப்பு மருந்து வழங்கும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதனையொட்டி தடுப்பு மருந்து வழங்கும் மையங்களில் பெரும் எண்ணிக்கையான மக்கள் திரண்டிருப்பதாக மருத்துவ பணியாளர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

மூன்று நாட்கள் மேற்கொள்ளப்படவிருக்கும் இந்த போலியோ தடுப்பு மருந்துத் திட்டம் இன்று மற்றும் நாளை காசாவின் மற்றப் பகுதிகளில் முன்னெடுக்க திட்டமிடப்பட்டுள்ளது.

எனினும் நான்காவது நாளுக்கு இந்தப் போர் நிறுத்தம் நீடிக்கப்பட வாய்ப்பு இருப்பதாக உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது.

காசாவில் 25 ஆண்டுகளில் முதல் முறையாக டைப் 2 வகை போலியோ தொற்று சம்பவம் ஒன்று கடந்த மாதம் கண்டுபிக்கப்பட்டது.

பாதிக்கப்பட்ட குழந்தை பகுதி அளவு பக்கவாதத்திற்கு முகம்கொடுத்திருப்பதாக உலக சுகாதார அமைப்பு குறிப்பிட்டது. இதனையடுத்தே போலியோ தடுப்பு மருந்து வழங்கும் பணி விரைவுபடுத்தப்பட்டுள்ளது.

இந்தத் திட்டம் வெற்றி அளிப்பதற்கு நான்கு வார காலத்திற்குள் 90 வீதமான குழந்தைகளுக்கு இரு முறை தடுப்பு மருந்து வழங்கப்பட வேண்டி இருப்பதாக உலக சுகாதார அமைப்பு குறிப்பிட்டுள்ளது. காசாவில் தொடரும் போர் மற்றும் அங்கு ஏற்பட்டிருக்கும் பேரழிவுகளுக்கு மத்தியில் இந்தத் திட்டத்தை முன்னெடுப்பது பெரும் சிரமத்துக்குரியது என்று அந்த அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர்.

தடுப்புமருந்து வழங்கும் பகுதிகளில் போர் நிறுத்தம் கடைப்பிடிக்கப்பட்டபோதும் அங்கு வானில் இஸ்ரேலிய ஆளில்லா விமானங்கள் வட்டமிட்டு வருவதாகவும் தடுப்பு மருந்து வழங்கும் பகுதிகளிலும் அதனைக் காணக்கூடியதாக இருப்பதாகவும் பார்த்தவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

அதேபோன்று மனிதாபிமான போர் நிறுத்தத்திற்கு உட்படாத மத்திய காசாவின் புரைஜின் கிழக்குப் பகுதியில் இருந்து தொடர்ந்து வெடிப்புச் சத்தங்கள் கேட்ட வண்ணம் இருப்பதாக கூறப்படுகிறது.

இவ்வாறு புரைஜ் மற்றும் காசா நகரங்களில் இஸ்ரேல் நேற்று நடத்திய வான் தாக்குதல்களில் ஒரு சிறுமி உட்பட நால்வர் கொல்லப்பட்டதாக பலஸ்தீன செய்தி நிறுவனமான வபா தெரிவித்தது.

காசாவில் கடந்த 24 மணி நேரத்தில் இஸ்ரேல் நடத்திய தாக்குதல்களில் குறைந்தது 61 பேர் கொல்லப்பட்ட நிலையில் போலியோ தடுப்பூசி வழங்கும் நடவடிக்கை வெற்றி அளிப்பதற்கு உண்மையான போர் நிறுத்தம் ஒன்று தேவையாக உள்ளது என்று பலஸ்தீன சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

காசாவில் 11 மாதங்களை நெருங்கும் போரில் இதுவரை 40,700க்கும் அதிகமான பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டிருப்பதோடு காயமடைந்தோர் எண்ணிக்கை 94,000ஐ தாண்டி இருப்பதாக பலஸ்தீன சுகாதார அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

**ஜெனின் முற்றுகை**

காசா போருக்கு மத்தியில் ஆக்கிரமிக்கப்பட்ட மேற்குக் கரையிலும் பாரிய படை நடவடிக்கை ஒன்றை முன்னெடுத்திருக்கும் இஸ்ரேலிய படை அங்கு ஜெனின் நகரில் ஐந்தாவது நாளாக நேற்றும் முற்றுகையை தொடர்ந்தது.

ஜெனின் நகருக்கான உணவு, நீர், மருத்துவ வசதிகளை முடக்கி நீர் மற்றும் மின்சார விநியோகத்தையும் துண்டித்திருக்கும் இஸ்ரேலிய இராணுவம் நகரின் வீதிகள், கட்டடங்கள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை புல்டோசர் கொண்டு அழித்து வீடு, வீடாக சோதனையிட்டு வருகிறது.

இங்கு பலஸ்தீன போராளிகள் மற்றும் இஸ்ரேலிய படைக்கு இடையே மோதலும் இடம்பெற்று வருவதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதனையொட்டி ஜெனின் நகரில் இருந்து சில குடும்பங்கள் வெளியேற ஆரம்பித்துள்ளன.

தனது இரண்டு மாத குழந்தையுடன் வீட்டை விட்டு வெளியேறி ஒருபா ஷலபி என்ற தாய் அங்கிருக்க பயமாக இருப்பதாக குறிப்பிட்டுள்ளார்.

'அவர்கள் எம்மீது சூடு நடத்துகிறார்கள் வீடுகள் மீது கையெறி குண்டுகளை எறிகின்றனர். எமது வீட்டின் பாதி அளவு வெடித்துச் சிதறியது.

நாம் சமையலறையில் ஒளிந்துகொண்டு எம்முடன் குழந்தைகள் இருப்பதாக சத்தம்போட்டு கூறினோம்' என்று அவர் பி.பி.சி. செய்தி நிறுவனத்திற்கு குறிப்பிட்டுள்ளார்.

இந்நிலையில் ஒருபா தனது தாய், சித்தி, சகோதரி மற்றும் மைத்துனருடன் கால் நடையாக நகரை விட்டு வெளியேறி வந்துள்ளார்.

'அங்கே மின்சாரம் அல்லது நீர் இல்லை. யாரேனும் ஜன்னல் அருகுக்கு நெருங்கினாலும் சுடப்படுகிறார்கள்.

எமது அண்டை வீட்டார்கள் அனைவரும் வலுக்கட்டாயமாக வெளியேற்றப்பட்டார்கள். நாம் அனைவரும் ஒரே அறையில் மூடப்பட்டோம்.

இளைஞர்களை பிடித்த அவர்கள் தரையில் கட்டி வைத்தார்கள்' என்றும் அவர் கூறினார்.

ஜெனினில் இஸ்ரேல் முன்னெடுத்து வரும் படை நடவடிக்கையில் இதுவரை 22 பேர் கொல்லப்பட்டிருப்பதாக பலஸ்தீன சுகாதார அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

இஸ்ரேலியப் படை நகரில் 20 வீதமான வீதிகள் மற்றும் 20 கிலோமீற்றர் அளவான நீர் மற்றும் கழிவுநீர் கட்டமைப்பை புல்டோசர் கொண்டு தகர்த்திருப்பதாக ஜெனின் மாநகர சபை குறிப்பிட்டுள்ளது. இதனால் அகதி முகாமின் 80 வீதமானோருக்கு நீர் விநியோகம் துண்டிக்கப்பட்டுள்ளது.

மேற்குக் கரையின் வட பகுதியில் இஸ்ரேல் கடந்த 20 ஆண்டுகள் காணாத அளவில் பாரிய இராணுவ நடவடிக்கை ஒன்றை கடந்த புதன்கிழமை ஆரம்பித்தது. முன்னதாக துல்கர்ம் மற்றும் டுமாஸ் பகுதிகளில் இஸ்ரேல் மேற்கொண்ட படை நடவடிக்கை பலஸ்தீனர்கள் பலர் கொல்லப்பட்ட நிலையில் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது.

இதேவேளை ஆக்கிரமிக்கப்பட்ட மேற்குக் கரையின் ஹெப்ரோன் நகருக்கு அருகில் நேற்று வாகனம் ஒன்றின் மீது நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் மூன்று இஸ்ரேலிய பொலிஸார் கொல்லப்பட்டுள்ளனர்.

இத்னா டர்குமியா சந்தியில் இந்தத் தாக்குதல் இடம்பெற்றிருப்பதை உறுதி செய்திருக்கும் இஸ்ரேல் இராணுவம் தாக்குதல்தாரியை தேடிவருவதாக தெரிவித்துள்ளது. இந்தத் தாக்குதலை ஹமாஸ் அமைப்பு வரவேற்றபோதும் இதற்கு பொறுப்பேற்கவில்லை.

'காசாவில் இடம்பெறும் படுகொலை மற்றும் இனப்படுகொலைகளுக்கான இயற்கையான பதிலடியாக இது உள்ளது' என்று அது கூறியது.

'ஆயுதங்களை சுமந்திருக்கும் அனைவரும் காசாவில் எமது மக்கள் மீது தொடர்ந்து படுகொலைகளைச் செய்து வரும் ஆக்கிமிப்பாளர்களின் நெஞ்சில் துப்பாக்கி குண்டுகளை செலுத்தும்படி நாம் அழைப்பு விடுக்கிறோம்' என்று ஹமாஸ் அமைப்பு வெளியிட்ட அறிவிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



## பலஸ்தீனர்களுக்கான நன்கொடையை முடக்க இஸ்ரேல் கூகுளில் விளம்பரம்




பலஸ்தீன அகதிகளுக்கான ஐ.நா. நிறுவனத்திற்கு பயனர்கள் நன்கொடை வழங்குவதை முடக்கும் வகையில் இஸ்ரேல் அரசு 'கூகுள்' விளம்பரங்களை வாங்குவதாக அந்த அமைப்பு குற்றம்சாட்டியுள்ளது.

'நிறுவனத்தின் ஊழியர்களின் உயிருக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தி வரும் இஸ்ரேல் அதன் நற்பெயருக்கு தீங்கு விளைவிக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளது' என்று பலஸ்தீன அகதிகளுக்கான ஐ.நா. நிறுவனத்தின் ஆணையாளர் நாயகம் பிலிப்பே லசரினி 'எக்ஸ்' சமூகதளத்தில் குற்றம்சாட்டியுள்ளார்.

கூகுள் விளம்பரங்களை வாங்கும் இஸ்ரேல் அரசு, குறித்த ஐ.நா. நிறுவனத்திற்கு ஹமாஸ் அமைப்புடன் தொடர்பு இருப்பது போன்ற விளம்பரங்களை வெளியிட்டு வருவதாக தெரியவந்துள்ளது.

'பலஸ்தீன அகதிகளுக்கான ஐ.நா. நிறுவனத்தை அகற்றுவதற்கு பெரும் சக்திமிக்க பிரசாரம் ஒன்று முன்னெடுக்கப்படுகிறது' என்று அந்த நிறுவனத்தின் அமெரிக்காவின் நிறைவேற்றுப் பணிப்பாளர் மாரா கிரொனன்பீல்ட் குறிப்பிட்டுள்ளார்.

இஸ்ரேல் உருவாக்கப்பட்டதை அடுத்து அகதிகளாக்கப்பட்ட பலஸ்தீனர்களுக்கு உதவுவதற்கு 1949 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட பலஸ்தீன அகதிகளுக்கான அமைப்புக்கு எதிராக இஸ்ரேல் நீண்ட காலமாக பிரசாரம் செய்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## ஆறு பணயக்கைதிகள் சடலாக மீட்பு



காசாவில் பிடித்து வைக்கப்பட்டிருந்த ஆறு பணயக்கைதிகளின் சடலங்களை மீட்டதாக இஸ்ரேல் தெரிவித்துள்ளது.

தெற்கு காசாவின் ரபா நகரில் உள்ள நிலத்தடி சுரங்கப்பாதை ஒன்றில் இருந்து கடந்த சனிக்கிழமை (31) இந்த உடல்கள் மீட்கப்பட்டதாக இஸ்ரேல் பாதுகாப்புப் படை தெரிவித்துள்ளது. இந்தப் பணயக்கைதிகளை அடைவதற்கு முன்னர் இவர்கள் கொடியமுறையில் கொல்லப்பட்டிருப்பது ஆரம்பக்கட்ட ஆய்வில் இருந்து தெரியவருவதாக இஸ்ரேல் இராணுவப் பேச்சாளர் குறிப்பிட்டுள்ளார்.

மீட்கப்பட்ட சடலங்;களில் அமெரிக்க இஸ்ரேலியர் ஒருவரும் இருப்பதாக அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் தெரிவித்துள்ளார்.

இவர்களை கொன்றவர்களை நீதிக்கு முன் நிறுத்தும் வரை ஓயப்போவதில்லை என்று இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு குறிப்பிட்டுள்ளார். எனினும் நெதன்யாகு நாட்டு மக்களுக்கு முன் பணயக்கைதிகளை கைவிட்டதற்கான பொறுப்பை ஏற்க வேண்டும் என்று பணயக்கைதிகளை பிரதிநிதித்துவம் செய்யும் குழு ஒன்று குறிப்பிட்டுள்ளது.

கடந்த ஒக்டோபர் 7 ஆம் திகதி இஸ்ரேல் மீது தாக்குதல் நடத்திய பலஸ்தீன போராளிகள் சுமார் 250 பேரை பணயக்கைதிகளாக பிடித்தனர். தொடர்ந்தும் நூறுக்கும் அதிகமான பணயக்கைதிகள் உயிருடன் அல்லது மரணித்த நிலையில் பலஸ்தீன போராளிகளின் பிடியில் இருப்பதாக நம்பப்படுகிறது.

இவர்களை மீட்கும் பேச்சுவார்த்தை முன்னேற்றம் இன்றி காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2024 செப்டெம்பர் மாதம் 2ம் திகதி திங்கட்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.

இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசு
போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு
வீதி அபிவிருத்தி அதிகாரசபை

## விலைமனுக்கோரல்

| ஒப்பந்த இலக்கம் | ஒப்பந்தத்தின் பெயர் | பொறியியலாளர்களின் மதிப்பீட்டுத் தொகை (மேலதிக செலவுகளற்ற) ரூ.மில்லியன்) | ஒப்பந்த காலம் (நாட்கள்) | CIDA தரம் | மனுப் பாதுகாப்பு பிணைத் தொகை (ரூ). |
|---|---|---|---|---|---|
| RDA/RM&M/SAB/GOSL(WB)/2024/19 | பாணதுர - நம்பபான - இரத்தினபுரி வீதியில் (B 556) இல - 68/1 பாலத்தினை மீள்புனரமைத்தல் | 53.5 | 182 | C4 அல்லது அதற்கு மேல் பாலக் கட்டுமான நிபுணத்துவம் | 900,000.00 |
| RDA/RM&M/WP/GOSL(WB)/2024/24 | நீர்கொழும்பு - மீரிகம வீதியில் (B 324) இல - 18/1 பாலத்தினை மீள்புனரமைத்தல் | 29.0 | 182 | C4 அல்லது C5 பாலக் கட்டுமான நிபுணத்துவம் | 500,000.00 |
| RDA/RM&M/NP/GOSL(WB)/2024/25 | கட்டுவன் - மயிலிட்டி வீதியில் (B 171) இல - 4/1 பெட்டி பாலத்தினை மீள்புனரமைத்தல் | 33.5 | 273 | C4 அல்லது C5 பாலக் கட்டுமான நிபுணத்துவம் | 500,000.00 |

மேற்குறிப்பிடப்பட்ட ஒப்பந்தங்களுக்காக **தேசிய மனுக்கோரல் போட்டி முறையின்** கீழ் விலைமனுக்கள் கோரப்படுகின்றது. ஆர்வமுள்ள மனுதாரர்கள் **2024.09.02** ஆம் திகதி முதல் **2024.09.23** ஆம் திகதி வரை வீதி அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு இணையத்தளம் **www.rda.gov.lk** இனை பார்வையிடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**தலைவர்,**
**வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் கொள்முதல் குழு,**
**வீதி அபிவிருத்தி அதிகாரசபை.**

---

CSIAP THE WORLD BANK

# விலைமனுக்களுக்கான அழைப்பு

## இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு

**கமத்தொழில் மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு**

**காலநிலை ஸ்மார்ட் நீர்ப்பாசன விவசாய செயற்றிட்டம் (CSIAP)**

IDA Credit No: 6346 LK - P163742

**காட்டு விலங்குகளிடம் இருந்து பயிர்களுக்கு ஏற்படும் சேதங்களை குறைப்பதற்கு நகர்த்த முடியுமான பயிர் பாதுகாப்பு சூரிய சக்தி மின்சார வேலிகளின் நிறுவலுக்கான பொருட்களின் பெறுகை**

**ஊவா, வட மேல் மற்றும் வட மாகாணங்கள்**

1. கமத்தொழில் மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சின் காலநிலை ஸ்மார்ட் நீர்ப்பாசன விவசாய செயற்றிட்டத்தின் செலவுகளை நோக்கியதாக உலக வங்கி – சர்வதேச அபிவிருத்தி சம்மேளனத்திடம் (IDA) இருந்து இலங்கை சனநாயக சோசலிச குடியரசுக்கு கடன் ஒன்று கிடைக்கப்பெற்றிருப்பதோடு கீழுள்ள அட்டவணையில் தரப்பட்டுள்ள ஒப்பந்தங்களின் கீழான தகுதியுடைய கொடுப்பனவுகளுக்கு இந்தக் கடனின் பகுதியை செயற்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.
2. கீழுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்ட பெறுகைகளுக்காக பொருத்தமான மற்றும் தகுதியுடைய விலைமனுதாரர்களிடம் இருந்து கமத்தொழில் மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சு - காலநிலை ஸ்மார்ட் நீர்ப்பாசன விவசாய செயற்றிட்டத்தின் (CSIAP) சார்பில் திட்ட பெறுகைக் குழு, தலைவரினால் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| வ/இ | ஒப்பந்த இல. | பெறுகை விபரம் | மீளளிக்கப்படாத கட்டணம் | விலைமனு பிணை பெறுமதி மற்றும் செல்லுபடி திகதி |
|---|---|---|---|---|
| 01 | LK-MOA-445967-GO-RFB-PMU | காலநிலை ஸ்மார்ட் நீர்ப்பாசன விவசாய செயற்றிட்டத்தின் கீழ் ஊவா மாகாணம், மொனராகலை மாவட்டத்தில் காட்டு விலங்குகளிடம் இருந்து பயிர்களுக்கு ஏற்படும் சேதங்களை குறைப்பதற்கு நகர்த்த முடியுமான பயிர் பாதுகாப்பு சூரிய சக்தி மின்சார வேலிகளின் நிறுவலுக்கான பொருட்களின் பெறுகை | ரூபா 14,500.00 | ரூபா 930,000.00 2025 பெப்ரவரி 17 அன்று வரை |
| 02 | LK-MOA-445969-GO-RFB-PMU | CSIAP இன் கீழ் வட மேல் மாகாணம், குருநாகல் மாவட்டம் (கூறு 1) மற்றும் புத்தளம் மாவட்டத்தில் (கூறு 2) காட்டு விலங்குகளிடம் இருந்து பயிர்களுக்கு ஏற்படும் சேதங்களை குறைப்பதற்கு நகர்த்த முடியுமான பயிர் பாதுகாப்பு சூரிய சக்தி மின்சார வேலிகளின் நிறுவலுக்கான பொருட்களின் பெறுகை | ரூபா 19,000.00 | **கூறு 01** ரூபா 1,140,000.00 2025 பெப்ரவரி 17 அன்று வரை **கூறு 02** ரூபா 230,000.00 2025 பெப்ரவரி 17 அன்று வரை |
| 03 | LK-MOA-446098-GO-RFB-PMU | CSIAP இன் கீழ் வட மாகாணம், கிளிநொச்சி மாவட்டம் (கூறு 1) மற்றும் முல்லைத்தீவு மாவட்டத்தில் (கூறு 2) காட்டு விலங்குகளிடம் இருந்து பயிர்களுக்கு ஏற்படும் சேதங்களை குறைப்பதற்கு நகர்த்த முடியுமான பயிர் பாதுகாப்பு சூரிய சக்தி மின்சார வேலிகளின் நிறுவலுக்கான பொருட்களின் பெறுகை | ரூபா 18,000.00 | **கூறு 01** ரூபா 350,000.00 2025 பெப்ரவரி 17 அன்று வரை **கூறு 02** ரூபா 950,000.00 2025 பெப்ரவரி 17 அன்று வரை |

3. தேசிய போட்டிரீதியான விலைமனு (NCB) மூலம் விலைக்கேட்பு நடத்தப்படும்.
4. ஆர்வமுடைய விலைமனுதாரர்கள் 0112053167 என்ற தொலைநகல், 0112053252/0112871293 என்ற தொலைபேசி இலக்கத்தில் ராஜகிரிய, மதின்னகொட, எம்.டி.எச். ஜயவர்தன மாவத்தை, இல. 61/1, காலநிலை ஸ்மார்ட் நீர்ப்பாசன விவசாய செயற்றிட்ட - CSIAP, திட்ட முகாமைத்துவ பிரிவு, திட்ட பணிப்பாளரிடம் இருந்து மேலதிக விபரங்களை பெறலாம் என்பதோடு 2024 செப்டெம்பர் 02 ஆம் திகதி தொடக்கம் 2024 செப்டெம்பர் 23 ஆம் திகதி வரை மு.ப. 9.00 மணி தொடக்கம் 14.00 மணி வரை வேலை நாட்களில் அதே இடத்தில் கட்டணம் இன்றி விலைமனு ஆவணங்களை பரீட்சிக்க முடியும்.
5. ரொக்கப் பணத்தில் மாத்திரம் மீளளிக்கப்படாத கட்டணத்தை (தொகைக்காக மேலுள்ள அட்டவணையை பார்க்கவும்) செலுத்தி 2024 செப்டெம்பர் 02 ஆம் திகதி தொடக்கம் 2024 செப்டெம்பர் 23 ஆம் திகதி வரை மு.ப. 09.00 மணி தொடக்கம் 14 மணி (பி.ப. 2.00) வரை மேலுள்ள 4ஆவது உருப்படியில் குறிப்பிடப்பட்டிருக்கும் முகவரியில் திட்டப் பணிப்பாளருக்கு நிறுவன முகவரி அச்சிடப்பட்ட அசல் கடிதத் தாளில் எழுத்துமூல விண்ணப்பம் ஒன்றை சமர்ப்பித்து தகுதியுடைய விலைமனுதாரர்களால் ஆங்கில மொழியிலான விலைமனு ஆவணத்தை வாங்க முடியும்.
6. ஒப்பந்தம் வழங்குவதற்கான தகுதிக்கு, வெற்றிகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியானோர் பட்டியலில் இடம்பெறாதவராகவும் விலைமனு ஆவணத்தில் தேவையானவற்றை பூர்த்தி செய்தவராகவும் இருத்தல் வேண்டும்.
7. விலைமனுவுக்கு முந்திய சந்திப்பு மேலுள்ள உருப்படி 4 இல் குறிப்பிடப்பட்ட இடத்தில் 2024 செப்டெம்பர் 10 ஆம் திகதி மு.ப. 10.30 மணிக்கு இடம்பெறும். எதிர்பார்ப்புடைய விலைமனுதாரர்கள் இதில் பங்கேற்பதற்கு முன்னர் விபரக்குறிப்பு, ITB மற்றும் ஒப்பந்தத் தரவுடன் குறிப்பாக விலைமனு ஆவணத்தை நன்றாக அறிந்து கொள்ளும்படி கோரப்படுகின்றனர்.
8. விலைமனுவானது வெவ்வேறாக மேலுள்ள ஒவ்வொரு பெறுகை மற்றும் கூறுவிலையில் குறிப்பிடப்பட்ட பெறுமதி மற்றும் தரவுக்காக விலைமனு ஆவணத்தில் பரிந்துரைக்கப்பட்ட வடிவத்தில் நிபந்தனையற்ற விலைமனு உத்தரவாதம் ஒன்றை கொண்டிருத்தல் வேண்டும். குறிப்பிடப்பட்டவாறு செல்லுபடியான விலைமனு உத்தரவாதம் ஒன்று இல்லாத எந்த ஒரு விலைமனுவும் பதில் அளிக்காததாக கருதப்பட்டு எந்த விசாரணையும் இன்றி நிராகரிக்கப்படும்.
9. பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்களை 2024 செப்டெம்பர் 23 ஆம் திகதி 14.00 மணி (பி.ப. 2.00) அல்லது அதற்கு முன்னர் கிடைப்பதற்கு தலைவர், திட்டப் பெறுகைக் குழு, திட்ட முகாமைத்துவ பிரிவு, காலநிலை ஸ்மார்ட் நீர்ப்பாசன விவசாய செயற்றிட்டம், இல. 61/1, எம்.டி.எச். ஜயவர்தன மாவத்தை, மதின்னகொட, ராஜகிரிய என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புவது அல்லது இந்த நோக்கத்திற்காக வைக்கப்பட்டுள்ள விலைக்கேட்புப் பெட்டியில் இடுதல் வேண்டும்.
10. விலைமனுக்களை ஏற்பது 2024 செப்டெம்பர் 23 ஆம் திகதி 14:00 மணிக்கு (பி.ப. 2.00) நிறைவடைவதோடு அதன் பின் உடன் திறக்கப்படும். தாமதிக்கும் விலைமனுக்கள் ஏற்கப்படமாட்டாது. பங்கேற்க விரும்பும் விலைமனுதாரர்கள் அல்லது விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன் விலைமனுக்களை ஏற்கும் நேரம் முடிவுற்ற பின்னர் அவை உடன் திறக்கப்படும். அரச அறிவித்தல் காரணமாக மேல் குறிப்பிடப்பட்ட விலைமனுக்கள் ஏற்கும் திகதியில் அலுவலகம் மூடப்பட்டிருந்தால், உடன் அடுத்து வரும் வேலை நாளில் அதே நேரம் மற்றும் இடத்தில் விலைமனு மூடப்படுவதோடு பின்னர் திறக்கப்படும்.
11. திட்ட பெறுகைக் குழுவின் முடிவு இறுதியானது மற்றும் முடிவானதாகும். தனது சொந்த விருப்பில் ஒற்றை, எந்தவொரு அல்லது அனைத்து விலைமனுக்களையும் நிராகரிக்கும் அதிகாரம் திட்ட பெறுகைக் குழுவுக்கு உள்ளது.

**தலைவர்,**
**திட்ட பெறுகைக் குழு**
**திட்ட முகாமைத்துவ பிரிவு**
**காலநிலை ஸ்மார்ட் நீர்ப்பாசன விவசாய செயற்றிட்டம்,**
**இல. 61/1, எம்.டி.எச். ஜயவர்தன மாவத்தை, மதின்னகொட, ராஜகிரிய.**

திகதி – 2024-09-02

---

